474

ஆனந்த கீதங்கள்.

எங்களோடே கூடக் கர்த்தரை மகிமைப்
படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை
உயர்த்துவோமாக.
சங். 34: 3.

நீர் பாடும் போது என் உதடுகளும்
நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும்
கெம்பீரித்து மகிழும்.
சங். 71: 23.

பெத்தேல் சுவிசேஷ ஆச்சிரமம்
இடையன்குடி.

THIRD EDITION

அச்சாபீஸ், நாசரேத்.

REGISTRAR BOOKS
MAR 1943
QG: 417
N48
110634

"கர்த்தருக்கு ஸ்தோத்திரம்"

என்னுடைய 12-வது வயதிலே கடவுளைக் காணவேண்டுமென்று நினைத்தேன்; நேரிட்ட பல பிரதிகூலத்தினால் அவை முடியாமல் 19-வது வயதில் 1933-ம் வருஷத்தில் என்னைப் பாவத்தினின்று ரக்ஷித்த பாவநாசகராகிய இயேசுவைக் கண்டுபிடித்து, அவரது சமாதானம் பெற்று ஞானஸ்நானம் எடுத்து தேவ பிள்ளைகளோடு கூட 9 வருஷம் தேவ அழைப்பினால் ஊழியம் செய்து வந்தேன்.

இந்த நாட்களில் சபைகளுக்குள்ளே வேலை செய்ய வேண்டுமென்றும், என்னைப் போன்ற விதவைகளான சகோதரிமாரும் மெய்யான சமாதானம், சந்தோஷம் அனுபவிக்க வேண்டுமென்றும் விரும்பினேன், நான் விரும்பின பிரகாரம் அநேக நாட்களாய் கைகூடவில்லை. தேவ கிருபையால் 1944-ம் வருஷத்திலிருந்து இப்போது 4 வருஷமாக நானும் விதவையான இன்னொரு சகோதரியும் இந்தியாவிலும் இலங்கையிலுமாக பல பாகங்களில் சுவிசேஷ வேலை செய்து வரும்படி தேவன் கிருபையளித்திருக்கிறார்.

எங்களுடைய ஸ்தாபனமான பெத்தேல் சுவிசேஷ ஆச்சிரமத்தை 1945-ம் வருஷம் அக்ரோபர் மாதம் 24-ம் தேதி இடையன்குடியில் ஸ்தாபித்து, அதிலிருந்து சுவிசேஷ வேலை செய்து வருகிறோம். இதில் கிறிஸ்துவின் ஆறுதலையும், ரக்ஷிப்பையும் விரும்பி தேவனுக்கென்று ஜீவிக்க விரும்பும் சகோதரிமாரும், விதவைகளும், பிள்ளைகளும் சேரலாம்.

TAMILNADU ARCHIVES

சர்வ வல்லமையுள்ள யேகோவாதாமே இவ்வூழியத்தை ஆசீர்வதிப்பாராக. எங்களுக்காகவும், தேவனுடைய ஊழியத்திற்காகவும், தேவனுடைய பிள்ளைகள் யாவரும் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்கிறோம். கர்த்தர் தாமே நம் யாவரையும் அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துவாராக.

"அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும் நான் வெட்கப்படுவதில்லே. எனென்றால் நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறரென்று நிச்சயித்துமிருக்கிறேன். 2 தீமோ. 1: 12.

சங். 40: 1—3
சங். 27: 3, 4.
ஏசா. 28: 16.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் ஊழியாள்,
ஜெயவடிவு அம்மாள்,
பெத்தேல் சுவிசேஷ ஆச்சிரமம்,
இடையன்குடி.



அட்டவணை

அஞ்சலலோடு நெஞ்சுருகி 176
அதிகாலையில் விழித் 100
அருணோதயம் எழுந்திடு 77
அருமை ரக்ஷகரே உம் 164
அருள் நிறை வள்ளல் 49
அல்லேலூயா அல்லேலூயா 153
அல்லேலூயா மங்களம் 42
அல்லேலூயா-- பாடிடுவோம் 102
அல்லேலூயா-அல்லேலூயாவே 103
அற்புதம் அற்புதம் யேசுஎனக்கு 150
அல்லேலூயா ஆ! ஆ! ஆமென் 152
அனுதினம் தொழுதேற்ற 101
அன்பனே மகா அன்பனே 82
அன்பரின் நேசரே உம் 94
அன்பின் முரசு அகிலத்தில் 2
அன்பே அன்பே அன்பே 50
ஆ! ஆ! ஆனந்தமே 39
ஆகா! பூலோக வாழ்வநித்யம் 167
ஆதிபரன் யேசுவைப் பார் 99
ஆனியும் அந்தமு மில்லாத 185
ஆத்ம நாதன் திருவடியே 174
ஆத்மா ஒன்றும் ரக்ஷிக்காமல் 147
ஆம்! நானங்கிருப்பேன் 200
ஆயுள் முழுவதும் போற்று 104
ஆரிவராரோகாவினில் 106
ஆண்டவனே உம்து எண் 178
ஆனந்தமே பரமானந்தமே 3
ஆனந்தமாய் வானவன் 4
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே 5
ஆனந்தங் கொண்டு அகமகிழ் வுடனே 105
ஆனந்தங் கொண்டு அகமகிழ் வேன் 107
ஆஹா! அதிசயம் பாரும் 6
இம்மானுவேலின் ரத்தத்தால் 81
இயேசு என் அஸ்திபாரம் 92
இயேசு ரட்சகர் சிலுவை 7
இயேசுவைப் போல சகாயஞ் 179
இயேசுவே என் மேய்ப்பர் 196
இயேசுவின் நிந்தையைச் 209
இயேசு நாமம் ஜெயம் 136
இரட்சிப்பின் ஆனந்த 109
இரட்சிப்பை உயர்த்திக் 137
இரத்தத்தால் ஜெயம் 197
இராவும் பகலும் நின் 108
இலோக இன்பம் யாதும் 80
இன்னும் சந்தேகிப்பேனே? 58
இஸ்ரவேலின் சேனைகட்கு 95
ஈயுமையா உம்மேலான 8
உமதுண்மை மகா பெரியது 207
உம்மை நம்பினோர் மாண்ட திலலே 64
உருகாயோ நெஞ்சமே நீ 202
உலகமும் சதமென்று 110

உன்னத வீட்டை சீக்கிரம்	10
உன்தேவனே சந்திக்க நீ	9
எத்தருணத்தில் உயிர்	113
எங்கேதேடுவேன் நான்	159
எந்தன் யேசு உன்னதத்	90
எந்தன் பூமானைக்காண	75
எந்தன் ஆத்ம நேசர்	14
எந்த நாளும் என் ஏசுவின்	169
எந்நாளுமே துதிப்பேன்	112
எப்போதும் ஏசுநாதா	89
எப்போதுமே இன்ப வாழ்வே	195
எவனுடைய மீறுதல் மன்	210
எழுந்து வாரும் ஐயனே	12
எழுந்திடுவீர் நீர் வாலிபரே	111
எழும்பு சீயோனே யேசு	13
என் ஆத்மாவே என்முழு	98
என்மீட்பர் உயிரோடி	172
என்மேலுள்ள நின் சர்வ	54
என் யேசுவே உம்மையே நான்	181
என்ன அற்ப்புத பொக்கிஷம்	151
என்ன என் ஆனந்தம் என்ன	16
என்ன சந்தோஷம் என்ன	15
என்ன சிங்காரமையா	55
என்ன சொல்லுவேன்	43
என்னதான் பதில் செய்	11
என் ஜீவியத்திற்கு நேர்பாதை	194
என்னே ஆசீர்வதியும் தேவா	162
ஏசு சீக்கிரம் வரப்போகிறார்	17
ஏராளமாய் ஈவுகளே	18
ஏழையை மீட்ட ஏசுவே	212
ஏனே தேடுறீர்கள் தேடுறீர்கள்	52
ஐயரே நீர் தங்கும்	193
ஒருபோதும் மறவாத	40
ஓ! யேசுவே யென்னை மூட	114
கண்ணுக்குக் காணும்	20
கருணையின் தேவா கதி	171
காப்பார் உன்னைக் காப்பார்	65
காண் ஓலே தோன்றவே	88
கிருபை காலம் ஓடியே	115
கிருபை புரிந்தாளும் இந்த	116
கிருபை வேண்டும் நாதா	19
கீதம் பாடியே பாதையில்	79
குருசின்மேல் குருசின்மேல்	170
கோடா கோடி ஸ்தோத்திரம்	21
சத்திய சுவிசேஷம் மிகு	22
சத்தியமும் ஜீவனுமாய்	163
சாலேமின் நகரதிபதி வரு	117
சிலுவை சுமந்தே எகினூர்	73
சிலுவையின் கோர காட்சி	118
சீக்கிரம் புறப்படுவோம்	66
சீக்கிரத்தில் மேசியா	156
சீயோன் பிரயாணிகளே	161
சீயோன் மலையதிலே சிங்	59
சீயோன் மலையின் மேலே	189
சுத்தர் துதிக்கும் வீடே	201
செல்வேன் செல்வேன்	148

தந்தையும் நீர் என்தாய் 93
தாகத்தை தீருமையா 74
தாசரே இத்தரணியை 119
தாசர் போற்றும் நேசா 120
திரியேக நாதா வந்திடுமே 121
திவ்ய எக்காள சத்தம் 183
துதிகனம் மகிமை யுமக்கே 154
துதி செய், துதி செய், துதி செய் 69
துதிப்பேன் ஏசுவின் பாதம் 78
துதிப்போம் துதிப்போம் 23
தேவ ஆசனத்தின் முன்ன 123
தேவாரீருக்கே மிக ஸ்தோத் 122
தேவனே நான் உமதண்டை 41
தேவனே என் இருதயம் 215
தேவாதி தேவனின் தானங் 85
தேவாதி தேவனே மகத்வா 66
தேவா ஜீவனுள்ளோர் தேடும் 57
தொழுகிறேம் எங்கள் பிதாவே 206
தொண்டு செய்வேன் என்றும் 203
தோட்டக்காரனே திராட்ச 166
தோத்திரம் பாடிப் போற்று 211
நடப்போம் வாரீர் நாமே 35
நம்பவேண்டாம் நம்பவேண் 124
நம்பிவந்தேன் திருவடியே 61
நான் செய்த பாதகம் எப்படி 47
நான் ப்ரமித்து நின்று 126
நான் ஜீவ பயணம் போகி 125
நீ உயிர் பெற நான் 127
நேச இயேசு சுவாமி 128
நேற்றும், இன்றும், என்றும் 149
பரமராஜன் தங்கும் 24
பரலோக நாடெந்தன் 25
பரலோக ராஜ ராஜனிதோ 180
பழைய புதிய ஏற்பாடு 165
பரனடி பரிவுடன் 158
பரிசுத்தர் கூட்டம் 71
பரிசுத்தர் பரிசுத்தரே 184
பாசமாக பாவி உன்னை 51
பாவ சஞ்சலத்தை நீக்க 129
பாவத்தின் பலன் நரகம் 70
பாவி ஓடிவா—பாவி ஓடி 130
பாவியே நீ போகும்போது 68
பிரதான தூதன் தொனிக்க 131
பிரிய யேசுவின் சேனை 26
பூண்டார் சிரசில் முள்ளால் 44
பூவினில் வந்த விண் தேனே 83
பேயின் கோட்டைகளை 182
போற்றுவோமே புகழ் 208
போற்றுவோம் யேசுவுக்கே 27
மகிழ்வோம் யேசுவில் மகிழ் 97
மனுடவதாரா பவ வினை தீரா 175
மாட்சிமிகும் மோட்ச 132
மெய்யல்லோ கர்த்தர் 133
மேகமீதில் ஏசு சுவாமி 29
மேகமீது தூதரோடிதோ 188
மேசியா இவ்வேளையில் 28

மேலோக ராஜன் வருங்	191	வாராயோ பாவி வாராயோ	31
மோட்சம் செல்லும் யாத்	143	வாருமே ஏசு பாதம் சேருமே	198
மோட்சம் போகப்	134	வாரும் வாரும் மகத்வ	32
யாரிவர், யாரிவர், யாரிவர்	36	வாரும் வாரும் வரம்தாரும்	84
யுத்தர் கொடியை யுயர்த்தி	37	வா வா நேசா மலர் சுவி	140
யுத்த வர்க்கம் அணிந்து	53	வா வா பாவி வா	141
யேசு கொடுத்தாரே	149	வா வா ஜெகதீசா	160
யேசு நடந்த பாதை	48	வாழ்த்து கிறேன் யேசு	1
யேசு நாதனைப் போற்றிடுவோம்	63	வானிலோர் திருநாள்	213
யேசு நான் நிற்கும் கன்மலையே	45	விழித் தெழுந்திடு திருச்	142
யேசு போதும் எனக் கேசு	76	வீரதீரமாய் நேரும் சீரு	86
யேசு ராஜன் வருவார்	30	வேதபுத்தகமே, வேதபுத்	187
யேசு வண்டை சேரவும்	173	வையகத்தினை நடுத்தீர்ப்பு	33
யேசுவின் பின்னலே	135	ஜீவ கிரீடம் சூடும் நேரம்	144
யேசுவின் முகம் என்று	177	ஜீவ ஒளியிற் போகிறேன்	34
யேசுவின் ராஜ்யம்	204	ஜீவ வசனம் கூறுவோம்	38
யேசுவே கருணைகூர் நின்	60	ஜீவ பாதையில் வீசும்	192
யேசுவே நானும்முடன்	46	ஜெகமதில் உதித்த ஜெய	214
யேசென்னும் நாமம்	62	ஜெபத்தின் ஆவியைத்	72
வந்தாளும் யேசுவே வாரு	138	ஜெபத்தைக் கேட்கும்	168
வரவேணுமே வல்ல ஆவியே	67	ஜெயம் ஜெயம் அல்லேலூயா	186
வாவேண்டும் பரஞ்சுவியே	205	ஸ்தோத்திரம் ஏசு நாதா	91
வருகிறாரே வானபரன்	139	ஸ்தோத்திரம்——ஏசுநாதா	145
வருகிறார் காந்தையை	157	ஸ்தோத்திரம் துதிபாத்திரா	96
வல்ல பராபா மா நல்ல	190	ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே	87
வாங்க சிறந்த புஸ்தகம்	199		

சத்திய அச்சாபீஸ், நாசரேத்; Q. H. Tny 57; 5–2–48. Cs. 1000.

ஆனந்த கீதங்கள்.

காலை தியானம்.

1

பல்லவி.

வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி வாழ்த்துகிறேன் இக்காலையிலே

அனுபல்லவி.

அற்புதமாய் இரா முழுதும் அடியேனைக் காத்தீரே— வாழ்

1 உமது செட்டை நிழலதிலே படுத்திருந்தேன் இராமுழுதும்
உமது கரம் அணைத்திடவே ஆறுதலாம் நித்திரையும்— வாழ்

2 நித்திரையை இன்பமாக்கி பத்திரமாய் இருதயத்தை
சுத்தமான இரத்தத்திற்குள் சுத்தமாக வைத்திருந்தீர்— வாழ்

3 பலவிதமாம் சோதனைகள் எமைச் சூழ வந்திருந்தும்
ஒன்றும் எம்ம அணுகாமல் அன்புடனே பாதுகாத்தீர்— வாழ்

4 சந்திப்பீரே இக்காலை தனில் தந்திடவே திருவரங்கள்
சந்தோஷமாய் இப்பகல் முழுதும் ஆவிக்குள் யான்பிழைக்க— வாழ்

5 தந்திடுவீர் அபிஷேகம் புதிதாக இப்புதுநாளில்
கடந்திடுவீர் ஆவியினால் உமது திருச் சித்தமதில்— வாழ்

6 பாவமொன்றும் அணுகிடாமல் பரிசுத்தமாய் பாதை செல்ல
தேவையான சர்வாயுதங்கள் தாரும் ஜெப ஆவியுடன்— வாழ்

7 படைக்கிறேன் என் இருதயத்தைப் பலிபீடத்தில் முற்றுமாக
கண்களுடன் செவியோடு வாயும் கை காலுமாக— வாழ்

8 செய்வேன் யான் எப்போதும் உம்சித்தமே ஆசையுடன்
ஒழித்திடுவேன் வீண்வார்த்தை, பேசிடுவேன் உம்வாக்கை— வாழ்

9 எனைக் காண்போர் உமைக்காண உம்சாயல் எனில்வேண்டும்
தந்திடுவீர் தாழ்மையையும் பொறுமையுடன் அன்புமாக— வாழ்

10 நேசரேயும் திருவருகை இந்நாளில் இருந்திடினும்
ஆசையுடன் சந்திக்கவே ஆயத்தமாய் வைத்துக்கொள்ளும்— வாழ்

2 பல்லவி

அன்பின் முரசு அகிலத்தில் கேட்கிற முழக்கம்
ஆண்டவர் சிலுவை நேசரால்

1 மாண்ட இருதயங்களுக்குள் ஜீவனே வைத்தார்
மாந்தரின் நம்பிக்கையை மகிழச் செய்தார்
அற்புதத்தை அகிலத்தில் அறிவித்தார்
அறையுண்ட சிலுவை நேசர் தாமே— அன்பின்

2 சிலுவையில் சிரேசு ஜீவனே விட்டார்
சஞ்சலங்களினின்றும் விடுதலை ஈந்தார்
அன்பின் பாத்திரத்தை யேசு அளித்தார்
அறையுண்ட சிலுவை நேசர் தாமே— அன்பின்

3 கபோதி கட்குக் கண்களைக் கொடுத்தார்
காலில்லாத ஊனர்க்குக் காலை ஈந்தார்
காட்சியைக் கர்த்தர் யேசு காட்டினார்
கடாவப்பட்ட சிலுவை நேசர் தாமே— அன்பின்

4 தூக்க மயக்கங் கொண்ட சுத்த சோம்பேறியை
சும்மா ஜீவியத்தைப் போக்கும் சுகஜீவியை
சுத்தர் இயேசு கர்த்தர் முற்றும் களைத்தார்
சுதன் சுவிசேஷ சிலுவை நேசர் தாமே— அன்பின்

5 அன்பாகவே அழைக்கிறார் அனைவரையும்
அலையும் அசடர்கட்கு வழியையும்
காசினியோர் கண்டு வாசிக்கவும்
கடாட்சித்தார் சிலுவை நேசர்தாமே— அன்பின்

---

3 பல்லவி

ஆனந்தமே பரமானந்தமே—இயேசு
அண்ணலே அண்டினோர்க் கானந்தமே.

சரணங்கள்

1 இந்தப்புவி ஒரு சொந்தமல்லவென்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே

இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும்— ஆனந்

2 கர்த்தாவே நீர் எந்தன் காருண்யக் கோட்டையே
காரணமின்றிக் கலங்கேனே யான்
விஸ்வாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே— ஆனந்

3 என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்க்
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெயகீதம் பாடி மகிழ்ந்திடலாம்— ஆனந்

4 கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ
கைவேலையில்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச்சொல்லிப் போகலையோ— ஆனந்

5 துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லிமுடியாத ஆறுதல் கிருபையைத்
தன்பத்தினூடே அனுப்பிடுவார்— ஆனந்

6 இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேன்
என் நேசர் தன்முக ஜோதியதேயல்லால்
இன்பம்தரும் பொருள் ஏதுமில்லை— ஆனந்

---

4. பல்லவி

ஆனந்தமாய் வானவன் பாதம் பாடி மகிழ்வோம்—அனைவரும்
தானங்களே தந்த நல் யேசுநாதனைப் புகழ்வோம்

சரணங்கள்

1 அன்புடன் பணிவோம்—அன்பரை
கன்மலையைக் கனிவுடனே நினைந்து பாடிடுவோம்
நன்னயமாய் நவ வரங்கள் நமக்கருளியதால்— துதித்து

2 கரங்களை விரித்து—சுத்த
நரரூபம் ஆனவனே நண்பருக்கிரங்கி
ரவேணும் ஆசைகளை மைந்தர் மகிழவே— துதித்து

3 நித்திய மகிமை—விண்ணிலே
புத்திரர்க்குப் புதுமையாக புண்ணியனருளி
நித்தமுமே முத்தியிலே பத்தரை அணைப்பார்— துதித்து

4 என்ன மகிமையே—இன்பமே
அன்னை தந்தை யாவரிலும் அரிய.வின்பமதே
உன்னதனே உமதடியே உணர்ந்து பாடிடுவோம்—துதித்து

5 கர்த்தனைப் புகழ—கருணை
சக்தியுள்ள நாவிருந்தால் எத்தனை மகிமை
அத்தனுமை அனுதினமும் பாடுவதினிமை— துதித்து

6 உப்பரிகையிலே—சாலேமின்
தற்பரனின் சாயலுடன் நின்றிலங்கிடுவோம்
முத்துக்களின் வாசமதில் சுற்றி எகிடுவோம்— துதித்து

5

1 ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே—அதி
சந்தோஷமே இது சந்தோஷமே
தந்தை தமையோரும் சொந்த மானோர்களும்
தந்திடாத பரமானந்தமே— ஆனந்

2 எப்போதும் சந்தோஷம் சந்தோஷமே—இது
ஒப்பில்லாத பரமானந்தமே
அந்நியர்களையும் ஏகமாலேரையும்
ஒன்றாகச் சேர்க்கின்ற தானந்தமே— ஆனந்

3 கிறிஸ்துவின் ரத்தத்தால் மீட்டெடுத்த—மக்கள்
ஆனந்தங் கொண்டிங்கு பாடுகிறார்
இப்பூவிலுள்ளதை ஒப்பிடிலொவ்வாத
ஆனந்தங் கொண்டவர் பாடுகிறார்— ஆனந்

4 இப்பூவிலானந்தம் இவ்விதமுண்டெனில்
சொர்க்கத்தின் ஆனந்தம் சொல்லலாமோ
என் ஆத்துமாவே நீ காண்வாயே வேகத்தில்
ஆனந்தக் கூட்டத்தை மோட்சத்திலே— ஆனந்

5 மண்ணுன சரீரம் மாறிடும் நேரத்தில்
விண் சரீரம் நமக் கீந்திடுவார்
சற்று நேரமின்னும் தாமதித்திடுகில்
பொன் னேசரை முத்தம் செய்திடலாம்— ஆனந்

6 இப்போது காணுமல் நேசிப்பதென்றாலும்
சீக்கிரம் சென்று நீ கண்டிடுவாய்
அப்போதென் நேசரின் காயங்களும் கண்டு
ஒவ்வொன்றாய் முத்தங்கள் செய்திடலாம் — ஆனந்

6

1 ஆஹா! அதிசயம் பாரும் தேவனின் செயலைக் கேளும்
ஆ! ஆ! என் நாவினாலே திரு அன்பைக் கூற வொண்ணுதே

2 பாவத்திலே நான் மாள திரு வெண்ணமா யிராமல்
தேவா என் சாயல் பூண்டு, என் சாபம் தீர்த்ததாலே — ஆஹா!

3 பெற்ற பிதாவினாலும் முயலாப் பேரின்பமளித்தார்
பூலோகத்தி லெனக்கவரே, மற்றோரிலு மிகுந்தவரே — ஆஹா!

4 மரணம் தானென்மேல் வரினும் திருவன்பினால் நானஞ்சேன்
என் ஆத்ம நாதரின் மார்பில் அதிவேகமாய் நான்சேர்வேன்—ஆஹா!

பல்லவி

7

இயேசு ரட்சகர் சிலுவை எனக்கென்றுமாறுதலளிக்கும்
எந்தனே யெடுத்த — பந்தனே ஜெயித்த— என்

1 வருத்தத் தோடுபாரஞ்சுமப்போர் வருவீரே என்று அவருரைத்தார்
வலியபாபமோ, கொடிய ரோகமோ,
வருவீர் தருவீ ரிருதய மென்று சைத்த— இயேசு

2 கடின இருதயம் மாறும் மனக்கவலையாவுமே தீரும்
கனவினிலேவோ மனதி னெண்ணமோ,
கருவோடறுப்பேன் முடிவோ டென்றுரைத்த— இயேசு

3 மோசேயின் சர்ப்பமுயர்ந்ததுபோல் குருசினி லேசுவுயர்ந்தாரே
ஜனத்தை இழுக்க பாவத்தை யெடுக்க
இரட்சிப்பும் மீட்பும் தந்திடுவே னென்றுரைத்த— இயேசு

4 குத்தின சேவகனன்று குருதியும் ஜலத்தையும் கண்டு
மரித்தாரென்றுமே சாட்சியும் கூறினன்
மனதில் தினமும் குருதியை நினைத்திட— இயேசு

5 அன்புள்ள என் நேசர் அவனியில் வந்து உயிர் விடுக்க
அடியேன் பாவமோ அத்தனின் சித்தமோ
அன்பே இன்பே அல்லேலூயா பாடிடுவேன்— இயேசு

8

1 ஈயுமையா உம்மேலான அன்பெனக்கு— ஈயுமையா
உள்ளமுருகுதே ஆவியிளகுதே
தேவா நீர் பாராட்டும் மேலான அன்பாலே— ஈயுமையா

2 வாரேனையா கல்வாரியின் அன்பைக் கண்டு — வாரேனையா
ஐயா அறிந்திலேன் வழியும் தெரிந்திலேன்
தேவா நானேழை உம்பாதம் பின் வாறேன் நான்— ஈயுமையா

3 வைக்கிறேன் ஐயா என் ஜீவனைப் பலியாக — வைக்கிறேன் ஐயா
உலகமழியுதே அன்பு குறையுதே
தேவா உமக்காய் ஜனத்தை நான் காணேனே— ஈயுமையா

4 தாரேனையா எந்தன் ஆவியாத்மா சரீரம் — தாரேனையா
ஐயா நீரேற்றிடும் தூய்யா கண்ணோக்கிடும்
பரனே உம்மன்பை இப்பேதைக்கே ஈந்திடும்— ஈயுமையா

5 போகிறுரையா நரக பாதையில் ஜனம் — போகிறுரையா
பாவம் பெருகுதே உலக முயருதே
தேவா உம்மன்பை நாருக்குக்கூறவே— ஈயுமையா

6 இல்லை யென்றீர் உம்மன்புக்குத் தீமை யொன்றும் — இல்லையென்றீர்
சகலமும் தாங்குமே சகலமும் சகிக்குமே
தேவா உம்மன்பை என் உள்ளம் கவருதே— ஈயுமையா

9

பல்லவி

உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?

1 பூவில் யேசு வரும்போது பொல்லா ரோடிடுவார்
அந்த வீதம் நீ யிருந்தால் என்ன செய்திடுவாய்?— உன்

2 மேகங்களுடன் வருவேன் என்று சொன்னவர்
இப்போ மேகந்தனில் வரும் நேரம் கிட்டிச் சேருதே— உன்

3 தேவதூதரோடும் பெரும் எக்காளத்தோடும்
தம்பக்தரை சந்திக்கும் நேரம் கிட்டிச் சேருதே— உன்

4 அவபக்தர் அக்காலத்தில் அழுதிடுவார்
அவர் வரும்போது ரட்சிப் படையமாட்டார்— உன்

5 பாவங்களில் ஜீவிப்பவர் பதுங்கிடுவார்
பரிசுத்தமாக்கப்பட்டோர் பறந்திடுவார்— உன்

6 இரக்கமுள்ள இந்த நாளில் மனந்திரும்பு
இந்நிமிஷம் ஏற்றுக்கொள்ளும் மன்னிப்புப்பெற— உன்

7 உனக்காய் மரித்தயேசு காத்து நிற்கிறார்
யேசு உன்னைப் பட்சமாக ஏற்றுக்கொள்ளுவார்— உன்

8 பரனே ஏற்றுக்கொள்ளாதோர் அந்த நாளிலே
பதுங்கி நித்தியமாகப் பரிதபிப்பார்— உன்

10

1 உன்னத வீட்டைச் சீக்கிரம் சென்று அன்பரைச் சேர்ந்திடுவேன்
யேசு ரட்சகர் ஏழையின் வாஞ்சை யாவையும் தீர்த்து விட்டார்

2 தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடிட தேவனைப் போற்றிடுவேன்
கமழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில் இன்பமாய் அயர்ந்திடுவேன்

3 வானோர்கள் பல பல ஊழியம் செய்ய ஏழையும் சேர்ந்து கொள்வேன்
என் யேசுவின் துதியை நாவினால் பாடி நேசரால் அகமகிழ்வேன்

4 பளிங்கு நதியின் ஓரங்களில் நான் ஓடியுலாவிடுவேன்
பொன் வீதியில் நானும் அன்பருடனே கவியுடன் அடியெடுப்பேன்

5 மிதமிஞ்சி சோதனை எதிரிட்டு வந்தாலும் ஒன்றுக்கும் அஞ்சமாட்டே
சிங்கம் புதரினின்றேகியே எதிர்க்கினும் அதனையும் ஜெயித்திடு
[வேன்டுன்

6 பறவைகள் அதிகம் விருட்சங்கள் அதிகம் நானும் அங்கே உண்டு
பராபரன் தாமே எனக்காக சேர்த்த பொருட்களும் மெத்த உண்டு

7 பேதுரு யோவான் பவுலும் கூட அங்கே ஓய்ந்திருப்பார்
என் யேசுவின் வீட்டில் மகா பெரும் இன்பம் ஆ, ஆ, ஆனந்தமே

8 ஆறுநாள் உலகை அழகாய்ப் படைத்து எழினில் ஓய்ந்திருந்தார்
ஆறுவேன் தேறுவேன் ஆர்ப்பரிப்புடனே அன்பரிலகமகிழ்வேன்

---

11 பல்லவி

என்னதான் பதில் செய்வேன் கண்டிடும் வேளை
அன்னையே பதில் கூறும் செய்வேனிவ் வேளை

1 எண்ணெண்ணப் பாவத்தால் உம்மை வாதித்தேனையோ
மன்னித்தீர் என்னையும் மாதய வதாகவே— என்

2 அண்டினேன் பாதமே ஆண்டு கொள்ளுவீரே
நன்றியால் பொங்குதுள்ளம் என்ன பதில் செய்வேன்— என்

3 நானிலம் தன்னிலே நிந்தையாகினுலுமே
நாதனே நான் விடேன் நசரேயன் பாதமே— என்

4 எதுக்கும் உதவா எகலித்த எழையான்
எற்றீரோ என்னையும் சேர்த்தீரோ மந்தையில்— என்

5 இன்னிசை கேட்டாலும் இன்பமுண்டோ பாவியில்
விண்ணெனைச் சேர்க்கவுயிர் சிலுவையில் விடுத்தீர்— என்

6 கன்னத்தறையையும் கனமான குரூசையும்
அன்பாலோ சகித்தீர் அன்பனே, அன்பனே— என்

---

12 பல்லவி

எழுந்து வாரும் ஐயனே — நசரேயன் யேசுவே
எழுந்து வாரும் ஐயனே

1 விண்ணவர் போற்றவே மண்ணவர் பாடவே
மாட்சிமை யேசுவைச் சொல்லிக்கொண்டாடவே— எழு

2 விஸ்வாசக் கேடகம் கையில் தந்திடவே
பண்டையர் அடைந்த வெற்றிகள் தந்திட— எழு

3 எலியாவின் ஆவியை எல்லோர்க்கும் ஈந்துமே
பெலமான ஆவியை நிறைவாக ஈந்திட— எழு

4 ஜெபத்தினால் வல்லமை விமலா நீர் கண்டிட
ஓயாத ஜெப சிந்தை எல்லோர்க்கும் ஈந்திட— எழு

5 மாட்சிமை, மாட்சிமை, மாட்சிமை என்றுமே
மகுடா அபிஷேகம் பெற்றவரை போற்ற— எழு

6 தீவெட்டியிலெண்ணெய் ஊற்றுகப் பாய்ந்திட
அட்ட பக்கமெல்லாம் பற்றியே எரிந்திட— எழு

7 வெளிச்சத்தின் காட்சிகள் கண்களில் பட்டுமே
திறவாத கண்களும் திறந்துமே பார்த்திட— எழு

---

13 பல்லவி

எழும்பு சீயோனே யேசு இதோ வருகிறார்—வேகம்

1 இயேசுவின் வருகை மிகச் சமீபமாகுதே—இனி
மோசந்தான் அசதியாக ஜீவித்து வந்தால்—பின்பு
அலறிடுவாயே யேசு கைவிடும்போது— வேகம்

2 பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே—நீயும்
மேலோகம் பார்த்துப் பார்த்து லோகத்தை வெறு—இது
மாயலோகமே உன்னை மோசம் போக்குமே— வேகம்

3 பாரங்கள் இருதயத்தில் எதேனுமுண்டோ?—சிறு
பாரங்கள் உன்னைக் கீழே தள்ளிவிடுமே—உந்தன்
இருதயத்தை நீ பரிசுத்தமாக் காயோ— வேகம்

4 லௌகீகக் கவலையோடு பெருந்தீனியும்—வேறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே—உன்னை
மோசம் போக்குமே உந்தன் ஆசை அழியுமே— வேகம்

5 மேகத்தில் யேசு ராஜன் வேகம் வரவே—பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறுரூபமாய்—அன்று
மேக மேறிட நீயும் ஆயத்தந்தானே— வேகம்

6 ஆகாயத்தில் நடக்கும் கலியாணத்திலே—சுத்தர்
பாடுவார் அல்லேலூயா செட்டை அடித்து—அப்போ
அங்கிருப்பாயோ? பூவில் ஓடி ஒளிப்பாயோ— வேகம்

7 அந்திக்கிறிஸ்து அரசாட்சிசெய்யும் வேளையில்—கோர
ஆக்கினை பூமியில் சொரியும் வேளையில்—நீயும்
அகப்படாமலே இன்று தப்பிக்கொள்வாயோ— வேகம்

---

14 பல்லவி

எந்தன் ஆத்ம நேசர் எங்கே
அவர் எங்கே—அவர் எங்கே
அவர் எங்கே, எங்கே, எங்கே, எங்கே— எந்தன்

1 நகரத்தின் தெருவீதி சென்று
நான் கலமுடன் தேடினேன் நின்று
ஐயோ தேடியும் காணுமல் இன்று
மூகம் வாடி மயங்குகிறேன் நின்று— எந்தன்

2 காட்டு மரங்களில் தானும்
நல்ல கிச்சிலிமரம் போலத் தோணும்
நல்ல குமாரருக்குள்ளே இவர் தானும்
குடியிருப்பது போலவே தோணும்— எந்தன்

3 பதினாயிரம் பேரில் சிறந்தோர்
அதி வெண்மை சிவப்பு நிறமானோர்
தலை பொன்மயமாய் விளங்கிடுமே
மயிர் சுருள் சுருளாயிருப்பவரே— எந்தன்

4 லீபனோன் போலவர் ரூபம்
மிக மதுரமவர் வாயின் வசனம்
லீலி புஷ்பங்கள் போன்ற அவரு தட்டில்
நின்று வாசனை வெள்ளைப்போளம் வடியும்— எந்தன்

5 இடதுகை என் தலைகீழ் வைத்து
அவர் வலது கையாலரவணைத்து
என்னை மனதாய் அணைத்துக் கொள்வதாலே
நான் சோகமடைவேன் நேசத்தாலே— எந்தன்

15

பல்லவி.

என்ன சந்தோஷம் என்ன சந்தோஷம்
என்ன சந்தோஷம் என்ன சந்தோஷம்
மணவாட்டியின் பாட்டைக் கேட்டால்
என்ன சந்தோஷமே

1 என்ன இவ்விண்ணேதமே அண்டி வந்து பாருமே
அண்ணலுக் குகந்ததோர் கன்னிகையின் ரூபமே
மின்னல் போல் இலங்கிடுதே விண்ணிலழகுடனே— என்ன

2 மன்னரோடு மகிழுவோம் மனையிலேறி வாழுவோம்
கன்னியர்கள் யாவரும் காதலனைக் காணுவோம்
அன்னையோடு அனந்த காலம் அழிவில்லாதிருப்போம்— என்ன

3 பெருகுதே பேரின்பமே பேதை கட்கு இன்றுமே
பேருலகில் யாவுமே வீணதாகத் தோணுமே
வேறுலகில் உண்டிடமக்கு என்ன பேரின்பமே— என்ன

4 ஆஹா! இது அதிசயம் அளவில்லாத பரவசம்
சாவில்லாத நித்தியம் நாமுமர சாளுவோம்
பாவ மணுகாதபரன் சாயலணிந்திடுவோம்— என்ன

16

1 என்ன என் ஆனந்தம் என்ன என் பேரின்பம்
தூதரோடு சேர்ந்து நானும் அன்பரைப் பாடிடுவேன்

2 இலோக ஜீவனே புல்லுக்கு ஒப்பானதே
வாடிப்போகும் பூவைப்போல மாண்டு போகுமே— என்

3 இத்திரை யாத்திரையே முற்றிலும் போராட்டமே
மண்ணில் வெற்றி சிறந்தோர்க்கு நித்திய மகிமையே— என்

4 வீணை சப்தமும் தம்பூரு முழக்கமும்
கர்த்தாவின் சத்தம் கேட்டு நானும் மகிழ்ந்து பூரிப்பேன்— என்

5 என் நேசர் மார்பிலே நான் சாயும் நேரத்தில்
என்ன இன்பம் என்ன மதுரம் சொல்லரியதே— என்

6 இப்பாழுலகத்தில் என் ஆசை ஒன்றுண்டோ
பஞ்சு போல் பறந்து போமே பாழுலகமே— என்

17

1 ஏசு சீக்கிரம் வரப் போகிறார் (வெளி 22:7,12)
மாசில்லாதோர் ஆகாயத்தில் மறைந்தே போவார் (1தெச. 4:17)

2 கிரியைகளுக்கோ கிரீடங்களே (வெளி 22:12)
மரியின் மைந்தனுக்கோ மகுடமாமே (வெளி 19:12)

3 அடக்கமா யோடினோர்க் கழியா கிரீடம் (1 கொ. 9:25)
ஜீவனைக் கொடுத்தவர்க்கு ஜீவகிரீடம் (வெளி. 2:10)

4 ஆத்துமா தாயஞ் செய்தோருக்கு ஆனந்த கிரீடம் (1 கொ. 2:19)
மந்தை மேய்த்தவர்களுக்கோ மகிமை கிரீடம் (1 பே. 5:4)

5 பிரசன்னத்தை வாஞ்சிப்போருக்கு நீதியின் கிரீடம் (1 தீ. 4:8)
பின்னுல் விடப்படுவோர்க்கு நித்திய தண்டனை (யோ. 5:29)

6 அன்று போன யேசு இன்று வந்தாலோ (ஆமோ. 4:12)
நன்று யென்று ஒன்று மின்றி எகிடுவாயோ (வெளி. 22:20)

7 அவரை ரட்சகராய் ஏற்றுக்கொண்டாலோ
அல்லேலூயா பாடிக்கொண்டே எகிடுவாயே

18

பல்லவி.

ஏராளமாய் ஈவுகளை தாராளமாய் ஈந்தாரே
இன்பமாகத் துன்பங்களை ஏற்றுச் சுமந்தாரே

1 பரிசேயர் சதுசேயர் யூதர்களுங்கூடியே
பார்த்தார்களே பலமுறை அற்புதங்களையுமே— ஏராள

2 என்று மில்லாப் பலியொன்று நன்முக நடந்ததே
நன்று செய்த நிரர்பலி அதொன்றையே காட்டினதே— ஏராள

3 இயேசுவின் அன்புக்கொத்த இணை எதுமில்லையே
மாசுவின்றியாக்கிடுவார் மாந்தரின் தொல்லையையே— ஏராள

4 தாயின் மிக்க பாசமும் வாயினின்றும் வந்ததே
பேயினின் காவியங்களை நாவினுல் நசுக்கினுரே— ஏராள

5 பாவியே நீ ஓடி வந்து தாவியே பிடித்துக் கொள்
பூவினின் வாழ்க்கையை விட்டு ஆவியின் அனல நாடு— ஏராள

6 ஆவி ஆத்துமா சரீரத்தை ஆண்டவர்க் களித்திடு
மேவிய வரங்களோ கிட்டும் மேலோகத்தை நாடினால்— ஏராள

7 அல்லேலூயா பாடிக்கொண்டு அகமகிழ்ந் தாடிடு
நல்லோரை எடுக்குங் காலம் வல்லமையாய் வருதே— ஏராள

---

19 பல்லவி.

கிருபை வேண்டும் நாதா இயேசுவே உம் திவ்ய
கிருபை வேண்டும் நாதா—இவ்வாராதனையில்

1 உம் கிருபை தான் வேண்டும் சொர்லோக இராஜாவே
உம் கிருபை யல்லாது எங்களால் ஆகாது— கிருபை

2 ஏழு பிசாசுகள் ஓட்டியே இயேசுவே
மரியாளே நேசித்து அன்பால் நிரப்பிய— கிருபை

3 இருவராம் சீஷரின் சஞ்சலங்கள் நீக்கி
இருதயம் குளிர்ந்திட இனிமையாய்ப் பேசின— கிருபை

4 பாவத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
பாவியாம் ஸ்திரீக்கு நேசமாய்க் கூறின— கிருபை

5 பெந்தேகோஸ்தின் நாளில் அன்பராம் சீஷர் மேல்
உந்தன் வரங்களோ மாரி போல் பொழிந்த— கிருபை

6 தாசனும் ஸ்தேவானின் சாயலே மாற்றின
நேசமாம் கிருபையை எம் மேலும் ஊற்றிடும்— கிருபை

7 வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசா
தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட— கிருபை

8 அடியாராம் ஏழை யுள் உம்மைச் சந்தித்திட
முடிவு வரைக்குமே காத்திடும் கிருபையால்— கிருபை

20

1 கண்ணுக்குக் காணும் பூவுமல்ல—இந்த
மண்ணில் முளைத்தோங்கும் பூவுமல்ல—இந்த
மாந்தர்கள் அணியும் பூவுமல்ல அது—அன்பு

2 ஜாதி விலகி வரும் தோஷமல்ல—அது
சாத்தானுல் உண்டாகும் தோஷமல்ல—அது
மக்களால் உண்டாகும் தோஷமல்ல அது—சந்தோஷம்

3 சாஸ்திரத்தில் சொல்லும் தானமல்ல—அது
சண்டையில் முந்திடும் தானமல்ல—மிக
சலிப்புடனே செய்யும் தானமல்ல அது—சமாதானம்

4 காகிதத்தில் எழுதும் மையுமல்ல—அது
கண்ணுக்கழகிடும் மையுமல்ல—இந்த
மாந்தரை மயக்கும் மையுமல்ல அது—பொறுமை

5 தாமர்கள் செய்திடும் தருமமல்ல இந்த
தரணியோர் புகழும் தருமமல்ல—உடன்
தமயர்கள் புரிந்திடும் தருமமல்ல—உடன் தரும் தயவு

6 நல்வினை பயப்பது குணமன்று
மிக நல்லோராய் நடிப்பது குணமன்று
மிக நன்மயம் வருவது குணமன்று அது—நற்குணம்

7 பூக்களில் எழும்பும் வாசமல்ல—இது
பன்னீரால் உண்டாகும் வாசமல்ல—இது
பாவையர் தெளித்திடும் வாசமல்ல அது—விசுவாசம்

8 சம்பனன் உள்ளோன் சாத்மீகனே—நல்ல
சடங்கை ஆசரிப்போன் சாத்மீகனே—நல்ல
சாயல் நிறந்தோன் சாத்மீகனே அது—நவில் சாந்தம்

9 அகலிடம் வசிப்பது அடக்கமல்ல—பின்பும்
அகலவே தொழுவதும் அடக்கமல்ல
பிறர் குறைகளை மறைப்பது அடக்கமல்ல அது—இச்சையடக்கம்

10 ஆவியின் கனிகளோ ஒன்பதாம்
அதன் கருணை பலன் இங்கு ஜொலிப்பதாம்
அதை ஆசிப் போர்களின் மனங்களிப்பதாம் நிலை நிற்பதாம்

---

21 பல்லவி.

கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி
கிறிஸ்துவின் அன்பை ருசிப்போமே

அனுபல்லவி.

சேற்றிலிருந்து தூக்கி எடுத்துத்
தேற்றி அணைத்துக் காத்துக்கொண்டாரே தேவசுதன்

1 பாவியை மீட்கப் பரன் சித்தங்கொண்டார்
பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
பரமனிவ் வேழையைத் தேடி வந்தாரோ
பாதம் பணிந்தேன் பதில் ஏது முண்டோ—பூவுலகில்

2 தேவனின் சித்தம் செய்யும் படியாய்
தாசனின் கோலம் தாமெடுத்தணிந்து
தற்பரன் நொறுக்கச் சித்தங் கொண்டாலும்
தம்மைப் பலியாப்த் தத்தம் செய்தாரே—எந்தனுக்காய்

3 ஆடுகளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
கேடு வராது காக்கும் நல் மேய்ப்பர்
இன்று மென்மேலே வைத்த நேசத்தால்
என்றென்றுமே நன்றி கூறித் துதிப்பே—ன்இறையவனை

4 தாவீது கோத்திர சிங்கமாய் வந்தும்
சாந்தத்தால் என்னைக் கவர்ந்து கொண்டாரே
தாழ்மையான ஆட்டுக்குட்டியுடனே
தங்கியிருப்பேன் சீயோன் மலையில்—நித்தியமாய்

5 குயவனின் கையில் களிமண்ணைப் போல
குருவே நீர் என்னை உருவாக்குமையா
மாசற்ற மணவாட்டியாய் என்னைக்
காத்துக் கொள்ளும்படி கருணை கூர் ஐயா—எழையென்னை

22

பல்லவி.

சத்திய சுவிசேஷம் மிகு நேசமே—நீ
இத்தனை உணர் வில்லாதது மோசமே

அனுபல்லவி.

உலகிருள் நீக்கிடும் உயர் வழியே—அது
பல கவலைப் போக்கும் திருவழியே—

சரணங்கள்.

1 மாய இருள் வழி நோக்கிடாதே—நீ
மனம் போன உன் நிலை அலைந்திடாதே,
மாசற்ற தூயர் உனக்காகவே—மிகு
மனமிரங்கி இப்புவி வந்தாரே— சுத்

2 வஞ்சனையான இலோகமிதே—இது
வஞ்சிக்குமே உன்னைத் தந்திரமாய்
வாதனை யடையுமுன் வந்திடுவாய்—நீ
வல்லவர் மீட்பரின் நேசரண்டை— சுத்

3 எத்தனை காலம் நீ இருந்திட்டாலும்—தீய
இந்தவுலகுனக் கென்னதரும்?
நித்திய நிலமையை எண்ணிவிட்டால்—நீ
அசித்திய மாயையைத் தள்ளுவாயே— சுத்

4 இரட்சிப்புக் கேற்ற ஞானமவர்—நின்
இரட்சகராம் ஏசு தேவனவர்
பட்சமாய் துன்பங்கள் நீக்குபவர்—உனை
பரிசுத்த லோகத்தில் சேர்ப்பதவர்— சுத்

5 "ஐயோ! ஐயோ! என்றலறிட்டாலும்—உனக்
காரும் உதவியில்லாக் காலம் வரும்
அலகையிருள் உனைக் கலங்கடிக்கும்—நீ
அவதிக் குள்ளாகும் போதென்ன செய்வாய்— சுத்

6 இந்நாளே அசட்டையாய் எண்ணிடாதே—நீ
"இனி மேலென்று" போக்குச் சொல்லிடாதே
இந்த இரவுனக்குச் சொந்தமுண்டோ—பாவி
இப்போதே நீ மனந்திரும்பிடுவாய்— சுத்

23

பல்லவி.

துதிப்போம் துதிப்போம் சபையோரே—இந்த
இரட்சிப்பைத் தந்த ஏசுவையே

அனுபல்லவி.

நம் வாழ்நாளில் இதுவே கொண்டாட்டம்—பூவில்
எங்கும் கிடையாப் பெரும் பாக்கியம்—பாடி

1 சுத்தப் பரிசுத்தரவரே—எங்கும்
சுத்தமாய் நிற்கும் மெய்ப் பொருளே
தூயதாம் தூதர் பாடிப்போற்ற—அவர்
துதிக்குள்ளே வாசஞ் செய்வதாலே—பரி— துதி

2 புறஜாதி யாகவே ஜீவித்தோம் — முன்பு
முறைமீனமாகக் கெட்டுப் போனோம்
திறமாக ஏசு வந்துதித்து — தம்
திரு இரத்தம் சிந்தி உயிர்தந்தார் — பரி— துதி

3 எரிகோவின் கோட்டை விழுந்ததே — இந்த
துதியாகும் ஆயுதமதினால்
ஆஹா! போற்றிக் களித்துத் துதிப்போமே — தீய
சாத்தானின் கோட்டைகள் விழவே — பரி— துதி

4 ஆறு இருபதாசாரியர் — துதி
செய்தார் சாலோமோன் ஆலயத்தில்
தேவன் மகிமையாய் வந்திறங்கினாரே — இன்றும்
மகிமையாய் மத்தியில் வாரவே — பரி— துதி

5 இரண்டாம் வருகையும் சமீபம் — பல
ஆண்டாக எச்சரித்தும் வாரார்
ஆண்டாம் இதிலே ஏசு வந்தால் — நாம்
ஆயத்தமாக இருக்கவே — பரி— துதி

---

24 பல்லவி

பரமராஜன் தங்கும் மகிமை — பரலோக தூதர்
பாத சேவை செய்யும் மாளிகை

அனுபல்லவி.

பாரினிலே பார்க்கொணாத பண்புடனிலங்கிடுதே
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்றுரலியே— பர

சரணங்கள்

1 சாவு பசி துக்கமேயில்லை— அம்மாளிகையில்
வாழுவோரில் வஞ்சனையில்லை
நாதரேசின் சேவை செய்தோர் நானிலத்தின் இன்பம் அற்றோர்
ஆனந்தமாய் ஆர்ப்பரிப்பார் அன்பர் முகம் கண்டிடுவார்— பரம

2 பக்தர் பரன் சாயலணிந்து— மகிழ்ந்து பாடி
நற் சுதனின் பின்னே நடந்து
பொன் மயமாய் விளங்கிடும் பொற்தளமாம் வீதிதனில்
போற்றி யேற்றி ஆர்ப்பரிப்போம் பொன்னின் முடி நாம் தரித்து

3 சுற்றிவரச் சிங்காசனங்கள்— சுதந்தரரின்
சாற்ற வொண்ணாச் சொர்க்க இன்பங்கள்
ஜோதி லோகம் சேர்ந்திடலாம். ஜோதிமயமாகிடலாம்
ஜெயகீதம் பாடிடலாம். ஜெயம் பெற்றோர் எகிடலாம்— பரம

4 ஜீவநதி ஓடும் நாடது— இரவுபகல்
இரண்டும் மொன்றாய் தோன்றிடமங்கு
இருளில்லா இன்ப நாடு அருளொளி வீசுமங்கு
இன்பலோகம் இன்பலோகம் இன்னலில்லா இன்பமது— பரம

5 முத்து வாசல் பன்னிரண்டங்கே — பிரபையுள்ள
இரத்தினப் பொன் மண்டபங்களே
யேசுநாதர் ஜோதியல்லால் வேறிலங்கும் ஏது மில்லை
நாமெல்லாரும் ஆர்ப்பரிப்போம் அல்லேலூயா அல்லேலூயா— பரம

25

பல்லவி.

பரலோக நாடெந்தன் இன்ப நாடா மெனக்கு
என்று நான் கண்டு களிப்பேனே,

அனுபல்லவி.

ஆ மகிமையே ஆ பேரின்பமே
என்று நான் கண்டானந்திப்பேனே— பரலோக

1 சேவை செய்திடுவார் துதர்கள்— நானங்கு
சேவிப்பேன் நித்தியம் நேசரை
ஆ என் இன்பமே ஆனந்த பாக்கியமே
நாவினுலியம்பவு மேலாதே— பரலோக

2 சொர்க்கத்தில் ஆ எந்தன் நம்பிக்கை அழியாத
சொர்ண மயமான வேஷங்கள்
சோபனக் கீதமே சுந்தர நாடதே
சுத்தமோருமித்து வாழ்வரே— பரலோக

3 தெய்வ சித்தம் செய்யும் பிள்ளைகள்— ஜீவிப்பர்
மாதா பிதா மற்றும் சோதரர்
உத்தம ஜீவிகள் சொர்க்கத்தின் வாசிகள்
கஷ்டம் சகித்திட்ட சுத்தர்கள்— பரலோக

4 ஏசுவே என் சம்பத்தல்லவோ — நிச்சயம்
என்று மழியா சுதந்தரம்
ஈலோக இன்பத்தை குப்பை யென்றெண்ணினேன்
ஏசுவே எந்தனின் இன்பமே— பரலோக

5 வெறுத்திடுவேன் எந்தன் ஜீவனை— லோகத்தில்
செல்லுவேன் கஷ்டத்தின் பாதையில்
மாயை மாயையே லோகத்தின் இன்பமே
வாடா முடிசூட எகுவேன்— பரலோக

---

26 பல்லவி.

பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் நாம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்
சிலுவை தோளில் சுமந்து போகலாம்
சேனை வீரர்கள் நாம் —சேனை வீரர்கள் நாம்

1 நம் தேவன் சமாதான பிரபுவே
நம் சர்வாயுதவர்க்கம் தாழ்மை தானே
நம் ஆத்ம சகாயர் அவரே
சேனை வீரர்கள் நாம் — சேனை வீரர்கள் நாம்— பிரிய

2 எப்போதும் ஏசுவை தியானிப்போம்
எல்லோரும் ஜீவியத்தைத் தியாகம் செய்வோம்
ஏசுவின் மகா அன்புக்காய் தத்தம் செய்வோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம் — பிரிய

3 ஏசு கிறிஸ்துவின் அன்புக்காய் இறந்திடுவோம்
புல் பூண்டுமேயானலும் புசித்திடுவோம்
முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம்— பிரிய

4 உலக நேசத்தின் ஊற்றை உடைத்துவிட்டோம்
உள்ள மாயைகளை யெல்லாம் ஒளித்துவிட்டோம்
உள்ளத்தை யெல்லாம் உடையவர்க் கொதுக்கிவிட்டோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம்— பிரிய

5 இதொன்றே ரட்சண்ய வழியென்றுணர்ந்தோம்
இதை இருதயத்திலிறுக இணைத்து விட்டோம்
ஒன்றுயிர் வாழ்வோம் இன்றே உயிர் விடுவோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம்— பிரிய

6 சாத்தான் கோட்டைகளை யெல்லாம் தகர்த்திடுவோம்
தக்க சமயத்தில் சத்தியத்தைச் சாற்றிடுவோம்
சற்றும் தயங்காமல் சாட்சியைத் தந்திடுவோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம்— பிரிய

7 அல்லேலூயா ஜெயத்தை அறிவித்திடுவோம்
அவர் வருகையைப் பற்றி யுரைத்திடுவோம்
அந்தகார ஆதிக்கங்களை அவமாக்குவோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்— பிரிய

27

போற்றுவோம்! இயேசுவுக்கே துதி சாற்றுவோம்—சரணம்

1 ஏற்ற இத்தருணம் ஊற்றுவோம் இதயம்
தேற்றிடற்கு ஏற்ற நாதனை ஏற்றியே புகழ்வோம்— போ

2 கருணைரப்பரமா காதலெம்மில் கொண்டோ
தாரணியில் தாசனாக தாழ்மையானீரோ— போ

3 புறஜாதியானுரைப் புறம்பாக்க எண்ணுதே
உறவாடுவதற்கு உன்னதத்தில் உரிமையீந்தீரே — போ

4 ஆசீர்வாதங்கள் ஆசையோடெம்மில்
கூசிடாமல் ஈசனீந்த நேசமுணர்ந்து — போ

5 பறக்கும் அம்புகள் எமை வதைத்திடாமலே
உறங்கிடாது ஊக்கமுடன் உகந்தணைத்தாரே— போ

6 ஆவியின் அருளீந்து சாவி நமைச் சேர்ந்து
பாவிகளெமை அன்பிலொன்றாய் ஆகு மருளீந்தார்— போ

---

28 பல்லவி

மேசியா இவ்வேளையில் வருவாய்— பாசமாயிவ்வு

1 மேசியாக் கலிலேயா ஊரில்
கதிர் போலுதித்த படியே வருவாய் — மேசி

2 நீர் மேலேக நாலாம் ஜாமம்
கேபா கண்டபடியே வருவாய்— மேசி

3 பைசோன் ஆற்றுப் பிதோலாகம் போல்
பனியாப் பெய்த, மன்னபோல் வருவாய்— மேசி

4 பாதமே கூடும் பாவையர் எமக்கு
பரிசுத்த ஆவியின் பெருமழை சொரிய— மேசி

5 நேச பொற்பாதம், நீடுழி வாழ்க
நின் மலர் பதந்தனே நேயர்கள் தழுவ— மேசி

6 அன்பால் நிறைந்த இன்ப மணாளா
மண்பால் எம்மை மகிழச் செய்வாயே— மேசி

---

29 பல்லவி

மேக மீதில் ஏசு சுவாமி
வேகம் வாராரே

அனுபல்லவி

ஆயத்த முள்ளோரை ஆகாயஞ் சேர்க்க
அவரே வாராரே— மேக

1 ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப்போடே
அவனியில் வாராரே
மீண்டவரோ மேலோகமே செல்ல
மேதினியை விடுவார்— மேக

2 கிறிஸ்துவுக்குள் மரித்தோரெல்லாம்
கிளம்பியே எழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரி சுத்தரெல்லாம்
மறைந்தே போவாரே— மேக

3 பாடு பட்டோர்க்குப் பலனளிப்பாரே
பாடு பட்டவர் தாமே
கூடும் நமக்கோ குறைவில்லாப் பலனையே
கூவியே கொடுத்திடுவார்— மேக

4 அவருரைத்த அடையாளங்களெல்லாம்
தவறுமல் நடக்கின்றதே
அவர் வரும் வேளையை எவருமறியார்
ஆண்டவரே யறிவார்— மேக

5 ஆயிர வருஷம் ஆளுகை செய்வார்
ஆண்டவர் ஏசு தாமே
நீதி சமாதானம் நிறைந்தேயிருக்கும்
ஜோதியின் ஆளுகையில்— மேக

6 அல்லேலூயா கீதமே பாடி
அகமகிழ்ந் தாடிடுவோம்
வல்லவர் வரும் வேளையுமிதோ
மெல்லவே நெருங்கிற்றே— மேக

30

1 யேசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார்
பக்தரை வானத்தில் சேர்த்திடவே—நான்
ஜோதியாய் அவர் முகம் கண்டிடுவேன்—பின்னும்
ஜெயகம்பீரம் கொண்டுளம் பொங்கிடுமே— யேசு

2 மண வாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய் கவி சாற்றிடுமே—அப்போ
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம்—அவர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம்— யேசு

3 மூத்திரைமிட்ட சுத்தர்கள் வெள்ளை யங்கிதரித்து
கர்த்தர் சமுகத்தில் நின்றிடுவார்—அதில்
சேர்ந்திடுவேன் நானும் பாடிடுவேன்—அன்று
பொற் கிரீடம் தரித்தாடுவேன்— யேசு

4 காதலித்தேன் நான்! காசினியின் இன்பம் விட்டு
கர்த்தரோடென்று முறவாடிட—அங்கு
கனக மணவறை ஜொலித்திடுமே—அப்போ
கர்த்தராம் யேசுவில் சுகிப்போமே— யேசு

5 வானத்தில் எக்காளம் தொனித்திடும் சமயத்தில்
சுத்தர்கள் யாவரும் பறந்திடுவார்—அப்போ
அத்தனின் கலியாண விருந்திலே—நாமும்
நித்தம் அவரோடார்ப் பரிப்போமே— யேசு

31

பல்லவி

வாராயோ பாவி வாராயோ நீ
என்னிடமாக வாராயோ இப்போ— வாராயோ

அனுபல்லவி.

தீராயோக்கலி தீராயோ உந்தன்
தீவினையாவும் தீராயோ— வாராயோ

1 சிலுவை மரத்தில் ஜீவன் வைத்தேன்
சீரடைய உனை அழைத்தேன்
சிந்தின ரத்தத்தால் உந்தனை மீட்டேன்
சிந்தனை இன்றியே எந்தனிடமாக— வாராயோ

2 உந்தன் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும்
உந்தன் நீதிகள் கந்தை போன்றிருந்தாலும்
பாவக்கரை போய் கந்தை துணி போய்
புத்ர பாக்கியமடைய பாத்திரனாக— வாராயோ

3 ஜீவன் கொடுத்து திரும்ப எடுத்து
தீரனாக தீவிரமாய்
தேவலோகம் போன என்னை
தேவ மகிமையில் காண்பதற்கு— வாராயோ

---

32 பல்லவி.

வாரும் வாரும் மகத்துவ தேவனே
வல்லமையாக இப்போ வந்திடும்

1 மகிமைச் சொரூபனே மாவல்ல தேவனே
மன்னு வந்தாசீர்வாதம் தாருமே— வாரும்

2 தாய்தந்தை நீர்தானே தற்பரா எங்கட்கு
தாணியில் வேறூர் துணை இல்லையே— வாரும்

3 பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கும்
பரிசுத்த ராஜனே நீர் வாருமே— வாரும்

4 பக்தரும் முக்தரும் பாடித் துதிக்கின்ற
பரலோக ராஜனே நீர் வாருமே— வாரும்

5 காருண்ய தேவனே கதியும்மை யண்டினேம்
கடைசி வரையும் காத்து ரட்சியும்— வாரும்

6 மன்னு நின் வரவை எண்ணியாம் ஜீவிக்க
எவுதல் தினம் தாரும் ஏகனே— வாரும்

7 விழிப்புள்ள ஜீவியம் விமலானீர் ஈந்துமே
வெற்றி யடையக் கிருபை தாருமே— வாரும்

8 இவ்வித பாக்கியம் ஏழைகளெங்கட்கு
ஈந்ததாலுமக் கென்றும் ஸ்தோத்திரம்— வாரும்

---

33 பல்லவி.

வையகந்தனை நடுத்தீர்ப்புச் செய்யவே
வல்லவர் வருகிறார் பக்தர்களோடு

அனுபல்லவி.

வான அதரோடு அக்கினி மயமாய்
வான மண்டலங்களும் கிடுகிடென்றசைய

1 பாவத்தில் ஜீவித்தோர் பதைத்திடுவாரே
பக்தர் களெல்லோரும் களித்திடுவாரே
இச்சணம் யேசுவின் பாதத்தை நாடு
இனிமேல் வருவது நித்திய கேடு— வையகந்

2 இராஜாதி ராஜனுய் வருகிறாரேசு
இராஜ்ஜியம் வகிப்பாரே பாவிகளின்றி
பூலோக வாசிகள் புலம்பிடுவீரே
புண்ணியரின் ராஜ்யம் இன்னமுறக்கே தேடு— வையகந்

3 நியாய தினமதில் இரக்கமில்லையே
இராப் பகல் பாவத்தில் ஜீவிக்கும் ஜனமே
பாவத்தை விட்டுவிடு இரக்க நாளிதிலே
பரனேசுவோடு சிறக்க நாளதிலே— வையகந்

4 பேயுலகமிது போயொழிந்திடுமே
பேய் பிசாசு களெல்லாம் தானடுங்கிடுமே
இப்போதே பேயுடை சிநேகம் விட்டிடுமே
எசுவின் பாதத்தையே தாவி நாடிடுமே— வையகந்

5 அல்லேலூயாப் பாடும் பக்தர்களன்று
ஆர்ப்பரித்திடுவார் ஆண்டவர் சமூகம்
அத்தொனி கேட்டு உன்மனம் வாதித்திடுமே
ஆண்டவரும் மீட்கக் கதிவேறு இல்லையே— வையகந்

34

1 ஜீவ ஒளியிற் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் நடந்த பாதையில்
போகிறேன் நான் போகிறேன்

பல்லவி.

ஓர் வெண்ணங்கி, ஓர் பொன்முடி,
ஓர் வாத்தியம் ஓர் மேல் வீடு
ஓர் ஜெயக்கொடி, ஓயா இன்பம்,
எனக்குண்டு சொர்க்கத்தில்:

யேசு என் ரட்சகர், பாவந் தீர்த்தார்,
கல் வாரி மலையிலென் கடன் தீர்த்தார்,
அவரன்பின் நான் மூழ்கி,
என்றும் பாடுவேன், வாழுவேன்
ஜீவ ஊற்றில் வாழுவேன்

2 பாவிகள் நடுவில் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் பின் சென்றால் ஜெயமுண்டு
போகிறேன் நான் போகிறேன்— ஓர்

3 வீண் பக்திக்காரர் நகைத்தாலும்
போகிறேன் நான் போகிறேன்
பூரண அன்பு பயம் நீக்கும்
போகிறேன் நான் போகிறேன்— ஓர்

4 சிலுவைக் கொடியுடன் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பரின் நேசத்தைக் காட்ட நான்
போகிறேன் நான் போகிறேன்— ஓர்

5 பரிசுத்த ஆவியால் நிறைந்து
போகிறேன் நான் போகிறேன்
ஸ்வர்க்கம் போகு மட்டும் நிலைத்து
போகிறேன் நான் போகிறேன்— ஓர்

---

35 பல்லவி.

நடப்போம் வாரீர் நாமே விரைவாய்
நாதனேசு சென்ற பாதை மகிழ்வாய்
எடுப்போம் எண்ணெயுடனே தீவட்டியும்
தொடுப்போம் பாதரட்சையா மாயத்தமே

1 இதோ ஏசு ராஜன் வருகை எக்காளமே
எங்கும் தொனிக்குது தீர்க்கரின் சத்தமே
இதோ இது என்ன புதுமை யென்றெண்ணுமல்
எழுந்திடு வீரே உம் எக்காளம் ஊதியே— நடப்

2 நித்திரை மயக்கத்தால் செத்தவர் போலிருக்கும்
மித்துரு பந்துக்கள் சகோதரர் எல்லாரையும்
இத்தரையினதிபன் ஏசு ராஜனிதோ
பக்தரை அழைக்க வருகிறானென் றுரைப்போம்— நடப்

3 கூவிடுவீரே நீர் வீதிதனில் எகியே
கூன் குருடு முடம் செவிடு எல்லோரையும்
ஆவிடை வந்த பாலன் ஏசுமகிபன்
அழைக்கிறார் அன்புடன் விருந்தினுக் கென்றுமே— நடப்

4 வஸ்தி ராஜஸ்திரி வணங்காக் கழுத்துள்ளாள்
வருந்தியழைத்தும் வரமாட்டேன் என்றிட்டாள்
அஸ்திபாரக் கிறிஸ்தில் அழகாய் இணைக்க
எஸ்தர் ராணியாய் நீர் வருவீர் என்றுரைக்க— நடப்

5 ஜீவன் சுகம் செல்வம் யாவையும் வெறுத்து
தேவராஜன் சமூகம் நீரமாய் அடுத்து
வேண்டுதல் என்னவென வினவும் நேரத்து
வேதா என் ஜனத்தை விடுவியும் என்றுரைத்து— நடப்

6 பாதாரட்சைகளிட்ட பாதங்கள் நேர்த்தியே
பர்வத மெங்கும் உன் அழகு கீர்த்தியே
பக்கத்தில் அமர்ந்திடப் பாத்திர மொருத்தியே
பரவசமடைந்து நாம் பாடுவோம் பூர்த்தியே— நடப்

36

பல்லவி

யாரிவர் யாரிவர் யாரிவர் யாரிவர்
பாதிராவினில் அன்னைமரியிடம் வந்து பிறந்தவர்—யாரிவர்

அனுபல்லவி

மூன்றி இருந்தவர் பின்தி வந்தவர் மூத்தொழில் செய்தவர்
மூன்று சாஸ்திரிமார்கள் வந்து தொழுத பேரிலொருவராம்

1 வானலோகம் யாவையும் உண்டு பண்ணின வல்லவர்
ஈனநரர் வேடம் பூண்டு இவ்வுலகில் மனுவானவர்

2 சேற்றில் மாழும் பாவி என்னை ரத்தத்தினால் மீட்டவர்
எந்தன் பாவ சாபமெல்லாம் கழுவியே தூலைத்தவர்

3 துன்பத்திலும் துக்கத்திலும் ஆறுதலாய் இருப்பவர்
கண்ணீர் யாவும் துடைத்து நீக்கும் தேறுதலுமானவர்

4 பாருலகை விட்டு வந்த அன்பின் நேசராம் இவர்
ஐந்து காயம் முட்கிரீடம் எந்தனுக்காய் சகித்தவர்

5 தந்தை தாயும் கைவிட்டாலும் அணைத்துக் காக்கும் நேசராம்
அலைந்து திரியும் பாவிகளைக் கூட்டிச் சேர்க்கும் வல்லவர்

6 மாறிடாத சந்தோஷத்தை எழை எனக்கு கொடுத்தவர்
மோட்சம் சேரும் பாதைகளைத் திறந்து விட்ட வல்லவர்

37

யுத்தக் கொடியை யுயர்த்தி வேகமாய் செல்வோம்
ரத்தம் சிந்தி யுத்தம் செய்த ஏசுவை சொல்வோம்
ஓ ! எல்லா ஜனக் கூட்டத்தாரும் மீட்கப்பட்டிட
ரட்சை சக்தியை நாம் உள்ளிலூட்டுவோம்

பல்லவி

அல்லேலூயா சங்கீதம் படுவோம்
ஆர்ப்பரிப்போடே இயேசுவைக் கூறுவோம்
ஓ ! பாதாளக் கோபுரங்கள் உடைத்த ஏசுவின்
பக்கம் நின்றவரின் யுத்தம் செய்குவோம்

1 சுவிசேஷ எச்காளத்தை ஆர்ப்பரிப்புடன்
எரிகோவின் கோட்டையை நாம் சுற்றி ஊதுவோம்
ஓ ! ஏழெக்காளத் தொனி கேட்கும் நாள் நெருங்குது
அய ஏசுவை நாம் உயர்த்திடுவோம்

2 சோர்ந்திடலாமோ யுத்தத்தில் பின்னிடலாமோ
சோரநாயகன் மாய்கையில் சார்ந்திடலாமோ
ஓ ! பாரமான யாவற்றையும் தள்ளி ஓடுவோம்
பார்த்திபன் ஏசு நம்முடன் செல்கிறார்— அல்லேலூயா

3 அக்கினி ஸ்தம்பமுமேக ஸ்தம்பமுமாக
அன்பிநாதன் நம்முன்வரும் ஆரவாரம் பார்
இத்தனையும் பார்த்துவிட்டு எங்கும் ஓடாதே
ஏசு நாதனிடம் வா பாவி

4 ஆதி தொடுத் தந்தம் வரை இந்த யுத்தத்தில்
லோக ஜெயித்தேசு நாதனோடு பின் சென்றார்
ஓ! ஜெயிக்காமல் பின்னடைந்து போனதே இல்லே
ஜெயம் கொண்ட ஏசு நாமத்தாலே— அல்லேலூயா

5 யுத்தம் செய்த பேதுருவின் சக்தி தன்னைப்பார்
வீரசூரனை வல்ல ஸ்தேவானையும் பார்
ஓ! பலசாலியான பவுல் பராக்ர மத்தைப் பார்
பார் பார் ஏசுசேனை முன் செல்லுது— அல்லேலூயா

6 எல்லா வித நாமங்களும் இல்லாமல் போகும்
எந்தன் ஏசுநாமம் இன்றும் என்றுமே நிற்கும்
ஓ! ஆதி தொடுத்தந்தவரை லோகை ஜெயித்தோர்
ஆழுங்காலமதி சீக்கிரமே

38

பல்லவி

ஜீவ வசனம் கூறுவோம் சகோதரரே
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்

அனுபல்லவி

பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதிபதி ஏசு சிந்தை மகிழ்ந்திடவே —ஜீவ

சரணங்கள்

1 பாதகப் பேயின் வலையில்—ஐயோ! திரள் பேர்
பட்டு மடியும் வேளையில்
பேதமையோடு பிடிவாத மனுள் மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதிபெறவே— ஜீவ

2 காடுதனிலே அலைந்தோம்—கிறிஸ்துவினுல்
கர்த்தன் சேவையில் அமர்ந்தோம்
நாடு நகர் கிராமந்தேடி நாம் பெற்றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லோரும் கண்டடைய— ஜீவ

3 பூலோகம் எங்கும் நமையே—கிறிஸ்து நாதர்
போகச் சொல்லி விதித்தாரே
காலா காலங்களிலும் கூட இருப்போமென்ற
கர்த்தன் வாக்கை நினைந்து எத்தேசமும் திரிந்து— ஜீவ

4 விண்ணின் மகிமை துறந்தார்—கிறிஸ்து நம்மை
மீட்கக் குருசில் இறந்தார்
மண்ணின் புகழ் பெருமை எல்லாம் தூசு குப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியோடு— ஜீவ

---

39 பல்லவி

ஆ ! ஆ ! ஆனந்தமே பரமானந்தமே !
பரிசுத்தமாக்கப்பட்டோர் பேரானந்தமே !

சரணங்கள்

1 பாவிகளே மீட்க பாரினிலே வந்து
பாவியாமெனை பரன் பாதம் சேர்த்தார்— ஆ ஆ

2 கர்த்தன் சிலுவையில் கனசீர பலியாம்
நித்தம் ஜீவ பலியாய் நின்றிலங்கும் சபையே— ஆ ஆ

3 தாவீதின் மைந்தனே தாபரமானோரே
தன்னுயிர் தந்தாரே சாகாதுயிர்த்தாரே— ஆ ஆ

4 பரிசுத்த மாக்க பரன் சித்தம் கொண்டார்
பரிசுத்தாவி தர பரமேறிச் சென்றார்— ஆ ஆ

5 துக்க துன்பத்திலும் உள்ளத்திலானந்தம்
கஷ்டத்திலும் கனவீனத்து மானந்தம்— ஆ ஆ

6 பெற்ற பிதாவிலும் உற்றாருறவிலும்
வற்ரு கிருபையின் வல்ல மணாளனே— ஆ ஆ

7 சாவின் நிழலிலும் சாபத்திகில் நீக்கி
மேவியருள் வெற்றி விண்கதி சேர்ப்பார்— ஆ ஆ

8 காலமும் லோகமும் கடந்து மறையுதே
காரத்திலிடி அவர் காத்திடுவார் உன்னை— ஆ ஆ

40

பல்லவி

ஒருபோதும் மறவாத உண்மை பிதாவிருக்க
உனக்கென்ன--குறை மகனே!

அனுபல்லவி

சிறுவர் தொட்டனை யொரு
செல்லப் பிள்ளைபோற் காத்த
உரிமை தந்தையென் றென்றும்
உயிரோடிருப்பாருன்னை— ஒரு

சரணங்கள்

1 கப்பலின்அடித்தட்டில்—களைப்புடன் தூங்குவார்
கதறுமுன் சத்தங்கேட்டால்-கடல் புசலமர்த்துவார்
எப்பெரிய போரிலும்-ஏற்ற ஆயுதமீவோர்
எழைப்பிள்ளை யெல்லார்க்கும்-ஏற்றதந்தை நானென்பார்— ஒரு

2 கடல் தனக்கதிகாரி-கர்த்தரென்றறிவாயே
கடவாதிருக்க வெல்லை—கற்பித்தாரவர் சேயே
விடுவாளோ பிள்ளையைத்தாய்-மேதினியிற்றனியே
மெய்ப்பரனே நீ தினம்-விசுவாசித்திருப்பாயே— ஒரு

3 சிலபோது தரித்திரத்தால்-நோயால் வருத்துவார்
சிக்ஷித் துருக்குலும்-சிறந்த பொன்னாக்குவார்
பலபாடுனக்கென்றாலும்—பலன் பெறத்திருத்துவார்
பட்சம் நிறைந்த கையை—முத்திசெய் இலங்குவாய்— ஒரு

4 உன்னுசை விசுவாசம்—ஜெபமும் வீணாகுமோ
உறக்கமில்லாதவர்கண்—உன்னை விட்டொழியுமா
இந்நிலமீதிலுனக்—கென்னவந்தாலும் சும்மா
இருக்குமா அவர் மனம்—உருக்கமில்லாதே போமா— ஒரு

5 உலகம்பேயுடலாசை—உன்னை மோசஞ் செய்யாது
ஊக்கம்விடாதே திரு—வுளமுனை மறவாதே
இலங்கும் பரிசுத்தாவி எழில் வரம் ஒழியாதே
என்றும் மாறுத நண்பன்—இரட்சகருடன் சேர்ந்து— ஒரு

41

பல்லவி.

தேவனே, நான் உமதண்டையில்—இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்

அனுபல்லவி.

மாவலிய கோரமாக வன்சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டைசேர்வேன்–தேவனே

சரணங்கள்.

1 யாக்கோபைப்போல் போகும் பாதையில்—பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட
துக்கத்தால்நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என் கனவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா
—தேவனே

2 பரத்துக்கேறும் படிகள் போலவே—என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா என்றன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னை யழைக்கும் அன்பின் தூதராகச் செய்யும்
—தேவனே

3 நித்திரையினின்று விழித்து—காலை எழுந்து
கர்த்தாவே நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உன்தன் வீடாய் என் துயர் கல் நாட்டுவேனே
என்றன் தின்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச்
சேர்வேன்—தேவனே

4 ஆனந்தமாம் செட்டை விரித்துப்—பரவசமாய்
ஆகாயத்தில் எறிப் போயினும்
வான மண்டலம் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மை கிட்டிச் சேர்வேன்
—தேவனே

42

1 அல்லேலூயா மங்களம் அல்லேலூயா ஸ்தோத்திரம்
அல்லேலூயா திரியேக மூவருக்கும் ஸ்தோத்திரம்

2 எங்கள் பாவச் சுமையை மைந்தன் தோள்கள் மீதிலே
தங்கச் செய்த தயவை எங்கும் சொல்லிப் பாடுவேன்

3 செங்கடலைப் பிரித்து மதிலாய் நிற்கச் செய்தவா
சத்துருவை அழித்துச் சேனைகளை மீட்டவர்

4 அக்கினியின் மத்தியில் நால்வராக நின்றுமே
மயிர் கருகாமலே உலாவச் செய்த ஆண்டவா

5 சிங்கம் வாயை அடைத்துத் தானியேலைக் காத்துமே
பங்கமின்றித் தாசனைப் பாதுகாத்த நற்பரா

6 பஞ்சத்தில் எலியாவைப் பாதுகாக்க நினைத்து
தஞ்சமற்ற விதவையைத் தாபரிக்கச் செய்தவா

7 சிங்கக்குட்டி பசியாம் தேவதாசர் யாவரும்
பூர்த்தியாகப் புசித்து வாழ்ந்திடுவார் என்றவா

8 வேதத்திலே யாவையும் ஞானமாக நினைந்து
போதித்த என் பொற்பரா நன்றி துதி ஸ்தோத்திரம்

9 துதிக்க நாவு இல்லையே காலமும் போதாதையா
என் சப்தம் உமதண்டை எட்டுமட்டும் போற்றுவேன்.

43

பல்லவி.

என்ன சொல்லுவேன்—இந்தப்
பேரின்ப வாழ்வைக் குறித்து நான் —என்ன

அனுபல்லவி

பாவியான் செய்த பாவங்களை நீர்
பாதகன் போலே ஏற்றுக் கொண்டதால் —என்ன

1 மனம் போன போன போக்கெல்லாம் போன
மா பாவி படு பாவியாமெனைத்
தினம் தினம் திவ்ய வழி நடத்துவேன்
தேடி ஓடி வாவென்றழைத்ததால்— என்ன

2 என் சுகமதோ மெதுவதா மென்றும்
என் சுமையதோ இலகுவாமென்றும்
சொன்ன மொழியைக் கேட்டு நானே
துரிதமாக ஓடி வந்ததால்— என்ன

3 நானே ஜீவ அப்பமா மென்றும்
நானே ஜீவ தண்ணீராமென்றும்
எனை தேடி அலைகிறீரென்றும்
இன்பமாய் வந்துண்ணுமென்றதால்— என்ன

4 பாவத்தின் சம்பளம் மரணமே யென்றும்
தேவ கிருபையோ நித்ய ஜீவனென்றும்
யேசுக் கிறிஸ்துவாற் சீவனுண்டாமென்றும்
எண்ணி எண்ணி எண்ணி அடைந்ததால்— என்ன

44

1 பூண்டார் சிரசில் முள்ளால் முடி
சூண்டாரே பாவி—அவர்
நீண்ட குருசெடுத்து மாண்டார் சிலுவையில்
பாவி உனக்காக.

பல்லவி.

என் உள்ளமே! என் உள்ளமே! உன்
யேசுவையே துதி செய்—அவர்
நீண்ட குருசெடுத்து மாண்டார் சிலுவையில்
பாவி உனக்காக

2 மறந்தாரோ எந்தன் யேசு—அம்
மேலான மாட்சிமையை—அவர்
உகந்தாருந்தன் பாவங்கள் போக்க
உலகத்தின் காட்சியை— என்

3 தூது சொல்லியும் வந்தான்—அத்
தூஷ்ட யூதாசையா—எம்
காதலன் யேசுவைக் காட்டிக் கொடுக்கவும்
கருதினனையா— என்

4 பேயுலகம் பொல்லாது—உந்தன்
செல்வமும் நில்லாது—யே
கோவா வருகையின் நாள் வரும்போது
உன் வல்லமை செல்லாது— என்

5 என்னேசர் அன்பின் பாசம்—அது
எல்லாருக்கும் சந்தோஷம்—யேசு
உரைப்படி கடவா மூடருக்கு
நடு முடிவில் மோசம்— என்

45

பல்லவி

யேசு நான் நிற்கும் கன்மலையே—மற்ற
எந்த ஆதாரமும் வெறும் மணல் தரையே— யேசு

1 யேசுவின் ரத்தத்தின் மேலே—எந்தன்
எல்லா நம்பிக்கையும் வைத்தேன் அன்பாலே
நேசனேயுங் கூட நம்பேன்—நான்
யேசு நாமத்தின் மேல் முழுதுமே சார்வேன்— யேசு

2 இருள் அவர் அருள்முகம் மறைக்க—நான்
உறுதியாய் அவர் மாறுக் கிருபையில் நிலைப்பேன்
உரமாகக் கடும்புசல் வீச—சற்றும்
உலையாத எனது நங்கூரமே யேசு— யேசு

3 பெருவெள்ள பிரவாகம் வரினும்—அவர்
பிரதிக்கினை ஆணை இரத்தம் என்காவல்
இருதயத்தின் நிலை அசைய—அப்போ
யேசுவே என் முழு நம்பிக்கையாமே— யேசு

4 ஜோதியாய் அவர் வரும்போது—நான்
சுத்தனுய்த் தரிசித்து அவரைப் போலாவேன்
நீதியாம் ஆடை தரித்து—சதா
நித்திய காலமாய் ஆளுகை செய்வேன்— யேசு

46

1 யேசுவே நானும்முடன்
வாழ்விலும் மா தாழ்விலும்
இருளிலும் ஒளியிலும்
எகுவேன்:

பூவிலும் நீர் மாத்திரம்
வானில் வேறு இல்லையே
இனிமேல் நீரே துணை
என்றைக்கும்

டல்லவி

என்றைக்கும், என்றைக்கும்
ஈசன் யேசுவோடு நிற்பேன் என்றும்,
என்றைக்கும்

போர் செய்வேன் ஜெபத்திலும்
பாடுவேன் சந்தோஷத்தில்,
போற்றுவேன் என் கஷ்டத்தில்
என்றைக்கும்.

2 யேசு பூவில் வந்தாரே,
தாழ்மையாய் நடந்தாரே,
பாடு பட்டுயிர்த்தாரே,
எனக்காய்:

ஜெயம் பெற்றெழுந்தாரே,
பிதாவின் பக்கம் நிற்கிறார்,
பரிந்து பேசுகின்றாரே
எனக்காய் —என்றைக்கும்

3 புண்ணியனே பூமியில்,
புருவைப் போலச் சாந்தமும்,
சுத்தம் உண்மை தாழ்மையாய்
ஜீவித்து;

அன்பிலே அமிழ்ந்து நான்,
என்னைப் பலியாக்கியே,
மண்ணில் பரன் யேசுபோல்
மாற்றிடும்— என்றைக்கும்

4 இத்தரையின் ஓட்டம் பின்,
நித்தியர் முகம் கண்டு,
சுத்தரோடு அப்போது
போற்றுவேன்,

வீணை விளையாடலாம்,
வெண்மை வஸ்திரத்துடன்,
மன்னர் யேசுவோடு நான்
அரசாளுவேன்— என்றைக்கும்

47

1 நான் செய்த பாதகம் எப்படிப் போம்—பாவ
நாசகர் எவ்விட முண்டு
ஸ்ரீ யேசு ரட்சகர் பாவிகட்காய்க்—குருசில்
பிராணனை விட்டதுண்டு

பல்லவி.

கொடும் பாவி என்னை ரட்சிக்க, ரட்சிக்க
திருச் சிரசில் அவர் முள்முடி தரித்தார்
கொடும் பாவி என்னை ரட்சிக்க

2 உலகத்தின் பாவிகள் மோட்சம் சேர—அவர்
கண்ணின் நீர் விட்டாரல்லோ
தாகமுள்ளவர்கள் ஜீவ ஆற்றில்—தாகம்
தீர்ப்பதற்காய் வரட்டும்— கொடும்

3 பாவியா மென்னுடைய பாவமேற்று
மனஸ்தாபமோடே வந்த போது
கல்லுள்ளம் நீக்கித் தம் ஆவியினால்
என் உள்ளம் திருப்பாதை சேர்த்தார்— கொடும்

4 எந்தப் பாவிகட்கும் ரட்சகர் தான்
அவர் சத்திய கர்த்தனல்லோ
பாவத்தை வெறுத்து யேசுவை நீ நம்பு
மோட்சத்தில் சேர்ப்பார் உன்னை— கொடும்

5 இந்த பாக்யம் தந்த யேசுவுக்குப்—பதில்
நான் என்ன கொடுக்கவேண்டும்—என்
பூர்ண சக்தியோடு அவர் நாமத்தை
என்றும் வாழ்த்திப் புகழ்ந்திடுவேன்— கொடும்

48

பல்லவி.

யேசு நடந்த பாதை இது தானே?
எந்தன் மீட்பர் சென்ற பாதை இது தானே?

1 பரிசுத்தம் செய்யும் பாதை இது தானே?
அவர் பாடுகளின் பாதை இது தானே?

2 நிந்தை சுமந்து நாமும் பாளயத்தின் புறத்தே
நித்தம் அவரைக் கிட்டிச் செல்வோமே.

3 உலகத்தாரல்லாததால் தூஷிக்கப்பட்டு நாமும்
ஆனந்தக் களிப்புடன் துதிப்போமே.

4 பாடுகளின் பாதை இது தானே?
அந்த கொல்கதா மலைப்பாதை இது தானே?

49

1 அருள் நிறை வள்ளல்—அவனி மீதிலே
அவதாரமானார்—அல்லேலூயா
திருப்பாத மலர்தனை—தினம் தொழுதேற்றும்
திகழ் ஜோதி வேதம்—உலகினில் சாற்றும்— அருள்

2 வானில்லோர் வான்மீன்—வாகாய் தோன்றிட
ஞானிகள் மூவர்—பின்னே சென்றிட
சத்திராம் வரை ஜோதி—முன்னின்று விரைந்திட
சகலரும் கொண்டானந்தங்—கொண்டிட— அருள்

3 ஏரோதாசன் எங்கிடவே—மனம்
ஏசையினைப் போற்றினரே—ஜனம்
தாபவர்க்கம் தங்கம் வெள்ளை—பவளமும்
தாக்கிச் சென்றார் தேவ—காணிக்கையாக— அருள்

4 புள் புள் தாங்—தபேலா, ஜாலர், மேளம்
புல்லாங்குழல்—வீணை, சர்பிஞ, தாளம்
எல்லாம் கொண்டே—சையனின் பாதம்
ஏத்தியே பாடுவோம்—ஏசையா கீதம்— அருள்

50

பல்லவி.

அன்பே ! அன்பே ! அன்பே !!
ஆருயிர் உறவே
ஆனந்தம் ஆனந்தமே.

1 ஒரு நாளுந் தயை கண்டேனேயா
அந்நாளென்னை வெறுத்தேனேயா
உம் தயை பெரிதையா—என் மேல்
உம் தயை பெரிதையா அன்பே

2 பரலோகத்தின் அருமைப் பொருளே
நரலோகரி லன்பேனேயா
ஆழம் அறிவேனே—அன்பின்
ஆழம் அறிவேனே அன்பே

3 அலைந்தேன் பலநாள் உமையு மறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே—எனையும்
அணைத்தீர் அன்பாலே அன்பே

4 பூலோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் பூவைப் போல்
வாடாதே ஐயா—அன்பு
வாடாதே ஐயா அன்பே

5 இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற் கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ—பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ அன்பே

51

பல்லவி.

பாசமாகப் பாவி உன்னை
நேச ரேசு அழைக்கிறாரே.

அனுபல்லவி.

நாச உலகை விட்டிடுவீர்
மோட்ச கரை ஏறிடவே— பாசமாக

1 நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோர்க்கு
நேராய் உண்டு அடைக்கலமே
நேசர் தொங்கினர் கல்வாரியில்
நாதனை அண்டிடு இந்நேரமே— பாசமாக

2 மரணம் நினையா நேரம் வரும்
மானிடரே நீர் என்ன செய்வீர்
மயங்காதே அவர் அழைக்கும் நேரம்
மன்ன ரேசுவில் வாழ்ந்திடுவீர்— பாசமாக

3 பாவ அறிக்கை செய்திடு இன்றே
பாவ மன்னிப் பீவாரே
பாவம் செய்யாதிருந்திடவே
பலமளிப்பாரே யவர் உனக்கு— பாசமாக

4 லோக மாளும் தேவ ராஜன்
உன்னை மீட்க மாண்டாரே
நல்ல நாட்டை நல்கிடுவார்
நாடும் நரர் யாவருக்கும்— பாசமாக

52

பல்லவி.

எலே, தேடுறீர்கள், தேடுறீர்கள் ஜீவதேவனை
இந்தக் கல்லறையிலே

1 உன்னதனின் மன்னவனும் முன்னதாகவே
சொன்னாரே மூன்றும் நாளில் உயிர்ப்பதாகவே
தானும் ஜெயிப்பதாகவே— எலே

2 பூதலத்தில் யாவையும் படைத்த தேவனே
பூமியும் தாங்குமோ தன் சிருஷ்டி கர்த்தனே
மகா வல்ல தேவனே— எலே

3 தீர்க்கருரை செய்திருந்த நீதி சூரியனும்
வீரனாக எழுந்தார் காத்தோர் நாணவே
காவல் செய்தோர் நாணவே— எலே

4 நம்பிக்கையாமே நமக்குப் பார்தலத்திலே
நாமும் எழும்புவோம் அவ்வண்ணல் போலவே
எசுராஜன் போலவே— எலே

5 சேனையின் தலைவரும் உன்னத ராஜனும்
ஆனாரே வெற்றியால் சபைக்கு சிரசும்
நம்மை விண்ணில் சேர்ப்போரும்— எலே

6 ரூபித்தனரே நமக்குத் தேவ சுதனென்றும்
தாய்மையின் ஆவியாலே வென்றதினாலும்
சாவை ஜெயித்ததினாலும்— எலே

7 ஸ்தோத்திரம் துதி என்றும் எம் யேசு நாதருக்கே
பாத்திரமற்ற நமக்கீந்தார் ஜீவனும்
ஈடம் சாவாமை தன்னும்— எலே

53

1 யுத்த வர்க்கம் அணிந்து
போர் செய்வேன் துணிந்து
நான் வெல்லப் போகிறேன்
யேசுவின் பெலத்தால்

2 பாவத்தைப் பகைத்து
பரிசுத்தம் தரித்து
போர் செய்யப் போகிறேன்
யேசுவின் பெலத்தால்

3 சுத்த மனச் சாட்சியைக்
காத்து திவ்ய மாட்சியைக்
காண்பிக்கப் போகிறேன்
யேசுவின் பெலத்தால்

4 சாமட்டும் நிலைத்து
சத்துருவைத் தொலைத்து
நான் ஆளப்போகிறேன்
யேசுவின் பெலத்தால்

54

1 என்மேலுள்ள நின் சர்வ நன்மைகட்காக நான்
என்ன செய்வேன் உமக்கென் ஏசுபரா? இப்போ

2 நன்றியால் எந்தன் உள்ளம் பொங்கி நிரம்புதே
இன்று வரையு மெனைக் காத்ததாலே—தேவா

3 பாவத்தினின்று எந்தன் ஆவி உயிர்ப்பிக்க
சாப சிலுவை சகித்த தேவ சுதா! மகா

4 என்னை அனுதினம் அன்போடு நடத்திடும்
பொன்னேசுவே அனந்தம் ஸ்தோத்திரமே—என்றும்

5 முற்று முடிய என்னைக் காத்து நடத்திட
சத்துவ மீந்திடும் நல் நண்பன் நீரே!—திருச்

6 தர்தன் வலப்புறத்தில் நூதன் நீர் எழுக்காய்
பாதம் வேண்டியே நிற்கும் பாக்கியனே—பொன்னின்

7 குற்றங் குறைகளின்றிக் கோதில்லா ஜோதியில்
முற்றும் எனை நிறுத்த வல்லவரே!—தேவா

8 இந்நிலம் தன்னிலேழை தங்கிடும் நாளெல்லாம்
எத்துவேனே உன் திரு நாமமதை—எழை

55.

1 என்ன சிங்காரமையா என் நேசர் வீட்டில் என்ன சிங்காரமையா
பிதாவானவர் முன்பில் இருபத்து நான்கு மூப்பர் வணக்கம்

2 என்ன பேரின்பமது மோட்ச வீட்டில் என்ன பேரின்பமது
தேவாட்டின் சாயல் பரிசுத்தர்களணியும் நேரம்

3 நாலு மிருகமுண்டு விநோதமான நாலு மிருக முண்டு
அவர் சுத்தர், பரிசுத்தர் பரிசுத்தரென்று போற்றுகிற

4 பாட்டுகள் பாடுகிறூர் கேள், தேவதூதர் பாட்டுகள் பாடுகிறூர் கேள்
கனம், மகிமை, வல்லமை அவர்க்கென்று மூரியதென்று

5 என்ன அதிசயம் பார், நவ எருசலேமில் என்ன அதிசயம் பார்
மணவாட்டியின் சாயலாக வானில் நின்றிறங்கும் நேரம்

6 நானங்கு சேரும் நேரம் ஆஹா என்ன இன்பம் நானங்கு
சேரும் நேரம்
நேச மணவாளன் என் கண்ணின் நீர் அடைத்திடுவார்.

56

பல்லவி.

சீக்கிரம் புறப்படுவோம் ஏசுவை சந்திக்கவே

1 ஆவியாலும் ரத்தத்தாலும் அசுத்தத்தினின்று விலகி
ஆவியில் கபடமற்றவராய் மாசுமறு இல்லாதோராய்
ஆத்ம மணவாளனைப்போல் ஜீவித்துமே ஏகிடுவோம்— சீக்

2 மாய உலகை மறந்து நேயனின் அடிபணிந்து
மேலுலக ஜீவிகளாய் மேன்மையாம் ஜெப ஆவியுடன்
அல்லேலூயா கீதம் பாடி ஆர்ப்பரிப்போம் என்றென்றுமே— சீக்

3 ஏசுவே உந்தன் சாயல்காண எழை மிக ஏங்குகிறேன்
நீசனுக்குக் காட்சி தாரும் தோஷமென்னை விட்டகற்றும்
தேவசுதன் பொற்பாதத்தைப் போற்றிப் புகழ்ந்தேகிடுவேன்— சீக்

4 அன்பு என்னில் பொங்கவேணும் அச்சம் பயம் நீங்கவேணும்
துன்பம் துயர் போகவேணும் துர்க்குணத்தை நீக்கவேணும்
விண் இறைநீர் வேந்தனும் நீர் கண்மணி போலெனை காப்போரும்
நீர்—சீக்

5 சேனையின் தேவன் பரிசுத்தர் பரிசுத்தர் என்றார்ப்பரிப்போம்
சுந்தரப் பிதாக்குமாரன் ஜோதி பரிசுத்தாவிக்கும்
சந்ததமும் கீர்த்தி புகழ் என்றென்றுமே செலுத்திடுவோம்— சீக்

57

பல்லவி.

தேவா ஜீவனுள்ளோர் தேடும்—தேவா

அனுபல்லவி.

வாரும் நேசா வானவர் மேலா
வருவீரென் மனமே தினம் மகிழ்ந்திடவே— தேவா

1 பூவும் நீரே, மணமும் நீரே,
ஜீவன் கொடுத்த ஒளியும் நீரே—தான்
ஜீவனுள்ளோர் தேடும்—தேவா
என் காதலனே உந்தன் சோபையே தான்!
சோகமடைந்தேன் உந்தன் நேசத்திலல்— தேவா

2 அன்பும் நீரே, அரணும் நீரே,
அவனியிலெனக்குயிர் கொடுத்தோனும் நீரே—தான்
ஜீவனுள்ளோர் தேடும்—தேவா
பின்மாரியின் மழை இப்போ தந்திடுமே
இவ்வேழைகள் ஜெபத்துக்கு இரங்கிடுமே— தேவா

3 அல்பாவும் நீரே, ஒமேகாவும் நீரே,
அடியோர்க்குப் பரிபூரணம் நீரே—தான்
ஜீவனுள்ளோர் தேடும்—தேவா
உம் மகிமையின் ஆவியால் சுத்தி செய்யும்
நின் வருகையில் பரிசுத்தமாகக் காண— தேவா

58

1 இன்னும் சந்தேகிப்பேனோ? ஜீவனுள்ள தேவனே நான்
ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபின் தேவன் அல்லோ
வாக்கு மாறுதவராம் நம்பினோரைக் காப்பவராம்
அல்லேலூயா துதி.....இன்னும்

2 ஏழை எந்தனே மீட்டு வேண்டிய கிருபை ஈந்து
வெளிச்சத்தின் பிள்ளையாக ஜீவிக்க கிருபைசெய்து
சாத்தானின் ஆஸ்திரங்கள் அணுகாமல் பாது காத்தார்
அல்லேலூயா துதி.....இன்னும்

3 பாவம் அனைத்தும் நீக்கி நீதிக்குப் பிழைக்கும்படி
பாவியின் பாவங்களைப் பாரக் குருசினில் தீர்த்தார்
அப்பா பிதாவென்றிடும் ஆவியையும் ஈவாய்த் தந்தார்
அல்லேலூயா துதி.....இன்னும்

4 சமாதான காரணராம் நடு மதிலைத் தகர்த்தவராம்
அந்நியமான என்னை அண்டி வந்து காத்தவராம்
மாறுத மீட்பரை நான் என்றென்றும் துதித்திடுவேன்
அல்லேலூயா துதி.....இன்னும்

5 சத்தியமென்னும் கச்சை நீதியென்னும் மார்க்கவசம்
ஆயத்த பாதரட்சை விசுவாசக் கேடகமும்
ரட்சணியத் தலைச் சீராவும் ஆயுதங்களாகத் தந்தார்
அல்லேலூயா துதி.....இன்னும்

59

1 சீயோன் மலையதிலே சிங்காரக் குன்றதிலே
சிறப்புடன் நிற்கிறவளாரோ?...தன்
மீட்பரைச் சாற்றுபவள் யாரோ?
ஆட்டுக்குட்டிக்குமாய் அன்பர் செய்கைக்குமாய்
ஓயாமல் போற்றுபவள் தானே

2 களங்கமில்லாதவளாம் கன்னிகை தானவளாம்
கர்த்தனுக் கேற்றவளிவளாம்—அவள்
காதல் எந்நாளும் அவர் மேலே
காந்தன் வரவுக்காய்க் காத்திருந்தவளே
கற்புடையவளே பாரில்

3 ஆட்டுக்குட்டியின் பின்னே சென்றவள் தானிவளே
அண்ணல் யேசுவின் சித்தம் தானே
எல்லா நாளும் செய்தவளிவளே
அழகவள் பாதமே மலையதின் மீதிலே
ஆ, ஆ, அதின்பமே—வானில்

4 வாயிற் கபடமில்லே வஞ்சனே தானுமில்லே
ஆடை பிரகாசமா யணிந்தாள்—தன்
காதலன் இரத்தத்திலே தோய்த்தாள்
தன் தேவ நாமமே நெற்றியில் தோணுதே
ஆ! அலங்காரமே—ஆ ஹா, ஹா.

5 மண்வறை தானதிலே, மறைந்திடுவாளவளே
மன்னன் அழைக்கும் தொனியோடே—மிக
மாண்புடன் வாழுவாளவளே
வா என் மணாளியே, என் பாரந் நாளிலே
செல்லுவேன் நானுமே—ஆ! ஆமென்

---

60 பல்லவி.

யேசுவே கருணாகரா நின்
ஆசி கூறுமே இந்நேரம்

1 தாசர்களின் ஆறுதலே, தாழ்மையுள்ளோர் தாரகமே
தாவி வந்து பாதம் பணிந்தோம்
தயாபரா கிருபை தாரும்— யேசுவே

2 தேசமெல்லாம் புலம்பிடுதே, நாசமெங்கும் பரம்பிடுதே
நேசரேயும் பாசகரத்தை
நீட்டி எம்மை ஆதரிப்பீர்— யேசுவே

3 ஆதி அன்பு குறைந்தோரெல்லாம் ஆவலாய் முன்னேறிச் செல்ல
ஆவிமழை யூற்றிடுமிப்போ
அன்பிலே நிறைந்து மகிழ— யேசுவே

4 விசுவாச துரோகமெங்கும் வேகமாகத் தோன்றிடுதே
வேதனே மெய் விசுவாசமோங்க
வேண்டுமே ஞானத்தினுவி— யேசுவே

5 வாக்கு மாறுத் தேவா வாரும் வல்லமையால் நிறைக்கவே வாரும்
வெல்லவே பொல்லாத பிசாசை
வீரமாய் எதிர்த்து நிற்க— யேசுவே

---

61 பல்லவி

நம்பி வந்தேன் திருவடியே சரணம்
நானில மீதினிலே ஏசுராஜனின் நாமத்திலே

1 பாசமாய் ஜீவனைக் கொடுத்து—கோரப்
பாவத்திலிருந்தெம்மை விடுத்து
காசினி மீதில் நேசமதாக
காத்து வருகின்ற கர்த்தாதி கர்த்தா— நம்பி

2 தூரத்திலிருந் தெம்மை யழைத்து—பரன்
தூய்மையின் சாயலணிய
தொங்கினுர் கல்வாரி, மூன்முணி மீதினில்
தூதருக்கில்லாத மேன்மையை யளித்திட— நம்பி

3 நம்பினேரைக் காக்குந் தேவன்—பகல்
இரவு கண்ணுறங்கிடா மூவன்
நாடிடுவோமே, நன்மையைப் பெறவே
நல்லவரென்றென்றும் ஜீவிப்பதாலே— நம்பி

4 வாடாத ஜீவகிரீடமும்—பரன்
மகிமையின் நீதியும் முடியும்
சூடிடுவாரே சுத்தர்கள் சேர்ந்து
பாடிடுவாரே பரன் துதி என்றும்— நம்பி

5 கைவேலே யில்லாத மனையில்—நிதம்
வாழ்வோமே சேர்ந்தங்கு விரைவில்
ஆளுவோமே நாம் அன்பரோடென்றும்
அகமகிழ்ந்தே யுகாயுகமென்றும்— நம்பி

62

பல்லவி

யேசென்னும் நாமம் என் நாவுக்குச் சுகிர்தம்
நானிலம் தன்னில் என் அரணே— ஆ !

அனுபல்லவி

தீருமென் குறைவும் தீதுகள் குறையும்
தீருமென் திகிலும் உரைக்கவும் பெயரும்— யே

1 சிந்தையின் பாரங்கள் யாவையும் நீக்கிடும்
சஞ்சலம் யாவுமே அகற்றும்—ஆ !
பந்தனை ஜெயித்து வந்தனை அணைக்கும்
பத்தனை அழித்து சந்தோஷம் அளிக்கும்— யே

2 பேய்களும் நீங்கும் பொல்லாவியும் அகன்றிடும்
நோய் பிணி யாவுமே தொலையும்—ஆ !
அதிசயம் நடக்கும் அற்புதம் பெருகும்
அதிசயப் பெயரும் என்றென்றும் ஜெயிக்கும்— யே

3 பயங்கர சர்ப்பத்தை பயமின்றி எடுக்கவும்
மயக்கிடும் நஞ்சை ஜெயிக்கவும்—ஆ !
தயங்கி நிற்பவரை தாங்கிடும் பெலனே
தயங்கி வந்தவரை ஆற்றிடும் பெயரே— யே

4 ஆ ! என்ன இன்பம் என் ஆண்டவர் பெயரில்
ஆனந்தமே அதின் நினைவில்— ஆ !
தேனிலும் இனிமை பேதைக்கு மகிமை
தேனிலும் இனிமை எழைக்கும் உரிமை— யே

5 வணங்குவர் யாவரும் வானிலும் பூவிலும்
தொனித்திட யேசுவின் நாமம்—ஆ !
மடங்குமே முழங்கால் அடங்குமே துடுக்கும்
மடங்குமே பெயரும் நடுங்குமே அவர்க்கு— யே

63 பல்லவி

யேசு நாதனைப் போற்றிடுவோம்—புகழ்ந்து
நாதனைப் போற்றிடுவோம்—புகழ்வோமே

1 ஆ! ஆ! ஆனந்தம் அன்பர் சந்நிதியில்
ஆசீர்வாதமென்றும் பெருகிறதே
அதை நினைந் தகமகிழ்ந்துமே
அடி பணிந் தடிய வருமை— யேசு

2 கருணையினிலமை அலங்கரித்திடவும்
கனிந்து தினை தினமும் புரிந்திடவும்
வரும் பெரும் வினைகளனைத்தும்
அறும்படி அருளினதால்— யேசு

3 வருடம் முழுவதிலும் வழுவ விடாது
வாழும் வழிகளிலே வளரச் செய்து
பலமுடைய புயமுடனே
பரன் பரா மரித்திடவே— யேசு

4 பாதையில் பாடுகள் பலுகி வந்திடினும்
வாதை பிணியெமை வருத்திடினும்
அதைரியம் அணுகி வரினும்
அனுதினமும் துதித்திடுவேன்— யேசு

5 அன்பில் அனுதினம் அடியவர் நிலைத்திட
அண்டி நடத்திடும் ஆண்டிதிலும்
அநாதியும் அந்தமும் நீரே
அனுதையின் சொந்தமும் நீரே— யேசு

---

64 டல்லவி

உமை நம்பினோர் மாண்டதில்லை, மாண்டதில்லை, மாண்டதில்லை.

1 துன்பங்கள் பலமாய் நெருங்கி வந்தாலும்
தொல்லைகள் எமை அணுகி வந்தாலும்
காக்கவல்லவர், காக்கவல்லவர், காக்கவல்லவர், காக்கவல்லவர், [—உமை

2 சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியுற்றாலும் [—உமை
பங்கம் வராதெம்மைக் காத்திடுவீரே
ஓங்குமே, பெலன் ஓங்குமே, எமைத் தாங்குமே துயர் நீங்குமே

3 நிறுத்திடுவீர் எமைக் களங்கமில்லாமல் [—உமை
பொறுத்தெந்தன் குறைகள் யாவையுமகற்றி
காப்பீரே, என்னைக்காப்பீரே, சுத்தம் செய்வீரே முத்தி
சேர்ப்பீரே—உமை

4 தாரகைபோல் நின்று இலங்கின சுத்தர்
பாதை விட்டோடி மறுத்து வீழ்ந்தாலும்
பாதை காட்டவும், பாதுகாக்கவும், பாதம் சேர்க்கவும் வல்லவர்

5 மாட்சியிலே இன்னும் வந்திடுவீரே [—உமை
மகிமையிலே என்னைச் சேர்த்துக் கொள்வீரே
மன்னவர், நீரே நல்லவர், இன்றும் நல்லவர், என்றும் நல்லவர்
—உமை

---

65 பல்லவி

காப்பார், உன்னைக் காப்பார்,
காத்தவர் காப்பார், இன்னும் இனிமேல் காத்திடுவார்
கலங்காதே மனமே—காத்திடுவார்

1 கண்டுனை யழைத்தவர் கரமதைப் பார் அவர் கைவிடாதிருப்பார்
ஆண்டுகள்தோறும் உனக்கவர் அளித்திட்ட ஆசிகளை எண்ணிப்பார்
எண்ணிப்பார், எண்ணிப்பார், எண்ணிப்பார்
என்றுமதை எண்ணிப்பார்—காப்பார்

2 இஸ்ரவேலுக்கு வாக்குப்படி இன்பக்கானான் அளிக்கவில்லையோ
இப்போதிவர்களை நிர்மூலம் செய்வதென்று பின்னுமிரங்கவில்லையோ
இல்லையோ, இல்லையோ, இல்லையோ
மனஸ்தாபம் கொள்ளவில்லையோ—காப்பார்

3 வீழ்ச்சியில் விழித்துன்னை மீட்பவரும் இகழ்ந்துவிடாது சேர்ப்பவரும்
சிற்சில வேளையில் சிட்சையிலுன்னைக் கிட்டி இழுப்பவரும்
ஜெயமும், கனமும், சுகமும்,
இரக்கமா யுனக்களிப்பவரும்—காப்பார்

4 தாயினகட்டில் வருமுன் உனக்காய்த் தாமுயிர் கொடுத்தவரே
காயீனப்போல் உன்னைத் தள்ளிவிடாது கைகொடுத்தெடுத்தவரே
அவரே, அவரே, அவரே
அன்பு கொண்டு மணந்தவரே—காப்பார்

5 ஆதரவாய்ப் பல ஆண்டுகளில் பரனடைக்கலமாயிருந்தார்
காதலுடனவர் கைப்பணி செய்திட, கனிவுடனுதரித்தார்
தரித்தார், தரித்தார், தரித்தார்
பரிசுத்தத்தி லலங்கரித்தார்—காப்பார்.

66

1 தேவாதி தேவனே மகத்துவா—ஸ்தோத்ரம்
தேசிகர் போதனே ஜீவா—ஸ்தோத்ரம்

பல்லவி

வந்தனம் தந்துமைச் சொந்தமாய்ப் போற்றுவேன்
இந்த வேளைதனில் வந்தருள் ஈகுவாய்.

2 ஈனப்பாவியென்தன் மீட்பா—ஸ்தோத்ரம்
ஈனச் சிலுவையை எடுத்தாய்—ஸ்தோத்ரம்

3 வியாகுல நேரத்தில் நேயனே—ஸ்தோத்ரம்
வியாதிப் படுக்கையில் சகாயனே—ஸ்தோத்ரம்— வந்

4 ஆலோசனை தரும் ஞானமே—ஸ்தோத்ரம்
அல்லல்கள் தீர்த்திடும் வல்லவா—ஸ்தோத்ரம்— வந்

5 மாலை மயங்கையில் ஜோதியே—ஸ்தோத்ரம்
காலை சமயத்திலென் ஜீவனே—ஸ்தோத்ரம்— வந்

6 அன்பர் விட்டோடினும் மாறிடா நண்பனே
கொண்டாயுன் ரத்தத்தால் கொற்றவா—ஸ்தோத்ரம்— வந்

7 துன்ப மகோரமாய்ச் சூழ்ந்திடும் நேரத்தில்
இன்பமாக என்னை ஏற்றவா—ஸ்தோத்ரம்— வந்

---

67 பல்லவி

வரவேணுமே—வல்ல ஆவியே நீர்
வரவேணுமே திருச்சபை மீதில்— வரவே

1 அன்றொருமேடையில் ஆதிச் சீடர் மீது
வந்தருள் செய்ததுபோல் இந்த நேரமுமே— வரவே

2 உயிரேதுமில்லா தழலுதே மந்தை
உன்னருள் தாராயோ மன்னவா திரியேகா— வரவே

3 வலையரைக் கூட்டி வல்ல சீடராக்கி
தொலையிலனுப்பத் துணைபுரிந்த வா— வரவே

4 துன்பமே சகிக்க துரிச்சையை எரிக்க
இன்பமேறும் செய்தி எங்குமேயுரைக்க— வரவே

5 வதண்டுழன்ற மண்ணில் வல்ல ஆவிமாரி
இறங்கிடவேணும் எகோவா என் தேவா— வரவே

6 வேதமொழிகூற வேண்டுமேநின்னுவி
பேதைகள் நடுவில் பெய்திடாதோ மாரி— வரவே

---

68 பல்லவி

பாவியே நீ போகும்போது கூட வருவதென்ன?
கூட வருவதென்ன? கொண்டு நீ வந்ததென்ன?

1 ஆடுமாடு நன்செய் புன்செய் வீடுவாசல் தான்வருமோ?
பாடுபட்டு லாயக்காய் தேடும் பணம் வருமோ?— பாவி

2 உத்தியோக மதிப்புகளும் பி எ., எம். எ., பட்டங்களும்
மெத்தவே அரையில் கட்டும் ஆடைகள் தான் வருமோ?— பாவி

3 மாயை மாயை மாயை என்று சொல்லுகிறான் பிர்சங்கி
ஞாயமாய்த் தீர்ப்புச்செய்தார் ஞானி சாலமோன் தானே— பாவி

4 தேடு நீ கண்டடைவாய் தட்டுத்திறப்பேனென்றார்
கேளு கொடுப்பேனென்றார் கேட்டவரம் தருவார்— பாவி

---

69 **பல்லவி**

துதிசெய், துதிசெய், துதிசெய் திரியேகனே

அனுபல்லவி

மதியை வென்று கதி பெறுவாய்.

1 வருங்கோபத்தில் நீ விலகிடவே
வழியென்ன செய்திட்டாய்
வாதைகளெதுவும் வாய்க்காதே போகும்
வல்லவரை நாடினால் துதி

2 மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையைவிட்டு
மணவாள னேசுவை ஆசி
மாநிலத்திலுள்ள தெல்லாமழியும்
மகிபன் மட்டுமே நிலைப்பார் துதி

3 காயமும் நிலையாது காலமும் நில்லாது
மாயவுலகம் மறையும்
வீரியம் பேசி வீண்போக்கவேண்டாம்
மாறி ஏசுவை ஏற்றுக்கொள் துதி

4 சிலுவையில் மாண்ட சேசுவைப்பார்
சிக்கிரம் இரட்சிப்படைவாய்
ஜீவனும் வழியும் சத்தியமும் காண்பாய்
தேவகுமாரனண்டை — துதி

5 இரட்சகர் வைத்தியர் ஸ்நானகர் அவரே
இராயனும் இரட்சண்யக் கொம்பே
தேவனும் குருசுமும் கோட்டையும் அவரே
தெவிட்டாத தேனுமவரே— துதி

6 நல்ல மேய்ப்பனும் வல்லதாய்க் காப்பனுமே
மெல்ல வுன்னை நடத்துவார்
தள்ளவே மாட்டார் வெல்லவே செய்வார்
நில்லாமல் ஓடியேவா துதி

7 அல்லேலூயா கீதம் ஆனந்தமாய் பாடி
எல்லோர்க்கும் ஏசுவைக் கூறு
வெல்லவே வேந்தன் விரைவினில் வருவார்
பொல்லோரைப் போக்கிடவே துதி

70

1 பாவத்தின் பலன் நரகம் ஓ பாவி நடுங்கிடாயோ?
காண்பதெல்லாம் அழியும் காணுததல்லோ நித்தியம்

பல்லவி

ஏசுராஜா வருவார்
இன்னும் கொஞ்சங் காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம்— ஏசு

2 உலக இன்பம் நம்பாதே
அதின் இச்சை யாவும் ஒழியும்
உன்ஜீவன் போகும் காளிலே
ஓர் காசும் கூட வராதே— ஏசு

3 உன் காலமெல்லாம் போகுதே
உலக மாய்கையிலே
ஓ தேவ கோபம் வரும் முன்
உன் மீட்பரண்டை வாராயோ— ஏசு

4 தேவன்பின் வெள்ளம் ஓடுதே
கல்வாரி மலைதன்னிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம்
அதில் ஸ்நானம் செய்வதாலே— ஏசு

5 மா பாவியான என்னையும்
என் நேசர் ஏற்றுக்கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய்— ஏசு

71

1 பரிசுத்தர் கூட்டம் ஏசுவைப் போற்றி
பாடி மகிழ்ந்தாடி யங்கே கூடிட
பரமானந்த கீதமங் கெழும்ப
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே? [ஏசுவோடு
நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே என்

2 ஆட்டுக்குட்டியும் அரசாட்சி செய்ய
அண்டினோரெவரும் அவரைச்சேர
அன்பர் அன்றெல்லார் கண்ணீரும் துடைக்க
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே? [ஏசுவோடு
நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே— என்

3 பேதுரு பவுலும் யோவானுமங்கே
பின்னும் முற் பிதாக்கள் அப்போஸ்தலரும்
ரத்த சாக்ஷிகளும் திரளாய்க் கூட
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே? [ஏசுவோடு
நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே— என்

4 ஜெகத்தில் சிலுவை சுமந்தோரெல்லாம்
திருமுடியணிந்திலங்கிடவும்
தேவ சேயர்களா யெல்லோரும் மாற
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே? [ஏசுவோடு
நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே நானங்கிருப்பேன்— என்

5 சோதனைகளை வென்றவர் எவரும்
துன்பம் தொல்லைதனைச் சகித்தவரும்
ஜோதிரூபமாய் சொர்லோகில் ஜொலிக்க
நீயங்கிருப்பாயோ சொல் என்மனமே [ஏசுவோடு
நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே— என்

6 கன்னிகையைப் போல் கர்த்தன் சபையன்று
மன்னர் மணாளனேசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நீலருசிக்க
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே [ஏசுவோடு
நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே நானங்கிருப்பேனே— என்

---

72 பல்லவி.

ஜெபத்தின் ஆவியைத் தாருமே—திருச்சதன்போல்
ஜெபம் செய்ய வரந் தாருமே—பரமதேவா
ஜெபத்தின் ஆவியைத் தாருமே

அனுபல்லவி.

சபைத்திரள் சன்மனசோர்—ஜகத்தில் பக்தியுள்ளத்தோர்
ஜெபித்துச் ஜெபித்து போற்றும்–திரித்வ மகத்வ தேவா— ஜெபத்தின்

1 அன்பின் ஜெபம் செய்தறியேன்—சுயநலத்தை
அல்லாமற் ஜெபித் தறியேன்— அபயமெனத்
தன்பத்தில் ஜெபம் புரிவேன்—துயர் நீங்கியபின்
துதி செய்ய மறந்திடுவேன்
வம்பு பிரிவினைகள் — வன்மம் பிறரைச் சாடல்
சம்பிர தாயம் பிரசங்க சாதுர்ய ஜெபம் செய்வேன்— ஜெபத்தின்

2 பகிரங்க ஜெபம் பெருக்கம் —அந்தரங்கத்தில்
பண்ணும் ஜெபமோ சுருக்கம் —வந்திக்கும் வேளை
மிக்க சங்கட நெருக்கம்—பந்துத்வ ஜெபம்
இளைத்திடா தென்ன வுருக்கம்
இன்ப நித்திரை விட்டு— இரவெல்லாம் ஏக்கமுற்று
அன்பன்மலேயில் செய்த–அரிய ஜெப மறியேன் — ஜெபத்தின்

3 ஊரார் பாவத்துக்கழுதார்—பிறர் குறைகள்
ஒழிந்து போக ஜெபித்தார்— பாவக்கறையை
நேராயறிந்து அழுதார் —பரமனோடு
நெருங்கிப் பரிந்து ஜெபித்தார்
சீரிலினத்தவர்க்கோ —தீய பாவியெனக்கோ
கோரிக் கண்ணீர் சொரிந்து–கூவி ஜெபித்தறியேன் —ஜெபத்தின்

4 ஜெபமே கவசமாகச் சாதனை முற்றும்
செய்தாருன் மீட்புக்காக— வேதத்திலெங்கும்
ஜெபமே ஜெயம்தாக—வாக்குதத்தமும்
தந்திட்டாருனக்காக
ஜெபத்திலவர் சாயலாய்த்—தீயனுனுருவாகி
ஜெய பக்தருடன் சேர்ந்தின் —பாதம்பணிந்துகொள்ள —ஜெபத்தின்

73 பல்லவி.

(பரம சேனை கொண்டாடினார் என்ற மெட்டு)

சிலுவை சுமந்தே எகினார் சீர் மனுவேலன் — சிலு

1 பலவாறாய் தாஷித்திட கலகக்காரோ டொப்பிட
மலையாதவர் நெருக்கிட மாதாவும் வாட— சிலு

2 வெற்றி பொற்கிரீடம் சூடும் நெற்றி முட்கிரீடம் சூட்ட
தட்டாமற் தாமே கொடுத்த கட்டிக்கரும்பே— சிலு

3 சீஷர் யாவரும் ஓட நேசர் முகமும்வாட
நீசர்கள் ஈசல்போட பேய்க் கணங்கள் பாட— சிலு

4 வாதையால் நாவறள பாதையில் ஆள் திரள
போகையில் இயேசு உருள கண்டோர் மருள— சிலு

---

74 பல்லவி.

தாகத்தை தீருமையா—அபி
ஷேகத்தை தாருமையா எங்கள்

1 ஆகமம் முன்னே அறிவித்த வண்ணம்
ஆவியால் அடியாரை நிரைத்தீரல்லோ
ஏக கர்த்தாவே ஏழைகள் மீது
இரங்கிடும் இப்போதே —எம்மில்— எங்கள்

2 சத்துருவாலே சகிக்க வொண்ணுத
எத்தனையோ இடர் வந்ததையோ
அத்தனே உமது அருள் பலத்தாலே
நித்தமும் ஜெயம் கொள்வோம்—நாங்கள்— எங்கள்

3 வேதத்தின் பொருளை விளக்கிட வல்ல
போதகராம் ஆவியானவரே
பாதத்தில் வீழ்ந்து பணிந்திடுவோமே
பரிசுத்த மாவோமே—நாங்கள்— எங்கள்

4 சுத்த ஜீவியமும் தூய ஊழியமும்
கர்த்தருக்கேற்ற நற் காணிக்கையாம்
சித்தம் கொண்டெமை நீர் பாவிப்பதாலே
மெத்தவும் பலன் காண்போம்—நாங்கள்— எங்கள்

75

பல்லவி

எந்தன் பூமானைக் காணசிந்தை பெருகுதையோ
என்றைக்குக் காண்பேனே! ஓ!

1 சுந்தரத்தில் மிகுந்த அந்தரங்கத்திருக்கும்
எந்தன் பூமானைக்காண—அழகுடைய
அண்ணல் இயேசுவைக் காண— ஓ! எந்தன்

2 விண்ணிலிருந்தவர் மண்ணின்மேல் வந்தவர்
கன்னிகையில் பிறந்தவர்—லாசருக்காக
கண்ணீரைவிட்டழுதவர்— ஓ! எந்தன்

3 இன்னும்வர என்ன தாமதம் செல்லுமோ
சொன்ன வாக்கை நினைந்து—அடியேனுந்தன்
பாதம் பணிந்து வந்தேன்— ஓ! எந்தன்

4 பொல்லாதோரை இரக்ஷிக்க வல்ல பராபரன்
என்ன துயரடைந்தார்—அதை நினைத்தால்
சொல்ல முடியுதில்லை— ஓ! எந்தன்

5 கன்னத்தில் அடிபட்டுக் கண்ணீர் விடும்வேளை
என்னை நினைத்தீரோ நீர்—அதை நினைத்தால்
உம்மை மறப்பேனே நான்— ஓ! எந்தன்

76

1 யேசு போதும் எனக்கேசு போதும்
எனக்கேசு போதுமெனக் கென்றைக்கும்—என்
யேசு மாத்திரம் போதுமெனக் கென்றைக்கும்—என்
யேசு மாத்திரம் போதும் எனக்கென்றைக்கும்

2 லோகத்தில் எனக்கு யாதொன்று மில்லாமல்
வியாகுலமடைய நேர்ந்தாலும்—நான்
வியாகுலமடைய ஸ்திதி நேர்ந்தாலும்—நான்
வியாகுலமடைய ஸ்திதி நேர்ந்தாலும்— யேசு

77

1 அருணோதயம் எழுந்திடுவோம்
பரனேசுவை ஸ்துதிப்போம்
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுறவாடவும்

2 இதைப்போன்றொரு அருணோதயம்
எமைச் சந்திக்கும் மனமே
ஆயென்னானந்தம் ஜோதி சூரியனும்
எந்தன் நேசமொழும்புந்நாள்

3 நன்றியாலுள்ளம் பூரித்திடுதே
அன்னையாமேசு காருண்யம்
ஒவ்வொன்றுய் இதைத் தியானம் செய்யவும்
எவ்வாறுமேற்ற சந்தர்ப்பம்

4 போன ராவினில் ஜீவித்தோர் பலர்
லோகம் விட்டுமே போய்விட்டார்
ஆயினும் நமக்கிந்த நாளதும்
தந்த நேசரை ஸ்துதிப்போம்

5 நானிர்வாணியாய் வந்தவண்ணம் நிர்
வாணியாயங்கு போகிறேன்
கூடச்செல்லவும் பூவிலொன்றுண்டோ
நாடிப்போமந்த நாட்டிற்கே

6 ஆயெந் நேசரின் அன்பையெண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்
ஆயெந் நேசரோர் நவ வான்புவி
தானஞ்செய்ததே ஆனந்தம்

7 பார்! தன் நேசரின் மார்பில் சாய்ந்தேகும்
யாரிவள் இவ் வனந்தாம்?
எந்தன் நேசரின் கூடச்செல்கின்றேன்
சொந்த ராஜ்யத்தில் சேரவும்

8 கொண்டல் மோதும் வறண்ட நாடதில்
நண்பரே கைவிடாதேயும்
ஆசையோடு நான் வாறேனென் றுக்கம்
பாசமாயங்கு தீர்த்திடும்

78

பல்லவி.

துதிப்பேன் யேசுவின் பாதம்
துதிக்கப்பெறு மற்புதரானதால்

அனுபல்லவி.

வணங்குவேன்! வணங்குவேன்
வணங்குவேன் அவர் பாதம் வீழ்ந்து நான்—துதிப்

1 பேயின் தலை மிதித்தவர்
நோயின் பெலனழித்தவர்
போற்றுவேன் போற்றுவேன்
போற்றுவேனேசு தேவசுதனே— துதி

2 வானம் பூமியுமடங்க
வல்ல அற்புதரானதால்
அற்புதர் அற்புதர்
அற்புதர் அவர் நாமமே அதை— துதி

3 ஜே! ஜே! ஜெயகுமாரன்
ஜெயம் பெற்று விளங்கினர்
ஜொலிப்பாரே ஜொலிப்பாரே
ஜொலிப்பாரே அவர் தாசர் என்றைக்கும்— துதி

4 தூதர் கூட்டங்கள் போற்றும்
தூய சுந்தராமிவர்
மகத்வமே! மகத்வமே!
மகத்வமே அவர் ராஜ்ய மென்றைக்கும்— துதி

5 செல்வேன் யேசுவின் பாதம்
சொல்வேனென் உள்ளத்தின் பாரம்
மகிழுவேன் மகிழுவேன்
மகிழுவேன் அவர் வார்த்தையிலென்றும்— துதி

79

1 கீதம் பாடியே பாதையில் திடன் கொள்ளுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்
நித்ய நாளுதயமாம் ராவொழிந்து போம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்

பல்லவி.

இன்னும் கொஞ்சம் நாள் இன்னும் கொஞ்சம் நாள்
யோர்தான் அலை தாண்டுவோம்
கண்டு சந்திப்போம் கொண்டல் ஒய்ந்திடும் அந்நாள்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்

2 கைக்கு நேரிடும் வேலை சீராய் செய்குவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்
திவ்ய கிருபையால் தினம் பெலன் கொள்ளுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்

3 சோர்ந்த மாந்தர்க்காய்ப் பாதை செவ்வை பண்ணுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்
ஓ! நம் நேச நெஞ்சின் செல்வாக்கை வீசுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்

4 துன்பங் கவலை நீக்கிக் களைப்பாறுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்
கண்ணீரொழியும் கானன் நாட்டில் வாழுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்

80

பல்லவி.

இலோக இன்பம் யாதும் வேண்டாம் இயேசு போதுமே
படைத்தேன் ஆவி ஆத்மா சரீரம் முற்றுமாக— இலோ

சரணங்கள்.

1 துதித்திடுவேன் இயேசு மகாராஜ ராஜனே
துதிப்பேன் பாடுவேன் என்றும் அவர் சமூகத்தினில்— இலோ

2 இடைவிடா ஜெபஜீவியம் விரும்பும் நேசரே
தருவாய் நல்குவாய் அளித்திடுவாய் ஜெப ஆவி— இலோ

3 மாயையான லோகமே உன்னில் ஏதுவுண்டு
சேர்ப்பாய் நித்திய பயங்கர நரகந்தனில்— இலோ

4 எந்தன் ஜீவன் சுகம் பெலன் எல்லாமேசுவே
மறப்பேன் என்னை ஒடுவேன் அவர் அடிச்சுவட்டில்— இலோ

5 மோட்ச லோக இன்பம்காண உள்ளம் துள்ளுதே
சேருவேன் அடைவேன் அத்தாய தாதர் கூட்டந்தனின்— இலோ

81

1 இம்மானு வேலின் ரத்தத்தால்
நிறைந்த ஊற்றுண்டே;
எப்பாவத் தீங்கும் அதிலல்
நிவிர்த்தியாகுமே—

பல்லவி.

நான் நம்புவேன்! நான் நம்புவேன்!!
இயேசு எனக்காய் மரித்தார்—மரித்தார்
பாவம் நீங்க சிலுவையில்
உதிரம் சிந்தினார்

2 மாபாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்;
மன்னிப்பும் மோட்சானந்தமும்
அடைந்து பூரித்தான்— நான்

3 அவ்வாறே நானும் யேசுவால்
விமோசனம் பெற்றேன்;
என்பாவம் நீங்கிப்போனதால்
ஓயாமல் பாடுவேன்— நான்

4 காயத்தால் ஓடும் ரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் பிரஸ் தாபிப்பேன்— நான்

5 பின் விண்ணில் நல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்;
அங்கென்னை மீட்ட நேசத்தை
கொண்டாடிப் போற்றுவேன்— நான்

82

பல்லவி

அன்பனே மகா அன்பனே—உந்தன்
அன்பாலே என்னை வென்றுயே

அனுபல்லவி

அன்பாலே முற்றும் நிறைந்தோனே
அன்பே, அன்பே, அன்பனேநீர்— அன்

1 உம்மைகண்ட நான் விட்டுப்போவேனே—இந்த
மண்டலம் பின்னல் செல்வேனே
உம்மாலல்லா திருப்பேனே
அருளே, அருளே, அருள் நிறைவேநீர்— அன்

2 விட்டவரே விண்ணைவிட்டவரே—என்னை
மீட்டுக்கொள்ளவே விட்டவரே
மட்டற்ற நாதர்கள் துதித்தோனே
துதியே, துதியே, துதியுமக்கே— அன்

3 வருவீரே இன்னும் வருவீரே—என்னை
அணைத்துக் கொள்ளவே வருவீரே
வான நாதர் தொனியோடே
செல்வேன், செல்வேன், மேகத்திலே— அன்

4 தொல்லைகள் வெகு தக்கங்கள்—எங்கள்
அல்லல்கள் முற்றுமறிந்தோனே
அற்புதமாயென்னைச் சுமந்தோனே
அல்லும் பகலும் துதிப்பேனே— அன்

83

பல்லவி

பூவினில் வந்த வின் தேனே—இவ்
வேழையைப் பாதத்தில் சேர்ப்பதற்காய்

அனுபல்லவி

இந்தக் காசினி மீதிலே ஞானப் பொன்னரசே
பானமாய்த் தீர்ந்தனீரோ—இராஜா

சரணங்கள்

1 கெத்சமெ னெயிலே தங்கமே உந்தனின்
அங்கத்தின் வேர்வையாலோ—இராஜா
தேவ சங்கத்தின் மத்தியில் பங்கமில்லாமல் நான்
துங்கனாய் வாழ்ந்திடவோ—இராஜா— பூவினில்

2 சேவகர் இயேசுவைக் கள்ளனைப்போலும்
வதைத்து உதைத்தனரோ—ரோமச்
கனமேலோக மத்தியில் வாதையில்லாமல் நான்
கானங்கள் செய்திடவோ—இராஜா— பூவினில்

3 ஒன்னார்கள் யூதரும் மன்னவா உந்தனின்
கண்களை கட்டினரோ—இராஜா
எந்தன் பாவக் கண்களில்லா ஞானக் கண்களிலால்
விண்புரு வாகிடவோ—இராஜா— பூவினில்

4 கல்வாரிப் பாதையில் பாரச்சிலுவையை
நொந்து சுமந்தனீரோ—இராஜா
மணப் பந்தரின் மத்தியில் சிந்தைப் பாரம் நீங்கி
சோபை நானுகிடவோ—இராஜா— பூவினில்

5 தலையோட்டு மேட்டிலே வண்டக் கள்ளர்களின்
மத்தியில் தொங்கினீரோ—இராஜா
நவ ஜோதிப் பிரகாசமாய்த் தங்க மாளிகையில்
நானங் குலாவிடவோ—இராஜா— பூவினில்

84

1 வாரும்! வாரும்! வரம்தாரும் திரியேகனும் தேவே!—இப்போ
காரும், காரும், கண்பாரும் பரிசுத்தகோவே!

2 கர்ஞரூரதின் கலியாணமதிலே தானே—ரசம்
சோஞ மாரிபோல வான்மாரி பொழிந்த—கோனே!— வாரும்

3 தாகம் பசியிஞல் வாடி வருந்தின காலே அப்பம்
ஆகப் புசிக்கவே யாவர்க்கும் பகிர்ந்தாற் போலே— வாரும்

4 பிரார்த்தனே யென்பதைப் பூர்த்தியாய் அறியாச் சீடர்க்கு
தாற்பரியமதாய் பிரார்த்தனே கற்பித்த போதா!— வாரும்

5 ஆர்க்கும் அளவிடக்கூடா துதித்த விண்ணேனே!—எங்கள்
நோக்கமறிந்திட்டும் ஊக்கமதருளும் தேனே!

85

1 தேவாதி தேவனின் தானங்கட்காக
ஆவலுடன் அடியாருமன்பாக
பூவினிற் புவி நேசன் முன்பாக
ஆவியிலும் அதிவணக்கமாக

பல்லவி

போற்றுவோம் போற்றுவோம்
போற்றிடுவோம் புண்ணியனே

2 அற்புதம் அற்புதம் அரூபியான
நற்பான் சொற்படி சாரூபியானர்
பற்பல பாதகர் பரனேநாடி
நித்தியமாக நிர்மலனேச்சோ

3 இம்மனு வானவர் அம்பரமேக
இம்மானு வேலனும் மனுவாகி
தம்மை வெறுத்துத் தரை மட்டும் தாழ்ந்து
நம்மை யணைத்திடத் தம்முயிர்விட்டனர்

4 காசினி யெங்கும் காணக் கிடைக்காத
வாசஸ்தல மொன்று உங்களுக்காக
ராஜனுடன் நாமிருப்பதற்காக
ஆயத்தமாக்கி அழைப்பே னென்றுரே

5 துன்பங்கள் சூழினும் இன்பமதாக்கி
அன்புடன் ஐயன் அடியாரைக் காத்து
இன்றுவரை இறையின் பாதம் நாட
ஈந்த கிருபை நினைந்து நட்போடு

6 பாத்திர மற்ற இப்பாவிகளிவ்வித
காத்திராத கனதானங்களைப் பெற
உத்தம மார்க்கமதான யென் யேசுவின்
சுத்த முகம் கண்டு என்று களிக்கலாம்.

86

1 வீரதீரமாய் நேரும் சீருமாய்
நின்று ஏகமாய் போர் செய்வோம்
பயமின்றியும், பின்வாங்காமலும்
கீதம் பாடியும் முன் செல்லுவோம்

பல்லவி.

சோம்பும் சோர்வும் நீக்கி வீரராக
யாரும் வாரும், யுத்தம் பண்ணுவோம்
செல்லும் வெல்லும் ஆரவாரமாக
யேசுநாதர் நம்பிப் போகிறோம்

2 கொடி ஏற்றுவோம், காளம் ஊதுவோம்
வாளும் வீசுவோம் போர்க்கோலமாய்
கர்த்தர் தாங்குவார், கூடப்போகிறார்
வெற்றி சிறப்பார் கெம்பீரமாய்— சோம்பும்

3 சேனைக் கர்த்தரே ! யேசு நாதரே
தேவரீரையே ஸ்தோத்தரிப்போம்
உம்மால் வல்லமை, உம்மால் மகிமை
உம்மால் வெற்றியும், கண்டடைவோம்— சோம்பும்

87

பல்லவி.

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே யேசு ஸ்வாமிக்கு ஸ்தோத்திரமே
தோஷி எனேரட்சித்த பரிசுத்தர்க்கு ஸ்தோத்திரமே.

1 கோடா கோடி தூதர்கள் சபைகூடி நடனமாடி
பாடி உம்மைத் துதிக்க அடியானும் உம்மைத் துதிப்பேன்

2 கேரூபீன் சேராபீன்கள் திருச் செட்டைகளால் மூடி
நேராய் உம்மைத் துதிக்க நீசன் யானும் உம்மைத் துதிப்பேன்

3 கன்னியர் கீதம் பாடி யேசு கர்த்தனேயே போற்றி
உன்னியுமைத் துதிக்க அடியானும் உம்மைத் துதிப்பேன்

4 பரிசுத்தவான்கள் சங்கம் எங்கள் பார்த்திபன் யேசுவையே
தரிசித்துப் போற்றிடவே தாசன் யானும் உம்மைத் துதிப்பேன்

5 மூப்பர்கள் சுற்றிநின்று எங்கள் முன்னவன் யேசுவையே
ஆர்ப்பரித்துத் துதிக்க அடியானும் உம்மைத் துதிப்பேன்

6 தாழ்த்தித் தலைகுனிந்து ரத்தச் சாட்சிகள் கூட்டமெல்லாம்
வாழ்த்தி யுமைத்துதிக்க அடியானும் உம்மைத் துதிப்பேன்

7 பூமியின் தாவரங்கள் புஷ்பம் பூத்துத் துளிர் மலர்ந்து
ஆர்ப்பரித்துத் துதிக்க அடியானும் உம்மைத் துதிப்பேன்

8 வானத்தின் ஜோதி யெல்லாம் தேவ மைந்தனேயே போற்றி
ஞானத்திலுல் துதிக்க பேதை யானும் உம்மைத் துதிப்பேன்

9 ஆயிரம் நாவிருந்தால் நான் ஓடிப் பரியடிப்பேன்
அன்பின் செட்டையிருந்தால் யேசு அண்ணலிடம் செல்லுவேன்—
ஸ்தோத்திரம்

88

1 காலை ஒளி தோன்றவே, காரிருளும் நீங்கவே
கர்த்தன் வந்து கன்னியை, வீடு சேர்ப்பார்;
தேவ வாசம் நம்முடன், புது எருசலேமிலே
கண்ணீர் யாவும் துடைப்பார், காலை வேளை.

பல்லவி.

அல்லேலூயா ! அல்லேலூயா !!
முகா முகமாய்க் காணலாம், பூவில் ஒடி முடிந்தபின்
அல்லேலூயா ! அல்லேலூயா !!
காண்போம் அவர் கிருபையால் அல்லேலூயா

2 கண்ணிமைப் பொழுதிலே, காசினி விட்டேகுவோம்
காகளம் தொனிக்குமே, அல்லேலூயா !
கரை சேர்வோம் கடைசியாய், பயம் துக்கம் போகுமே
ஆளுவோம் யேசுவுடன், அல்லேலூயா !

3 ஆட்டுக்குட்டி சியோனில், கூட்டர் பரிசுத்தர் தான்
நெற்றியிலிருப்பது தேவநாமம்
கூட்டமாகச் சேர்ந்தவர், புதுப்பாட்டுப் பாடுவார்
முதற் பலனிவர்களே, அல்லேலூயா!

4 சந்தோஷக் கீதங்களோடு, சந்தோஷிப்போம் நாமெல்லோரும்
மைந்தன் மணநாளதில், அல்லேலூயா!
மகிமை ராட்சியங்களில் தரித்து வெண்மை வஸ்திரம்
போரில் வென்றோர் வாழ்வோம், அல்லேலூயா! -அல்லேலூயா

89

1 எப்போதும் யேசுநாதா உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக நான் வாக்களித்தேன்
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர், அப்போது அஞ்சிடேன்
முன் சென்று பாதை காட்டும், நான் வழிதவறேன்
பாதை காட்டும் பாதை காட்டும், பாதை காட்டும் நான் தவறேன்

2 பூலோக இன்பம் செல்வம், வீண் ஆசா பாசத்தால்
என் ஆத்மா மயங்காமல், தெய்வீக பலத்தால்
நீர் துணை நின்று தாங்கும், என் அருள் நாயகா
நீங்கணுகாமல் காரும், மாவல்ல ரட்சகா
நின்று தாங்கும், நின்று தாங்கும் நின்று தாங்கும் அருள்நாதா

3 ஆங்காரம் சுயசித்தம் தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி, நான் தடுமாறினால்
நீர் பேசும் அருள்நாதா, கொந்தளிப்படங்கும்
உம்நேச சப்தம் கேட்டு என் ஆவி மகிழும்
நீர் பேசும், நீர் பேசும், நீர் பேசும் என் யேசுவே.

4 பின்பற்றினால் விண் வீட்டில், பேரின்பம் பெறுவீர்
என்றும் தம் சிஷர் நோக்கி, நீர் வாக்களித்தீர்
அவ்வருள் வாக்கை நம்பி. இவ்வேளை அடியேன்
முற்றுமாய் என்னைத் தத்தம், இவ்வேளை அளிப்பேன்
வாக்கை நம்பி, வாக்கை நம்பி, வாக்கை நம்பிப் பின்செல்லுவேன்

5 ஓயாமல் பெலன் தாரும், உம்மடிச் சுவட்டில்
கால்வைத்து நடந்தேகி, பின் பற்றுகையில்
நீர் வழிகாட்டி என்னை, கைதாங்கி வருவீர்
அப்பாலே மோட்ச வீட்டில், பேர்வாழ்வை அருள்வீர்
மோட்சவீட்டில், மோட்சவீட்டில், மோட்சவீட்டில் வாழ்வருள்வீர்

90

1 எந்தன் யேசு உன்னதத்தில் அன்புள்ளோராய் வாழும்போது
ஏழையேன் கலங்குறேன் இப்பூமியில்?—அதால்
என்றுமவர் கிருபைமட்டும் போதுமே

2 இன்னல்களாம் குன்றுதனில் பின்னிடாமல் ஏறுதற்கு
இயேசு என் கால் தன்னை மான்கால் போலாக்கி—என்னை
இன்பமாயென் பாதையோடச் செய்குவார்

3 ஆரும் துணை இல்லை என்றே ஏகனாய் நான் ஆனேன் என்றே
என் மனதில் எண்ணினேன் ஓர் நாளுமே—இயேசு
என்னுடனில்லாமல் எங்கு போயினார்?

4 என்னருமை தோழரன்றே செய்வதுதச சங்கமெல்லாம்
இப்போதவர் என் பிதாமுன் நிற்கிறார்—பின்னால்
என்னையும் தம் ஊழியத்தால் தேற்றுவார்

5 வியாகுலம் என் வீட்டைவிட்டு காட்டிலோடப் பண்ணிடினும்
அங்கேயொரு தூதன் என்னைச் சந்தித்துச்—சூடாம்
அப்பமும் ஜலமும் தந்து தேற்றுவான்

6 வருந்நாளுக்காக வீணாய் என்மனம் நொந்ததென்ன புண்ணியம்
என்னைத் தினம் போஷிப்பவரில்லையோ?—இன்னும்
எழையேன் அவரைமட்டும் நம்புவேன்

7 கவனிப்பாய் காகத்தை நீ விதைப்புண்டோ? அறுப்புண்டோ?
லீலியின்றிப் போற்ற வில்லையோ? நாதன்—லீலிப்
புஷ்பங்களில் வண்ணமையைத்தான் வைத்ததார்?

8 பத்மு தீவில் ஏகனாய் நான் தங்கிடினும் பயப்படேன்
வானந்திறந் தேசுநாதர் ஜோதியாய்—என்னைப்
பரதீசில் ஆவிக்குள் எடுப்பாரே

9 ஹாமகேசா! கருணேசா! பொன்னுநாதா! நீரெனக்காய்
வேண்டியதெல்லாம் தயவாய்த் தந்ததால்—நான் என்
வாணாளெல்லாம் உம்மைப் போற்றிப் பாடுவேன்.

91

1 ஸ்தோத்திரம் யேசுநாதா உமக்கென்றும் ஸ்தோத்திரம் யேசுநாதா
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திரு நாமத்தி னுதாவில்.

2 வானதூதர் சேனைகள் மனுகுல கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடி ஸ்துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு

3 இத்தனை மகத்வமுள்ள பதவி இப்புழுக்களாம் எங்களுக்கு
எத்தனை மாதயவு, நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்!

4 நின் உதிரமதினால், திறந்த நின் ஜீவ புது வழியாம்
நின்னடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்.

5 இன்றைத் தினமதிலும் ஒருமித்து கூடவும் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரமே!

6 நீரல்லால் எங்களுக்கு பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில், வேறே யொரு
தேட்டமில்லை பரனே.

92

பல்லவி

இயேசு என் அஸ்திபாரம், ஆசை எனக்கவரே
நேச முசிப்பாறுதல் இயேசுவில் கண்டேன் யானும்

1 என்ன மதாரம் அவர் நன்னய நாமச் சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே

2 பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் யேசிருக்கையில்

3 வியாதியால் எந்தனது காயங் கெட்டுப் போயினும்
மாயத் தோற்றத்தை யேசு நாயகன் மாற்றிடுவார்

4 லோகம் என்னை எதிர்த்துப் போவென்று சொல்லிடினும்
சோகம் அடைவேனோ? என் ஏகன் எனக்கிருக்க

5 என்னென்ன மாயலோகக் கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமா யேசு என்னை கடத்திடுவார்

6 பாவத்தால் என்னில் வந்த சாபக் கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்

7 ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை எனும்
நேச உறுதியுரை இயேசு எனக்களித்தார்—இயேசு

93

1 தந்தையும் நீர், என் தாய் தமர் நீர், எனக்குள்ள சகலமும் நீர்
மணவாளன் நீர், மகிமையும் நீர், மற்றுமுள்ள பெருக்குகள் நீர்

2 செல்வமும் நீர், சிறப்பும் நீர், சந்தோஷ பாக்கியம் நீர்
சமாதானம் நீர், சகலமும் நீர், வற்றாத சமுத்திரம் நீர்

3 அன்பும் நீர், அழகும் நீர், அளவில்லாத கருணையும் நீர்
தங்கமும் நீர் தயவும் நீர் தாழ்மையுள்ளோர்க்குத் தாதனும் நீர்

4 ஆடையும் நீர், ஆபரணம் நீர் விலைமதியாதுள்ள மாலையும் நீர்
ரத்தினம் நீர், வைரமும் நீர், நீதியுள்ளோர்க்கு நேர்மையும் நீர்

5 ஆறுதல் நீர், தேறுதல் நீர், அன்புள்ளோர்க்கு ஆஸ்தியும் நீர்
ஆருமற்ற அகதிகட்கு, அரணான அடைக்கலம் நீர்

94

1 அன்பரின் நேசரே உம்மண்டையில்
இன்பமாக உந்தன் பாதையோட;—
'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமே'

2 துன்பப் பெருக்கிலே சோர்ந்திடாதே,
அன்பரறியாமல் வந்திடாதே;—
கண்விழிபோல் நான் காத்திடுவேன் கனிவுடன்.

3 முட்செடி போலப் பற்றிடுமே,
மோசமடையாய் நீ முற்றிலுமே
எங்கிடாதே நீ—நேசர் அதில் தோன்றுவாரே.

4 சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும்
வியாகுலம் உன்னை விரட்டிடினும்;—
ஆ! நேசரே தம் இன்பசத்தம் ஈந்திடுவார்.

5 நானச் சிலுவையில் ஏறிட்டேனே
உந்தனுக்காய் கஷ்டம் பட்டிட்டேனே;—
துன்பமூலமாய் எய்திடுவாய் இன்பக் காலனை

6 தாழ்மையில் மேன்மை நான் கண்டிடவோ;—
பன்னிரு சீஷர் பாதம் கழுவி;
பாவ உலகில் இடமில்லை சாய்ந்திடவே.

7 சொந்த ஜீவனை என்னிலீந்து
அன்பில் இணைத்தாரே வல்லமையால்;—
எந்தன் ஜீவனை மற்றோருக்காய் ஈந்திடவே.

8 மாயையான ஈலோக மதில்
மாய்ந்தழியும் இம்மாந்தரன்பு;—
நேற்று மின்றென்றும் மாறுதவர் நேசர் தாமே

9 வஞ்சனையான இப்பார்தலமே
வஞ்சிக்குமே உன்னைத் தந்திரமாய்;—
வாஞ்சித்திடாதே மோசமான இப்பார்தலத்தை.

95

1 இஸ்ரவேலின் சேனைகட்கு, முன்னடந்த தெய்வமே!
எங்கள் சேனபதியாக, எங்கள் முன்னே செல்லுமே.

2 உம்மை நம்பி உம்மைச் சார்ந்து, உம்மை மகிமைப்படுத்தவே
அடியார் தொடுக்கும் வேலையை நீர், ஆசீர்வதிக்க வேணுமே

3 ஸ்நானகன் யோவானைநோடே, ஸ்நானம் வாங்கும். வேளையில்
வந்தமர்ந்த வான்புறாவே! வாரும் இந்த நேரத்தில்

4 அன்று நூற்றிருபது பேர் சென்றதோர் மேல் வீட்டினில்
வந்தமர்ந்த அக்கினியே! வாரும் இந்த நேரத்தில்

5 சமுத்திரத்தை ரண்டாகப், பிளந்த எங்கள் தெய்வமே!
உலர்ந்த தரையை எங்களுக்காய், ஒழுங்கு செய்யவேணுமே

6 ஆறு லக்ஷம் இஸ்ரவேலர், அப்பம் தண்ணீர் குறைவின்றி
நாற்பதாண்டு வனந்தரம், நடத்தின எம் தெய்வமே.

7 யோசுவாவின் போர்க்களத்தில், வீரரைய் முன்நின்றவா
சந்திர சூரிய மண்டலங்கள், தரித்து நிற்கச் செய்தவா!

8 ஏழை எலியாவின் மேலே, வல்லமையாய் நின்றவா!
பாரில் பாகால் கோபுரங்கள், அழித்துப்போடும் தெய்வமே

9 வல்லமையாய் யேசுநாதன், கல்லறை விட்டெழுந்திட
வல்லமையாய்க் கிரியை செய்த, வல்ல தேவ ஆவியே!

10 ஆதிக் கிறிஸ்து சீஷர் முதல், இன்று வரை பக்தரை
ஆசீர்வதித்து வல்லமையாய், ஆளுமெங்கள் தெய்வமே!

11 புதிய வானம் புதிய பூமி, ஆக்கி ஆள வருவோரே!
புதிய எருசலே மீதில், ஏழைகளைச் சேருமே.

96

பல்லவி

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

அனுபல்லவி

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் எனையும் உமக்காக
கொடுத்தீர் உம்மையும் எனக்காக — ஸ்தோத்

1 வல்ல வான ஞான் விஞ்ஞை
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறைவும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலையும் எனையும் மீட்டீரே — ஸ்தோத்

2 நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவி யாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க் குந்தன் தயவாலே — ஸ்தோத்

3 கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னு எமக்கும் நீர்தானே
எந்நாளும் எங்கள் துணை நீரே — ஸ்தோத்

4 தீயோன் அம்புகள் தாக்காதே எமைத்
துதியே துதியே துதித்திடுவேன்
தேவா நீர் உந்தன் சிறகாலே
தினமும் மூடிக் காத்தீரே
தீதணுகாதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன் — ஸ்தோத்

5 அல்லேலூயா தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியா திருப்பேனே
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையும் துதித்திடுவேன் — ஸ்தோத்

97

பல்லவி.

மகிழ்வோம் யேசுவில் மகிழ்வோம். —பரன்
மகிமை யுற்றுமே மகிழ்வோம்

அனுபல்லவி

மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம், மகிமையில் மகிழ

சரணங்கள்.

1 வானில் யாவரும் மகிழ — யேசு
வாரும் என்றுமே பகர
மாறுவோர்க் கொரு சிகரம் —மன
தாரத் தற்பரனருள
மகிமை, கனமும், மகிமையில், மிகவும் மகிழ — மகிழ்

2 சுத்த ஜீவியமுடைய — தேவ
புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருஷ்டிகளுடைய — மா
கர்மங் களன்றகல
மகிழும், தினமும், மகிபரின் தினமும், வரவே — மகிழ்

3 அடிமையானவர் கூடி —பரன்
அளித்த பொன் முடி சூடி
ஆயிரமாண்டுகளாக — கடம்
மாறியே அரசாள
மயிலும், குயிலும் ஆடும், புலியுடன் வாழ— மகிழ்

4 வானம் பூமியுமகல — ஈவ
வானம் பூவுமே நிகழ
சாபம் பாவமும் சகல — கடும்
சோக மோடியே மறைய
சுகமும், ஜெயமும், சகலரும் சுகித்து, மகிழ — மகிழ்

5 பொன்னுல் வீதிகளுடைய — அரும்
சொல்லால் உரைப்பதற்கரிய
மின்னும் வச்சிர வொளியே —நார்
கண்டு நடந்திடு மருளே
கண்ணீர், கவலையும் நண்ணு நகரினில், மகிழ— மகிழ்

6 பளிங்கு போல் ஜீவநதியே— இரு
கரையும் ஜீவனின் மரமே
பசியும் தாகமுமிலையே — அங்கு
புசிக்க ஜீவனின் கனியே
புசிப்போம், ருசிப்போம், யேசுவில், நித்தியம், மகிழ— மகிழ்

7 சுத்த ஆவியும் சுதனும் — செய்த
மீட்பின் செயலைப் பாடும்
மற்றும் தூதர் கணமும் அங்கு
உற்று உள்ளம் மகிழ
போற்றிப் புகழ்வோம், நாதன், செயலில் மகிழ — மகிழ்

98

பல்லவி

என் ஆத்துமாவே என் முழு உள்ளமே
உன்னதன் உத்தம நாமத்தை ஸ்தோத்தரி

அனுபல்லவி

வையகத்திலுனக்கு மெய்யன் மனதிரங்கிச்
செய்த உபகாரம் மறவாமல் —என்

1 பாவத்திலமிழ்ந்திப் பிணியினுல் வருந்திச்
சாபக்குழியில் வீழ்ந்து ஆபத்தில் நிற்கையில்
மீட்டுனக்கிரக்கம் கிருபை எனும் முடியைச்
சூட்டிய கர்த்தனே நிதம் நினைந்து— என்

2 பெற்ற பிதாப்போல் பரிதபித்தணைப்பார்
பற்றிடும் அடியோர் முற்றும் பயப்படில்
அக்கிரம மெல்லாம் கர்த்தன் கருணையால்
ஆக்கினையின்றி அகற்றிடுவார் — என்

3 மாமிச மெல்லாம் வாடும் புல்தானே
பூவில் வளர்ந்திடில் வயலின் பூவாமே
கர்த்தன் கருணைக்குக் கரையென்பதில்லையே
நித்தியமாக நிலைத்திடுமே— என்

4 துதித்திடுவீரே தூதர் கணங்களே
ஜோதியாயுள்ளவர் கோடிசேனைகளே
ராட்சியங்களிலவர் காட்டிய கிரியைக்காய்ச்
சாட்சிகள் நாம் துதி சாற்றிடுவோம்— என்

99

பல்லவி

ஆதிபரன் யேசுவைப் பார்
அதிரூப சொரூபனின் திருமுகத்தைப்பார்—ஆதி

சரணங்கள்

1 ஜோதியே வருணு துலங்கியே கருணு
நீதி நெறி தவறாத நேர்மையுள்ள சத்ய சீலன் — ஆதி

2 தினமும் மன்றாடி துதிகளைப் பாடி
துன்பமற்ற இன்பமுற்ற ஜீவியத்தை வாஞ்சித்துக்கொள்—ஆதி

3 காலையில் எழுந்து கர்த்தரைப் பணிந்து
கருணையுள்ள பராபரன் மத்தியில்வரவே காத்திருப்போம்—ஆதி

4 பரகதி திறந்து பாரினில் பிறந்து
நரர் வடிவாய் வேடம்பூண்ட ராஜ உல்லாசனே வாழ்த்திடுவோம்
— ஆதி

5 அமரர்கள் போற்றும் அழகுள்ள கோமான்
அருள் பெற்றோர் தினம் நிரைவுற்றோராய் அன்புடன் தரிசிக்
கும்—அதி சொரூபன் —ஆதி

100

1 அதிகாலையில் விழித்தெழும்பி மகிபன்னேசுவைப் போற்றுவோம்
ஆவியில் உற்சாகமாக அன்பர்பாதம் வணங்கியே
ஆத்தும நல் நேசரையே புகழ்ந்து போற்றுவோம்

2 காலைதோறும் புதியதான கிருபை இன்று பெற்றிட
களித்துமே இம் மேதினியில் ஜீவபாதை ஓடிட
காட்சியாய் மிக மாட்சியாய் நாம் துதித்துப் போற்றுவோம்

3 மரியாளைப்போல் உள்ளம் கனிந்து அதிகாலையில் தேடினால்
பிரியமாகக் காட்சிதந்து அகமகிழச் செய்வாரே
புகழ்ந்துமே அகமகிழ்ந்துமே எம் நேசரென்போமே

4 கண்டிடுவோம் காலைதனில் கருத்துடனே தேடினால்
கண்டனரே காலையிலெம் முன்னோர்களும் தேடியே
மகிழ்ந்தனர் அவர் புகழ்ந்தனர் பரன் பாதம் பணிந்தனர்

5 வழி இதுவே நடவும் இதில் எனவே அன்பர் பேசிடும்
இன்பமான வாக்கைக்கேட்டு இன்பக்கானான் செல்லவே
விழித்துமே உள்ளம் மகிழ்ந்துமே யாம் துதித்துப் போற்றுவோம்

6 தூதர்களாம் சேரூபீன்களும் சேராபீன்களும் சேர்ந்துமே
தூயர் தூயர் தூயர் என்று துதித்துப் புகழ்ந்தேற்றியே
தூயரை நல் நேயமாகப் பணிந்து நிற்கவே

7 துதித்திடுவோம் நேசரையே துதித்த லின்பமானதால்
துதியில் அவர் வாசம் செய்து துதியில் பிரியம் கொள்ளவே
ஸ்தோத்திர நற் பாத்திரரை துதித்துப் போற்றுவோம்

———

101

பல்லவி

அனுதினம் தொழுதேற்ற
அருள்புரி இரட்சா பெருமானே—அனு

அனுபல்லவி

தினதயாளா, தியவர்க்காளாய்
காடுமலைசென்ற, கடுந்தவவாளா—அனு

சரணங்கள்

1 மன்னவனே விண்ணதிலே
சொன்னபடி வானோர் சாற்றும்
ஜெபம் செய்து காண பதிதனில் நாளு
அனுதினம் வானோர் போல் ஜெபம் செய்து சாற்ற—அனு

2 விண்மணியென் பொன்மணியே
கேரூபீன் சேராபீன் போற்றும்,
உனைமறப்பேனே கனவிலும் நானே
புண்ணிய நேசரின் திருப்பாதம் சாற்ற—அனு

3 தூபஸ்தம்ப வாசனையே
தூயவர் பணிந்து சாற்றும்
தூர்க்கந்தம் நீங்க நற்கந்த மோங்க
பொற்கரம் கொண்டெமைப் பரிமளிப்பாயே—அனு

4 எருசலேமின் திருவிளக்கே
என்றென்று மாறுச்சுடரே
மகிமையைக்காண அன்பராய்த்தோண
ஊரீம். தும்மீம் போல துலங்கச் செய்வாயே—அனு

102

1 அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா பாடிடுவோம்
அல்பகல் ஆர்ப்பரித்து
அன்பரோடகமகிழ்வோம் —அல்

2 கண்ணே மணிப்புறுவே காதல் சீயோனின் மகளே
கையில் பதித்தேனுன்னை
கானக லீலிப்புஷ்பமே — அல்

3 தாய் மறந்தாலும் சேயே நான் மறவேன் என்றவரே
தற்பரா உந்தன் வாக்கால்
நற்பரனின் பாதம் வந்தேன் — அல்

4 சுரர் வணங்கும் நிதி சுத்தருக்கே நிதமும் துதி
நாரூபமான நிதி
நம்மைமீட்ட புண்ணிய நதி — அல்

5 தூதர்கள் ஆர்பரிக்க, சேராபீன்கள் ஸ்தோத்தரிக்க
பாவலர்கள் துதிக்க
பரிசுத்தரின் மனங்களிக்க — அல்

6 மாமிசம் அடங்கி நிற்க, வல்ல சர்ப்பம் ஒடுங்கி நிற்க
நியமிக்கப்பட்டோர்களே
நிறுத்திடுவார் இமைப் பொழுதில் — அல்

7 கண்ணீர் கவலையில்லை, நண்ணிவரும் நோயுமில்லை
கன்னியர் அருந்திடுவார்
மாதம் ஒரு புதுக்கனியை — அல்

8 வெற்றிக் கொடி பிடித்து வெண்ணங்கி தான் தரித்து
சுற்றி நின்று பாடிடுவார்
நெற்றில் புதுநாமமுள்ளோர் — அல்

103

பல்லவி.

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயாவே
அல்பா ஒ மேகாவுக் கல்லேலூயாவே.

சரணங்கள்

1 ஜீவனுள்ள சிருஷ்டிகளின் ஜீவநாதனே
ஜீவிகள் மகிமை சாற்றும் ஜீவதேவனே
தினமடியோர் மனமடிவோர் சிந்தை காவனே
பெரும் மந்தை மூவனே — அல்

2 பெந்தெக் கோஸ்தின் வல்லவனே விர்தை ஆவியை
வந்திருக்கும் மைந்தர்மேலே ஈந்திடும் நீரே
இதோ வந்தனம் சந்ததம் மங்களம் ஏசுஜோதியே
பெருங்காவல் நீதியே — அல்

3 அபயமென்றடி பணிந்தோம் குவலயம் மீதே
தாபமீந் தடியவரை தாபரிப்பீரே
தயவுடனே அருள் மயமே தயை கூருமே
பெரும் பங்கந்தீருமே — அல்

4 ஞானமிதில் அரசு செய்ய ஞானமீயுமே
அலகை வென்று அநுதினம் உலகிலாளவே
மா மகிமை மங்களமே மகிமை வாசமே
பெருந்துய்ய நேசமே — அல்

104

1 ஆயுள் முழுவதும் போற்றுவேன்
அல்லேலூயா, மகிமை!
துதிகீதம் பாடுவேன், கர்த்தருக்கே.

பல்லவி

ஸ்தோத்திரி என் உள்ளமே
அல்லேலூயா, மகிமை
ஸ்தோத்திரி என் உள்ளமே கர்த்தரையே

2 பாடுவேன், நான் பாடுவேன்;
அல்லேலூயா, மகிமை!
துதி, ஸ்தோத்திரம் பாடுவேன்; போற்றிடுங்கள் — ஸ்தோத்

3 கர்த்தரையே போற்றிடுங்கள்
அல்லேலூயா, மகிமை!
நல்லவர் மகா நல்லவர்; போற்றிடுங்கள் — ஸ்தோத்

4 கர்த்தரை நான் நோக்குவேன்,
அல்லேலூயா, மகிமை!
துதிக்கெல்லாம் பாத்திரர்; போற்றிடுங்கள் — ஸ்தோத்

5 நம்புவேன், நான் கலங்கேன்;
அல்லேலூயா, மகிமை!
கர்த்தர் என் பக்கமானார்; போற்றிடுங்கள் — ஸ்தோத்

105

பல்லவி

ஆனந்தங்கொண்டு அகமகிழ்வுடனே
அன்பரைப் பாடிடுவோம்

அனுபல்லவி

அவர் அன்பின் பாதத்தை அனுதினம் தேடி
ஆவியில் ... நிறைந்திடுவோம் ... ஆனந்தங்

சரணங்கள்

1 பாவத்தில் மாண்ட பாவிகளெம்மைப்
பரிவுடன் இரட்சித்தாரே —அவர்
கிருபையை நாடி, ஓடிவா பாவி !
உன்னையும் இரட்சிப்பாரே — ஆனந்தம்

2 சுத்த ஜீவியம் கொடுத்திட யேசு
சிலுவையில் மரித்தாரே ... அவர்
சுத்தரத்தமே, சுத்திகரிக்கும்
பாவத்தை முற்றுமாக ... ஆனந்தம்

3 தேவன்பில் வளர தேவாவி தந்தார்
தேவன் கிருபையாக ... அவர்
கிருபையை நாடி ஓடியேவந்து
ஆவியை பெற்றிடுமேன் ... ஆனந்தம்

4 துக்கமுமில்லே துன்பமுமில்லே
இயேசுவின் தொண்டர்க்கு — அவர்
எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருந்து
ஆற்றியே தேற்றிடுவார் ... ஆனந்தம்

106

1 ஆரிவராரோ காவினில் அலறுவதிவ ராரோ?
காரிருளதிலே ஆ — ஆ
மனம் நோகுதே காயும் சாடுதே
அகம் வாடுதே முகம் மாறுதே

2 தேடுவதேனை யூதரும் தொலைத்திடும் வகையேனை?
கேதமற் றோரிவரே ஆ — ஆ
ஜெகதீசனே மெய்தீபனே
என் ஜீவனே ஏக ரூபனே

3 வேண்டுதல் கேளீர் பாவிக்காய் வேண்டிடும் தொனி கேளீர்
விண்ணவனே இவர் ஆ — ஆ
அண்ணலே விண் மன்னனே
கண்ணீரேகுதே கரம் சோருதே

4 பலியாமே வாரிவரோ பாவத்தின் பலனிவர் மேல் தானே
அலறுயோ மனம்— ஆ — ஆ
பலட்சாரமே வடிந் தேகுதே
பலியாகவோ இவர் பாரிலே

5 தொல்லைகளடைந்தோ கொல்கதாவில் மரமீதறுந்தோ
கள்வனன்றே இவர் ஆ — ஆ
உதிரமுடன் ஜலமோடுதே
உள்ளம் பாவிக்காய் உருகிடுதே

6 பாடுகள் சகித்தோ பகைவரின் பாவங்களை யெடுத்தோ
பரிகரித்தீரோ ஆ — ஆ
மனமாற்றவும் எமை மீட்கவும்
பலியானதால் நிதம் வாழ்த்துவோம்

107

பல்லவி

ஆனந்தங் கொண்டு அகமகிழ்வேன் — எனக்
கானந்தம் பரமானந்தம் — ஓ...ஆனந்

சரணங்கள்

1 அருமை நேசர் கெம்பீர
மகிமையோடே வரும் போது— ஓ...ஆனந்

2 பிரதான தூதன் தொனித்திடவே
மங்கள மகிழை துலங்கிடுமே— ஓ...ஆனந்

3 வானத்திலிருந்து மண்வாளன்
மங்கையை யெடுக்க வரும்போது— ஓ...ஆனந்

4 அன்பினெக்காளம் தொனித்திடவே
ஆனந்த நாட்டம் கொண்டிடுவேன்— ஓ...ஆனந்

5 மண்ணிலுறங்குவ ரெழுந்துயர
அண்ணல் அருமை துலங்கிடுமே— ஓ...ஆனந்

6 ஜீவனேடிருக்கும் சுத்தரோடு
மேகரதம் நான் செல்லும்போது— ஓ...ஆனந்

7 ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே
இயேசு பெருமான் சமூகமதில்— ஓ...ஆனந்

108 பல்லவி

இராவும் பகலும் நின் நாமம் ஸ்துதி— திவ்ய
இராகத் தோடே பாடி வாழ்த்திடுவேன்

1 வீணையாலும் எந்தன் நாவினாலும்—சற்றும்
நாணமில்லாதின்று வாழ்த்திப்பாடுவேன்— தினம்

2 காயத்தாலும் எந்தன் கண்களாலும்—இரு
காதுகளாலும் உம்மை வாழ்த்திப்பாடுவேன்— தினம்

3 காலினாலும் இருகரங்களாலும்—எந்தன்
தலையினாலும் வாழ்த்தி ஸ்தோத்திரம் செய்வேன்— தினம்

4 வாத்தியத்தாலும் எந்தன் இராகத்தாலும்—தாள
மேளத்தாலும் உம்மை வாழ்த்திப்பாடுவேன்— தினம்

5 புத்தியாலும் எந்தன் சக்தியாலும்—பூர்ண
சித்தத்தாலும் உந்தன் கீர்த்திபாடுவேன்— தினம்

6 சிருஷ்டிகரும் எந்தன் இரட்சகரும்—எந்தன்
ஜீவநாதரும் நீரே எப்போதுமே— தினம்

---

109 பல்லவி

இரட்சிப்பின் ஆனந்த சந்தோஷங்காண ஓடிவா
பட்சமுடனே இரட்சகரண்டை ஓடிவா

1 பாவம் போக்கும் நதி அவர்பக்கம் நின்று ஓடுது
ஆவலுடனே இரட்சகரண்டை ஓடிவா— இரட்

2 உன்பாவப்பாரம் நீக்க அவர் உதிரம் சிந்தி அடிகொண்டார்
அன்புடனே இரட்சகரண்டை ஓடிவா— இரட்

3 கல்வாரி மேட்டில் ஐந்து காயங்காட்டி நிற்கிறார்
நல்மனத்துடன் இரட்சகரண்டை ஓடிவா— இரட்

4 ஆசீர் வாதத்தைக் கூறி அன்புடனே அழைக்கிறார்
நேசமுடனே இரட்சகரண்டை ஓடிவா— இரட்

5 பாவியுன்னை ஈடேற்றப் பரலோகம் விட்டாரே
தாவியே நீ அவர்பாதம் தேடி ஓடிவா— இரட்

110

பல்லவி

உலகமும் சதமென்ற எண்ணியிராதே.
பலவித பாதாள வலையிற் சிக்காதே.

சரணங்கள்

1 மாதாபிதா மற்றும் செல்வமிருந்தாலும்
மரணம் வந்து உந்தன் வாழ்வைக் குலைக்கும் — உல'க

2 நரகத்தின் புழுக்களும் நெருப்பு மட்டுமல்ல
பரலோக கீதங்கள் உன்னை வதைக்கும் — உலக

3 சாவின் அகோர காட்சி நெருங்கையில்
பாவி நானென் செய்வேனென்று திகைப்பாய் — உலக

4 பாவ விமோசனமிப்போதே பெறுவாய்
தாவி உன் மீட்பரின் பாதத்தைத் தேடு — உலக

111

1 எழுந்திடுவீர் நீர் வாலிபரே நாமும்
ஏசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
இன்னம் கொஞ்சம் நேரம் ஏசு வருந் நேரம்
நித்திரை செய்யாமல் விழித்திருப்போம்.

பல்லவி

எழுந்திடுவோம் நாம் எழுந்திடுவோம்
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்.

2 விழித்திடுங்கள் நீர் சகோதரிகளே
விளக்குகள் எரிய எண்ணை ஊற்றுவீர்
மணவாளன் வரும் சத்தம் கேட்பதாலே
கன்னியர்கள் நாமும் எழுந்திடுவோம் — எழுந்

3 அப்பம் ஐந்தும் மீன்கள் இரண்டுமே யாலும்
ஐயாயிரம் அருந்த அன்பர் பகிர்ந்தார்
கைப்பொருளே யளித்த அச்சிறுவன்போல
எப்பொருளும் இயேசுவுக்கீயும் பாலரே — எழுந்

4 நித்திரைகள் வேண்டாம் முதியோரே நீரும்
நேரம் வேளை தன்னை நிதானிப்பீரே
தீர்க்கர் முற்பிதாக்கள் செப்பியவுரைகள்
தினம் நிறைவேறக் கண்டதில்லையோ — எழுந்

5 சஞ்சலங்கள் வேண்டாம் தாய்மாரே நீரும்
தைலாபிஷேகம் செய்ய வருவீர்
புதையல்கள் போன்ற புத்திராம் பாணி
பொன்னேசர் பாதம் நீர் உடைத்திடுவீர் — எழுந்

6 போதகப் பிதாக்களே புதுப் பெலன் அடைவீர்
புறம்பான வேஷம் போய் ஒழியுமே
ஆதித்திருச்சபையின் அனல் வேண்டுமானால்
ஆத்திரமாய் உழைப்பீர் அன்பர் பெலத்தால் — எழுந்

7 இந்து தேசம் வெல்ல யாவரும் முயல்வோம்
இயேசு முன்னே செல்வார் இனிஏன் பயம்
என்ன தடைவரினும் இயேசுநாமம் ஜெயிக்கும்.
இன்றுமுதல் யாவரும் எழுந்திடுவோம் — எழுந்

112 பல்லவி

எந்நாளுமே துதிப்பேன் — என் நேசரேசுவை

அனுபல்லவி

காலையும் மாலையும் மற்றெல்லா வேளையும்
கையையும் நெஞ்சையும் மேலேயுயர்த்தி நான் — எந்

1 பாவங்கள் நீக்கிவிட்டார் தம் இரத்தத்தைச் சிந்தி
காணுமற் போயினேன் கண்டு பிடித்தனர்
தூக்கிச் சுமந்து தம் மந்தையிற் சேர்த்தனர் — எந்

2 அன்பின் சொரூபி அவர் — அவ்வன்பைக்காட்டிஞர்
மாட்டுத் தொழு முதல் தூக்குமரம் வர
ஈனக் கோலம் பூண்டு நிந்தையும் சகித்தார் — எந்

3 சாவின் நிழலதிலும் — பிசாசிலுல் வரும்
தானே உன் பரிகாரி விலக்குவேன் வியாதியை
நோக்கிப்பார் என்னையே இரட்சிப்பேன் என்பதால்— எந்

4 அளிக்கிறார் நன்மை யெல்லாம் — ஒவ்வொரு நாளிலும்
ஊணும் உடையும் வேண்டும் பொருளெல்லாம்
குறைவின்றி நிறைவாகத் தந்திடுவதால் நான் — எந்

5 பரிசுத்த ஜீவியத்தை — இப்பார்தலத்தில்
தேவ பயத்தோடு ஊக்கமாய்ச் செய்யவே
ஆவியின் ஈவையும் எனக்களித்ததால் — எந்

6 வந்திடுவாரே அவர் — வெகு சீக்கிரமாக
காண்பேன் அவரை நான் சேர்வேன் அவரிடம்
அல்லேலூயா பாடிப் பாடியே போற்றியே — எந்

7 வாழுவேன் என்றைக்குமே — என் நேசர் பக்கத்தில்
புதிய எருசலேம் என்சுயதேசமாம்
வானவருடன் நான் ஆனந்தங் கொள்வேன் — எந்

113

பல்லவி

எத்தருணத்தில் உயிர் எவ்வழி பிரியுமோ
இதை யுணராய் நெஞ்சமே

அனுபல்லவி

சுத்த பரமன் பாதம் இத்தரையில் அடைந்து
சொர்க்க பதவிக்கிப்போ பக்குவம் செய்யாவிடில் — எத்த

1 பாலவயதினிலோ பாடும் சமயத்திலோ
கோலமாய் மணக்கோலம் கொள்ளும் தருணத்திலோ
சீலமுடன் பரனைத்தேடுஞ் சமீயத்திலோ
காலன் வரவு கண்டு கலங்கும் தருணத்திலோ

2 வாலிபன் நானிப்போ வயதும் அதிகம் இல்லை
காலன் வரவுக்கின்னும் காலம் அதிகம் என்று
மேலான எண்ணங் கொண்டு வீண் நாட்கழிக்கும் போதோ
கோலொன்று கையில் தாங்கி குறுநடை கொள்ளும் போதோ—
எத்த

3 தாய் தந்தை தமர் தாரம் சகலரும் இருந்தாலும்
சஞ்சீவி மருந்துகள் கைவசமிருந்தாலும்
தீயன் வலையில் சிக்கி திகைக்கும் தருணமதில்
நாயன் உதவியில்லா நசிவது திண்ணம் திண்ணம் — எத்த

114

1 ஓ யேசுவே யென்னை மூட
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
பாவமும் நீங்கிப் போய் விட
இரத்தத்தின் கீழ் வையும்

பல்லவி

இரத்தத்தின் கீழ் என்னை மூடும்
குற்றம் குறையின்றி யாக்கிடும்
நித்தமு மென்னைக் காத்திடும்
இரத்தத்தின் கீழ் வையும்

2 பாவிகள் பிரவேசித்து
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
பாவத்தின் மீட்பை யடைய
இரத்தத்தின் கீழ் வையும்

3 ஆவியின் பூரணம் பெற
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
ஆத்மாவின் சக்தியைப் பெற
இரத்தத்தின் கீழ் வையும்

4 இயேசுவே யெந்தன் இன்பமாம்
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
எக சமதானம் பெற
இரத்தத்தின் கீழ் வையும்

5 இடை விடாமல் ஜெபித்திட
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
எங்குமே சாட்சி அளித்திட
இரத்தத்தின் கீழ் வையும்

6 என்றும் வேதத்தை வாசிக்க
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
எல்லார்க்கும் வழி காண்பிக்க
இரத்தத்தின் கீழ் வையும்

7 அல்லேலூயா கீதம் பாட
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
அகில மெல்லாம் ஜெயங்கூற
இரத்தத்தின் கீழ் வையும்

115

பல்லவி

கிருபைக் காலம் ஓடியே போகுது நாரே
கிருபை பெற்றிட ஓடியே வாரும் நீர் விரைவாய்

1 பகல் சென்று போயிற்று இரவு வந்து கிட்டிற்று
சொந்தமாக இயேசுவை சந்தோஷமாய்ச் சேர்ந்திட —கிருபை

2 லோகம் நேசம் வெறுத்து பாவ ஆசை அறுத்துப்
பாவ மன்னிப்படைந்து ஜீவவழி சேர்ந்திட —கிருபை

3 சொந்தக் கிரியை முன்னே அந்தகாரம் பின்னே
அந்த வழி செல்வாயோ உன் அந்தம் அக்கினிக் கடலில் —கிருபை

4 நாளை உன் நாளாகுமோ மரிக்கும் வேளை தெரியுமோ
நாதர் இயேசு வேகம் வாரூர் வேளை தெரியாதாகையால் —கிருபை

5 அந்திக் கிறிஸ்து வந்திட மானிடரைச் சேர்த்திட
தேவ சினேகம் குறைந்து போம் பாவம் ஏராளமாம் —கிருபை

6 கபட பக்தி தள்ளியே கபட்டு வாய் அடைத்துமே
ஆக்கினை அடையுமுன் தண்டனைக்குத் தப்பவே —கிருபை

7 எந்தனது கேட்குமே மாறிடாத மானிடர்
எழை என்னை ரட்சியும் என்று கெஞ்சிக் கேட்கவே —கிருபை

8 நோவு துன்பம் மரணமோ வேறு எந்தக் கஷ்டமோ
நெருங்கி உன்னைச் சேருமுன் இயேசுவண்டை ஓடிவா —கிருபை

9 கர்த்தர் உன்னைத் தள்ளுமுன் நரகத்தை நீ சேருமுன்
தேவகிருபை பெற்றிட இயேசுவின் பாதம் சேர —கிருபை

10 ஆதி அன்பு குளிர்ந்து அலைந்துலைந்து ஜீவிக்கும்
மானிடரைப் பாராமல் இயேசுவை நீ பார்த்து வா —கிருபை

116

1 கிருபை புரிந்தாளும் இந்த வேளையே
திருவடிவே ரட்சகா ஆ ஆ —கிருபை

2 பாதகன் நான் பாரில் பாவத்தால் நிறைந்து
வெந்தழிந்து போகா சிந்துனுய் ரத்தம் —கிருபை

3 பாவமும் நோய் இல்லா சோபனக் கண்ணுளா
காயங் கொடுத்தாயே நோயென்னை விட்டேக —கிருபை

4 கெத்சமனேப் பாடே அச்சயனின் ஈடே
எச்சணமும் சேர வச்சிரக் காதலா —கிருபை

5 பாத்திரமற்ற இத்தாசி யானென் செய்வேன்
தோத்திரமே செய்வேன் நேத்திர பூமானே —கிருபை

6 என்ன எந்தன் நீதி சொன்னுல் அருவருப்பே
எத்தனை யானுலும் சித்தம் வைத்தாளும் —கிருபை

7 குருச் சித்தம் செய்தால் பரிசுத்த மென்றீர்
திருச் சித்தப்படியே பரிசுத்தம் தாரும் —கிருபை

117

1 தாலேமின் கோதிபதி வருகை — இந்த
பூலோகத் தஞ்சத்தார்க்கு தவிப்பழுகை

2 தர்த்தாம் எச் வேகம் வரும்போது — எல்லாம்
சுத்தரும் அவருடன் போடுவோர்.

3 நாதன் யேசு வருகையின் அடையாளங்கள் — எல்லாம்
நானிலத்தில் நிறைவேறி வருகிறதே

4 எப்போ எப்போ வருவாரென்றேங்குதே உள்ளம் — என்
தப்பன் முகம் காண அலைமோதுதே உள்ளம்

5 ஆணி பாய்க்கப்பட்ட கரம் கண்டிடுவேன் — எனின்
அங்கலாய்ப்புத் தீர முத்தங் கொடுத்திடுவேன் — எனின்

6 வாரடிபட்ட முதுகைப் பார்த்திடுவேன் — என
தாவல் கண்ணீரோடு அங்கலாய்த்திடுவேன்

7 முள் முடி தரித்த எனின் அன்பர் தலையை — கண்டு
முத்தி முத்தியே மணத்தி ஆசை கொள்ளுவேன்

---

118 பல்லவி

சிலுவையின் கோர காட்சியைக் காணீர்
ஏகனுய்த் தொங்கின்றூர் — ஏசு — சிலு

அனுபல்லவி

வான்புவி அனைத்தையும் வாக்கினல் வசிக்கின்ற
வல்லவன் வாதையோடு — அந்தோ

1 வழியே எகும் மாபெரும் கும்பே
வாருங்கள் அறிவிப்பேன் சரிதையை
ரோமரும் யூதரும் யாவரும் கூடி
வாரினல் அடித்தனர்

2 சுற்றி நிற்கும் சுந்தர மாதர்கள்
சுதன் படும் வாதைதனை — காணீர்
வெற்றிக் கிரீடம் சூடும் வேந்தனின் வேதனை
நெற்றிமுட் கிரீடமதால்

3 எட்டநின்று சுட்டியே காட்டும்
இருமன முள்ளவர்களால் நீவிரும்
சட்டமுமின்றிக் கால் கரங்களில் ஆணிகள்
சண்டாளர் அறைந்தனர்

4 யாதும் சிந்தை யன்றியலையும்
யாவரும் வாருங்களேன் — அருகினில்
எதும் குணமில்லா வாதும் சூதும் உள்ளி
வஞ்சகர்க்காய் மாண்டனர் — சிலு

5 மனுஷப் பிரீதி பெருவதற்காகவே
மன்னவனைக் கொடுத்த மூடர்காள்
மனுஷ குமாரனே மாவல்ல தேவனும்
மானிலத்தரசனும் —சிலு

---

119 பல்லவி

தாசரே! இத்தரணியை அன்பாய்
யேசுவுக்குள் கொண்டு வருவோம்

அனுபல்லவி

பாசமாய் யேசுவைக் கூறுவோம் — அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம் வெளிச்சம் வீசுவோம் —தாசரே

1 வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை
வருந்தி அன்பாய் அழைத்திடுவோம்
உரித்தாயேசு பாவப்பாரத்தை, நமது துக்கத்தை
நமது அன்பத்தை சுமந்து தீர்த்தாரே! —தாசரே

2 பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து தமை மறந்து
யேசுகனிந்து திரிந்தனரே — தாசரே

3 நெருக்கப்பட்டு ஒடுக்கப் பட்டோரே
நேசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்க வொண்ணு கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள், விழுந்தனரே — தாசரே

4 இந்தியா தேச மாது சிரோமணியை
விந்தை ஜீவிக்குள் வரவழைப் போம்
சுந்தரக் குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்ப்பந்தங்கள் தீர்த்து, சிறக்கிலங்கிட — தாசரே

---

120 பல்லவி

தாசர் போற்றும் நேசா—எம்
வாடா தின்பமே

அனுபல்லவி

பாசத்தால் பரிசமிட்ட ஆசை மணவாளன்
நாசவுலகில் எந்தனே ஆதரிக்கும் நாதன் —தாசர்

1 நாதனும்மை நானிலத்தில் நாடிப்பின் செல்வேன்
மாயமான யாதுமின்றி அண்டிக் கொள்ளுவேன்
சாகரத்தில் நாதனும்மை நான் மறந்திடேனே
நாயகனுய் நடப்பதால் நன்றி மறவேனே —தாசர்

2 இன்பரின் இனியசத்தம் இன்பமீயுமே
நிற்மலனே இன்பமொழி இன்று கூறுமே
இவ்வுலகம் ஈயுமின்பம் இதற்கிணையில்லையே
நிராட்ச ரசத்திலும் இன்பர் நித்திக்குமென்தேனே —தாசர்

3 இன்ப துன்ப நேரத்திலும் இன்பமவரே
இன்று மென்றும் மாறுச்செல்வம் நல்ல யேசுவே
விண்ணினின்பம் இங்களித்தார் என்ன இன்பப்பாக்கியம்
ஈயுமோ இம் மாய வாழ்வு இவ்விதம் சிலாக்கியம் —தாசர்

4 மாய லோக ஆஸ்தி செல்வம் மாறிப் போய்விடும்
வல்லயேசு எனக்கென்றும் நல்ல தாரகம்
எல்லாவற்றும் எல்லாமாக ஏற்றுக் கொள்ளுவேனே
நாயகனும் நண்பனுமன் நாவிற்கு நற்தேனே —தாசர்

5 மன்னு உம்மைக் காணுதற்கு வாடுதே மனம்
எண்ணியெண்ணி நேசத்தினுல் சோகமடைந்தேன்
தன்னேத்தந்து என்னே மீட்ட எந்தன் ஜீவநாதா
மண்ணதிலும் விண்ணதிலும் அன்பின்ஜீவா —வா—வா —தாசர்

121 பல்லவி

திரியேக நாதா வந்திடுமே.
தீபமே ஆவி தந்திடுமே — திரி

அனுபல்லவி

திரிலோக தியாகனே தினதயாளனே
தினம் தினம் எழையென் தேவபண் சாற்றவே — திரி

1 மின்னொளி மா சமுந்தரியனே
மின்னலில்லா மழையுண்டுமே
மென்மேலு மூற்றுமே மின்னலின்மாமழை
மின்னும் பிரஜோதியாய்க் கன்னல்கள் தீரவே — திரி

2 மங்கிடா நித்திய சூரியனே
மாபாவி என்மேல் அன்பு கொண்டீர்
மானுஷவ தாரா மாறுத பூஷணு
மன்னவா என்னையும் தன்னைப் போலாக்கவே — திரி

3 தூங்கிடா நித்திய காவற்காரா
தூங்கிய என்னை மீட்பதற்காய்
தொங்கினீர் கல்வாரி மூன்றுணி மீதிலே
தூயனே காயனே நேயன் நான் ஆகவே — திரி

4 யாருண்டு சாரப் பூவுலகில்
நாதன் நீரல்லால் வேறுருண்டு
காருண்ய காந்தனே கண்ணே என் கண்ணுளா
காணவும் எங்கிறேன் காதலனேசுவை — திரி

5 என்ன நான் செய்வேன் பிராண நாதா
எந்தனை மீட்ட திருவன் புக்காய்
எதேனின் வாசனே என் மணவாளனே
என்றென்றும் எழையென் தொண்டு செய்வேனையா — திரி

122 பல்லவி

தேவரீருக்கே மிக ஸ்தோத்திரம் மிக ஸ்தோத்திரம்

1 ஜீவனுடெம்மைப் புதிய தினம்
சேர்த்துக் காத்தனையே—நின்
செட்டையின் மீதடியார்களை வைத்தே
சுமந்து காத்தனையே

2 எய்திடும் துன்பம் எத்தனை யுண்டதற்
கெல்லாம் விலக்கினையே
எசுகிறிஸ்தின் நாமத்திலு லெங்கள்
ஏதம் போக்கினையே

3 எங்களின் தேகம் எங்களின் ஆவியும்
எல்லாம் உமதன்றே? இவை
எல்லாம் படைத்தோன் ஏற்றுக்கொள்ளுமே
எல்லாம் உமக்கென்றே

4 உந்தன் நாமம் அர்ச்சிக்கப்படுக
உம் ராஜ்ஜியம் வருக
உம் சித்தம் பரலோகம் போல்
உலகில் செய்யப்படுக

5 இராச்சியம், வல்லமை, மகிமையும், கனமும்
உமக்கே யுடைமையே—இவ்
வெளியார்க்குந்தன் அருளே தந்து
ஆசீர் வதித்தருளும்

123 பல்லவி

தேவ ஆசனத்தின் முன்னதாகவே ஜீவ
நாயகரின் சந்நிதியிலே
ஓயாப்புகழ் தூயர் தூயர் எனவே ஒன்றுப்பாடுவோம்.

1 பாவம் சோகம் கண்ணீர் யாவற்றோடுமே;
பாடு நோய் துயரம் பறந்தோடுமே;
தேவ கிருபா நதி தீரத்தில் நின்றே, தினமும் பாடுவோம் —தேவ

2 எண்ணிமுடியாத எக கூட்டத்தார்
ஏசு ரட்சகரின் சாயல் தரித்து
வெண்ணுடை தரித்து வேந்தனெனவே, வியந்து புகழ்வோம்—தேவ

3 தந்த மாளிகையில் தங்கிடுவோமே
மங்கா செங்கதிரோன் மத்தி தனிலே
எங்கள் குருயேசு நாதாருகே, என்றும் பாடுவோம் —தேவ

4 பூவோர் கண்டிராத மேன்மை யுள்ளதாய்
தங்கம் நீர் பளிங்குபோல் துலங்குமே;
ஜீவநதி என்னும் ஆற்றின் அழகாம், தீரத்தில் நின்றே —தேவ

5 வீதிதனில் விளையாடு வாரங்கே
ஜாதி வித்யாசம் சாபம் தீர்ந்துமே
நீதிமான்கள் வாழ்வு நித்யமாமங்கே, தினமும் பாடுவோம் —தேவ

---

124 பல்லவி

1 நம்பவேண்டாம் நம்பவேண்டாம் இந்தப்
பொய்யுலகை நம்பவேண்டாம்
நேசங் காட்டித் துரோகஞ் செய்யும் இந்தப்
பாழுலகை நம்பவேண்டாம்

2 உன்னைப் பெற்ற மாதாவெங்கே?
போஷித்த உன் தந்தை எங்கே?
போய்விட்டாரோ போய்விட்டாரோ
உன்னை விட்டுப் போய்விட்டாரோ

3 அண்ணன் எங்கே? தம்பி எங்கே?
அக்காள் எங்கே? தங்கை எங்கே?
ஆசையாகத் தேடி வைத்த
ஆஸ்தி செல்வம் தானுமெங்கே?

4 திருடனைப் போல் சாவுவரும்
திடுக்கிடுவாய் நீயுமப்போ
பாம்பின் வாய்த் தவளைபோலே
பரிதபிப்பாய் பரிதபிப்பாய்

5 பிரேதமாகப் பாவியுன்னை
தூக்கிப் போவார் கல்லறைக்கு
அங்கே யுன்னைச் சுட்டெரிப்பார்
நம்புவாயோ உலகை பின்னும்

6 இயேசுநாதர் பாதந்தேடும்
மீட்பையின்றே பெற்றுக் கொள்ளும்
குருசிற்தொங்கும் நேசர் பாரும்
குணமாக்குவார் இப்போ வாரும்

125

1 நான் ஜீவபயணம் போகிறேன்
என்னுடன் வருவாரேசு யேசு, யேசு
என்னுடன் வருவாரேசு

2 இப்பாதையின் மேன்மையைக் கூறுவேன்
என்னுடன் வருவாரேசு

3 நான் பயமில்லாமல் போகலாம் என்னுடன் வருவாரேசு

4 நீயும் இப்பாதையில் சேருவாய் உன்னுடன் வருவாரேசு

5 அநேக தடைகள் சந்திப்பேன் என்னுடன் வருவாரேசு

6 எல்லாவற்றையும் மேற்கொள்ளுவேன் என்னுடன் வருவார் ஏசு

7 என் நெஞ்சின் மகிழ்ச்சிநிறையவும் என்னுடன் வருவார் ஏசு

8 என்றென்றும் ராஜ்யத்தில் வாழுவாய் உன்னுடன் வருவார் ஏசு

9 நான் நித்ய ராஜ்யம் சேருவேன் என்னுடன் வருவாரேசு

126

1 நான் ப்பிரமித்து நின்று, போன்பின்
ப்ரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய்ச்சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

பல்லவி

மாதாய உதிரத்தால்
என்பாவம் நீங்கக்கண்டேன்
யேசையரின் ரட்சிப்பிலை
நான் ஆறுதல் கண்டடைந்தேன்

2 முன்னுளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் ப்ரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீங்கினபோதோ
என்மீட்பரால் அருள் பெற்றேன் —மாதாய

3 தம் கரத்தை என்மீதில் வைத்து
'நீ சொஸ்தமாவாய்' என்றனர்;
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினர் —மாதாய

4 எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என்பேரில் வீசச்செய்வார் —மாதாய

127

1 நீ உயிர் பெற நான் இரத்தஞ்சிந்தினேன்
மீட்கப்பட நான் விலையாகினேன்
என் ஜீவன் நான் தந்தேன் நீ என்னத்தைத் தந்தாய்?

2 சதாகாலம் இன்பம் நீ பெற்று வாழ்ந்திட
இவ்வுலகின் துன்பம் வந்தேன் சகித்திட
அநேகாண்டாய் பட்டேன் பாடு ஓர் நாள் நீ தந்தாயா?

3 மகத்வமாளிகை உனக்காய் நான்விட்டேன்
உலகின் வாதையை உனக்காய் நான் சகித்தேன்
தந்தேனே நானென்னை நீ கொணர்ந்தாய் எதை?

4 உன் ஜீவன் தத்தஞ்செய் உன்நேச மீட்பருக்காய்
பூலோக வாழ்வு பொய் ஜீவி நித்தியத்திற்காய்
குப்பையாய் உன் எல்லாம் விட்டு அவரைப்பின் செல்லு

128

பல்லவி

நேச இயேசு சுவாமி உம்மிடம் வாறேன் சந்தித்திடும்

அனுபல்லவி

நேசரே என்னை இரத்தத்திற்குள்தத்தம் செய்தேன் சுத்தம் செய்ய

1 உம்மைப்போல மாற்றிடுமே என்னைச் சுத்தமாக
உம்மைப்போல ஜீவிக்கவே விண் ஒளியை மண்ஒளியாய் — நேச

2 ஜீவிக்கட்டும் உம்மோடு நான் நோவா பக்தன் போல
ஜீவித்தானே எஜமக்கும் ஏற்றுக் கொண்டார் சேர்த்துக் கொண்டார்

3 லோக மேன்மை ஒன்றும் வேண்டாம் என்றும் இயேசு போதும்
இச்சையும் லோகமும் ஒழிந்து போம் உம்மைச் சேர்வேன் என்றும்
[நிற்பேன்—நேச

4 ஆவி ஆத்துமா காயத்தை தத்தம் செய்கிறேன்
மேவியே உம்சாயல் தாரும் என்னைக் காண்போர் உம்மைக் காண

5 எந்தவேளை நீர் வந்தாலும் சொந்தமாய் சந்திக்கவே
என்னை முற்றும் சுத்தமாய் வைத்துப் பரத்திற் சேர்த்துக் கொள்
[ளும்—நேச

6 ஆசிக்கிறேன் சீக்கிரமாய் சோமேகத்திலே
நேசிக்கின்ற உம் வரவில் மாறிடுவேன் வேறுருவாய் — நேச

129

1 பாவ சஞ்சலத்தை நீக்க
ப்ராண சிநேகி தருண்டே
பாவ பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே
சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்

2 கஷ்ட நஷ்ட முண்டானாலும்
யேசுவண்டை சேருவோம்
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபங் காட்டுவோம்
நீக்குவாரோ நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்
நீக்குவாரோ மனச்சோர்பை;
தீய குணம் மாற்றுவார்

3 பெலவீன மான போதும்
கிரு பாசன முண்டே
பந்து ஜனம் சாகும்போதும்
புகலிடம் இதுவே
ஒப்பில்லாத ப்ராண நேசா
உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா!
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்

---

130 பல்லவி

பாவி ஓடிவா — பாவி ஓடிவா
உன் பாவப்பாரம் தாங்க — யேசு
காத்து நிற்கிறார் — பரிதபித்து நிற்கிறார்

சரணங்கள்

1 இயேசு அழைக்கிறார், இயேசு அழைக்கிறார்
உன் துயரம் நீக்கி மோட்சம் சேர்க்க
காத்து நிற்கிறார் — அவர் உன்னேப்பார்க்கிறார் — பாவி

2 நாட்கள் போகுதே, நாட்கள் போகுதே
நீ நாளை, நாளை, என்று சொல்லி
நரகம் போகாதே, அக்கினிக் கடலில் விழாதே — பாவி

3 தாமதமென்ன, தாமதமென்ன
உன் சுவாமி யேசு நாதாழைக்கும் சத்தம் கேளாயோ
அவர் தஞ்சம் தேடாயோ — பாவி

4 பின்னிடாதே நீ பின்னிடாதே நீ
உன் தன்மை யின்ன தென்று அவர்
முன்னறிவாறே தம் நன்மை யீவாரே — பாவி

5 சுத்த ஜோதியே, சுத்த ஜோதியே
தம் ரத்தத்தாலே உன்னை மீட்க
சித்தம் கொண்டிட்டார், அவர் சிலுவை தொங்கிட்டார் — பாவி

6 நொந்த பாவியே — நொந்த பாவியே
இவ்வந்தகார லோகந்தனில்
தொந்தரை மெய்யே, பல நிந்தைகள் மெய்யே — பாவி

7 ஜீவ அப்பம் நான் — ஜீவ அப்பம் நான் — அதை
தின்று ஜீவன் கொண்டு மகிழ்
கண்டடை என்றார், எனை வந்தடை என்றார் — பாவி

TABU ARCHIVES

131

1 பிரதான தூதன் தொனிக்க தேவ எக்காளம் ஒலிக்க
மா ஆரவாரத்துடனே மன்னன் கிறிஸ்து வருவார்

2 மங்கள மாயவரில் மரித்தோர் முதலில் எழுவார்
மகிமையாகவே ஜொலித்து மன்னன் ஏசுவைக் காண்பார்

3 சுத்த ஜீவியம் செய்யும் தூயர்கள் பின்னல் எழுந்து
கர்த்தனு மேசுவுடனே ககனத்தில் ஒன்று சேர்வார்

4 மண்ணில் சாயல்கள் அழிந்து மகிமையின் சாயல் பூண்டு
மா தேவனின் முன் அணியில் மாசற்றோராக நிற்பார்

5 துக்க துன்பங்கள் நீங்கி பூமியின் பாரங்கள் ஒழிந்து
கர்த்தனும் யேசுவோடு சதாகாலம் ஆளுகை செய்வார்

6 ஆயத்தமா ஆத்மாவே உன் அன்பர் வரும் நேரம்
அது கிட்டி நெருங்கியதால் அசதியாயிராதே

132

1 மாட்சி மிகும் மோட்சநகர் மகிமை என்சொல்வேன்—அந்த
மங்களம் சேர் மாளிகைக்குள் எப்போ சேருவேன்

2 நாம் எல்லாரும் நாடுகின்ற பட்டணமது! நமது
நாதரேசு வீற்றிருக்கும் பட்டணமது!

3 பட்டணத்தின் வீதியெல்லாம் சுத்தப் பொன்னுமே! அங்கே
பாடுவோரும் ஆடுவோரும் கோடா கோடியே

4 முத்துமய மாயிலங்கும் பட்டணமது! —நமது
முன்னோர் சிலர் போயிருக்கும் பட்டணமது!

5 ஜீவநதி பாய்கின்ற பட்டணமது! —நிதம்
சித்திர மோடையிலங்கும் பட்டணமது

6 சாவு துக்க மேயில்லாத பட்டணமது! —நிதம்
சங்கீதங்கள் தான் முழங்கும் பட்டணமது!

7 எண்ணிறந்த தூதர் போற்றும் பட்டணமது—அங்கே
ஓயாமல் கீதம் பாடும் பட்டணமது

———

133

பல்லவி

மெய்யல்லோ கர்த்தர் சேனை முன்னேறியே செல்லுது
செவ்வையாய் அணிவகுத்து சிறைமீட்கப் போகுது

1 பேயல்லோ நம்மைப் பிடித்திழுத்துத் திரிந்தான்
ஜெயமுள்ள நாதனல்லோ சேனையிலே சேர்ந்தார் —மெய்

2 தேவாதி தேவன் தான் எழுப்பின சேனையர்
தீயாலும் ரத்தத்தாலும் பகைவரை எதிர்ப்பார் —மெய்

3 கேடகத்தைக் கொண்டு பேயைத் தத்தளிக்கச் செய்வோம்
வாடா முடி பெற்றிடவே கெம்பீரமாய்ப் பாடுவோம் —மெய்

4 யுத்தங்கள் முடிந்து நல் வெற்றிகளைப் பெற்றபின்
நித்தமுமே நாதருடன் நீடுழியாய் வாழலாம் —மெய்

———

134 பல்லவி

மோட்சம் போகப் புண்யம் நம்பி மோசம் போகாதே

அனுபல்லவி

மோசம் போகாதே நீ நாச மாகாதே

1 தான தருமங்கள் செய்து வானலோகம் போக நம்பி
கானக மான் போல் அலைந்து வாளுள் போக்காதே
வாளுள் போக்காதே வெறும் வீணுளாக்காதே —மோட்

2 பலவித தீர்த்தமாடி புண்ய ஸ்தலம் போய் வந்தாலும்
பலிகள் பல செலுத்தினாலும் பாவம் தீருமோ
பாவம் தீருமோ ஜீவ பாதை சேர்வோமோ —மோட்

3 மோட்சலோகம் சாட்சியாக முக்தன் இயேசுதான் உதித்தார்
மூதாதைகள் சாபமாற்றி முக்தி கொடுத்தார்
முக்தி கொடுத்தார் ஜீவ சக்தி கொடுத்தார் —மோட்

4 இயேசுவை நாம் கண்டாலல்லோ ஈசனை நாம் கண்டிடுவோம்
இயேசுவையே அல்லாமலும் சொர்க்கமும் இல்லை
சொர்க்கமும் இல்லை வேறு மார்க்கம் ஒன்றில்லை —மோட்

---

135 சரணங்கள்

1 யேசுவின் பின்னாலே மண்ணாசைகளும் மாய்த்து
நேசமுடன்—போவோம்

பல்லவி

ஜோதிமய நாதனுடன்
நீதியுடன் நின்றிடலாம்—போவோம்—யேசுவின்

2 பரலோகம் விட்டுப் பாவிகள் மீதன் புற்றார்
நரர் பரம் செல்ல நல்வழி திறந்திட்டார்
பரா பரன் —ஜோதி

3 பாவங்களை நீக்கிப் பரிகரிக்க என்னை
பாவக் கோலமாகிப் பரனின் சுதன் தன்னை
ஈந்தனரே —ஜோதி

7A
S-34

4 பரிசுத்த ராகப் பாரிலும் ஒன்று கூடி
பரலோகம் செல்லப் பரிசுத்தாவி தந்தார்
மா அன்புதான் —ஜோதி

5 பொய்யுலகம் வேண்டாம் யேசையனெனக் கெல்லாம்
தூயலோகம் செல்வோம் யேசையனடி சென்றுல்
ஜயமின்றி —ஜோதி

6 மனம் மாறிடாதோர் மரண மடைவாரே
தினம் தோறும் தீ யிற்றியங்கி அழுவாரே
திரும்புவீர் —ஜோதி

7 இருதயத்தின் சுத்தம் இருந்திடில் நித்தம்
வரும் நாளில் யேசு நாம் வானிலொன்று கூடி
வாழ்ந்திடலாம் —ஜோதி

---

136 பல்லவி

இயேசு நாமம் ஜெயம் இயேசு நாமம் ஜெயம்
இயேசு நாமம் ஜெயம் இயேசு நாமம் ஜெயம்
இயேசு நாமம் ஜெயம் இயேசு நாமம் ஜெயம்

1 ஓசன்ன அவர்க்கே ஓசன்ன அவர்க்கே (6 தடவை)
2 ஆமென் அல்லேலூயா ஆமென் அல்லேலூயா ,,
3 ஜெயம் அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா ,,
4 ஸ்தோத்திரம் அல்லேலூயா ஸ்தோத்திரம் அல்லேலூயா ,,
5 கன்னி பாலகரே கன்னி பாலகரே ,,
6 பரிசுத்தர் அவரே பரிசுத்தர் அவரே ,,
7 துதிப்போம் அவரை துதிப்போம் அவரை ,,

137

1 இரட்சிப்பை உயர்த்திக் கூர்வோம், லோகம் நடுங்க
நரகாக்கினையைச் சொல்வோம், பாவம் அடங்க
ஓ! பூர்வகால தேவதாசர் விஸ்தரித்தாற்போல்
மோட்ச லோகம் போகுமுன்னமே

பல்லவி

செல்வோம், செல்வோம், ஆர்ப்பரிப்புடனே;
செய்வோம், செய்வோம், போர் பலத்துடனே:
ஓ! நாஞ ஜாதி பாஷைக்காரர் ரட்சிப்படைய
மோட்ச லோகம் போகு முன்னமே

2 சேனையாரின் யுத்த சத்தம் பூமியெங்கும் கேள்!
மீட்படைந்த பேதைகளின் சாட்சிகளும் கேள்!
ஓ! முழு லோகத்தையும் வெல்ல இன்னும் கொஞ்சநாள்!
மோட்சலோகம் போகு முன்னமே —செல்

3 தீதாய் சத்துருக்களென்ன சொன்ன போதிலும்,
சுத்த ஆவியின் பலத்தைப் பெற்று யாவிலும்,
ஓ! உண்மையாகப் போர் புரிந்தால் வெல்வோம் சாவிலும்
மோட்சலோகம் போகு முன்னமே —செல்



138 பல்லவி

வந்தாளும் யேசுவே வாருமிதில்—தேவ
மைந்தர்கள் கூடி மிங்நேரமிதில்

சரணங்கள்

1 பத்மோஸ் தீவில் பரிசுத்த நாளில் வந்த வண்ணமே
சத்துருக்கள் கூட்டமெல்லாம் சக்தியற்றுச்சோரவே
இத்தினத்தில் இங்கு வந்திடும்—தேவா —வந்தா

2 நல் வழியை நாடிடாமல் ஓடும்நரர் யாவர்க்கும்
கல்வாரியின் அன்பையின்று கர்த்தனே நீர் காட்டியே
நற்குணம் அவர்க்கு நல்கிடும்—தேவா —வந்தா

3 சக்தியில்லே எங்களுக்குச் சாம்பலும் தூசியும்
கர்த்தனே கருணை கூர்ந்து தந்திடும் சர்வாயுதம்
புத்தியாக யுத்தம் செய்திட—தேவா —வந்தா

4 என்னை நோக்கிக் கூப்பிடில் அளித்திடுவேன் உத்தரம்
பின்னும் நீ அறிந்திடாத வல்லமைகள் காட்டுவேன்
என்றவா இந்நேரம் வாருமேன்—தேவா —வந்தா

5 சதா காலங்களிலும் இருப்பேனுங்கள் கூடவே
சத்துருவின் ஆயுதங்கள் ஒன்று மணுகாதென்றீர்
ஆதலாலானந்தம் ஸ்தோத்திரம்—தேவா —வந்தா

139

1 வருகிறாரே வானபரன் வானம் விட்டெமை யழைக்க வருகிறதைப்
[பாரும்
வானோர்களும் ஆர்ப்பரிக்க அன்பருமதிசயிக்க வருகிறதைப் பாரும்
ஆனந்தமே ஆனந்தமே ஆர்ப்பரிப்போம் ஆனந்தமே — வரு

2 தூதர்பல கூட்டருமாய் தூயசங்கம் சூழ்ந்தவராய் வருகிறதைப் பாரும்
தூய ஆடைதான் தரித்து தய்மையின் சாயலணிந்து வருகிறதைப்
[பாரும்
துதித்திடுவோம் துதித்திடுவோம் உன்னதனே துதித்திடுவோம். —
[வரு

3 எக்காளமது தொனிக்க அக்களிப்புடையவராய் வருகிறதைப்பாரும்
மக்களுக்குத் தாமருளும் பரிசுகளுடையவராய் வருகிறதைப் பாரும்
அல்லேலூயா அல்லேலூயா அன்பருக்கே அல்லேலூயா —வரு

4 மானிலத்தில் பரிதபிக்கும் மலினமற்ற மாந்தருக்காய் வருகிறதைப்
[பாரும்
மலின மற்று மாண்டவரை மண்ணில் விடாதரவணைக்க வருகிறதைப்
[பாரும்
மகிமையிது, மகிமையிது, மகிமைகாணும் மகிமையிது —வரு

5 கருணையின் காலம் முடிந்து கிருபையின் வாசலடைக்க வருகிறதைப்
[பாரும்
வாருமென்றமையழைக்க தருணமில்லை என்றுரைக்க வருகிறதைப்
[பாரும்
ஆனந்தமே, ஆனந்தமே, அன்புடையோர்க்கானந்தமே —வரு

6 கல்வாரிமலைதனிலே கஸ்திகளடைந்தவராய் வருகிறதைப் பாரும்
காதலெம்மில் வைத்ததினால் காயங்களடைந்த வராய் வருகிறதைப்
[பாரும்
விழித்திடுவோம் களித்திடுவோம் கண்டவரைக் களித்திடுவோம் —
வரு

---

140 **பல்லவி**

வா வா நேசா; மலர் சுவிசேஷத்தின்
மதுதனை யுண்டிடவே

அனுபல்லவி

தேவாமிர்தமாம் ஜீவனைக்கண்டிட
சாவரமிர்தமாம் சாமியை அண்டிட —வா வா

1 ஜீவபோஜனம் ஜீவநீரதும் தினமும் சுரந்திடுமே
தினமும் பார்த்திட தினமும் கேட்டிட சிந்தை வரும் திடமே
பாவமனைத்தையும் பாடுடனழித்திடும்
ஓவா மகிழ்ச்சியை உளமதிலளித்திடும் —வா வா

2 நாணு துலகினில் நலம் பலவடைந்திட நல்ல வழிதருமே
நன்மை எடுத்துடன் தின்மை விடுத்திட நல்லமனம் வருமே
காணுகடவுளைக் கண்ணினில் காட்டிடும்
தோணுத் துணையதைச் சுபமுடனூட்டிடும் —வா வா

3 கோரக்கரப்பிரிகொல்லும் தீவினர் கொடுமை நீக்கியதே
கோடா கோடியாம் நரரைக் கூட்டினல் குணமே தாக்கியதே
சோரர்கள் சூதினர் சுத்தராய் மாறினர்
போதும் மாறியே பெருமையில் தேறினர் —வா வா

4 ஏசுநாமம தெங்கெங்குலாவுமோ இன்பம் அளித்திடுதே
இனிய மறையது இடமே தேடிடில் இதயம் விழித்திடுதே
பேசிடும் பேயெல்லாம் பெயர்ந்திட ஓடிடும்
வீசிடும் ஒளியதை வீறுடன் நீட்டிடும் —வா வா

5 கரும்பை புசித்திடக்கையில் கூலியைக் கனிவாய்க் கொடுப்பா
[ருண்டோ
கண்டிலும் மேலதாய் இனிக்கும் பொருளிதைக்கடிந்து தடுப்ப
விரும்பியே எடுத்திட வேதமே வேறில்லை [ருண்டோ
திரும்பியே அடுத்திட தேவரும் வேறில்லை —வா வா

141

வாவா பாவிவா —காலமிதுவே
வருவாய் துரிதம் சிலுவையடியில்
பரம நாதனுண்டே வரவழைக்கிறதாலே
உன் சுமையைத் தன் சுமையாய் இன்றெடுத்திடுவார் நீ வேகம் —வா

2 பார் பார் பணிவாய்ப்பார் —சாலோகமாமிது
மாயை மாயை மாய்ந்து போகுமுன்
காயமும் மாறும் நீ உணர்ந்திடுவாயே
அரைநொடியில் இவை முழுதும் கைவிட்டிடுமே நீ வேகம் —வா

3 மாமா தோஷகரம் நீ நாடும் வழியில்
மாயமுள்ள பாவ வலையுள்
மாய்ந்து போகாதே — வருவாயின்றே நீ
சுயமதினுல் முயலுவதேன் வந்து சேர்ந்திடு நீ வேகம் —வா

4 ஆ! ஆ! உந்தன் காலம் போய்விடுதே
கழுகின் நிழல்போல் சமயம் முழுதும்
அழிந்து போய்விடுதே — ஒழியாதே வாவா
இது தருணம் இது தினமே யேசுவை அண்டிடு நீ வேகம் —வா

---

142 பல்லவி

விழித் தெழுந்திடு திருச்சபையே
மணவாளன் வரக்காலமாகுதே

1 பயங்கரகாலம் வரும் என்றுற்போல்
சத்திய வசனந்தான் நிறைவேறுதே
தர்க்கிப் போர்கள் அதிதம் என்று சொன்னற்போல்
ஜீவனில்லாதவராய் ஆட்கள் ஆகிறார் —விழி

2 லோகமெங்கும் பஞ்சம் காணும், அக்னிபோல்
வேகமாய்ப் படர்ந்து ஜனத்தை யெல்லாம்
வியாகுல சமுத்திரமதில் மூழ்க்கிடும்
யார் பிடித்து ஏற்றுவார் இச்சமயத்தில்

3 கள்ளனைப்போல் வருவார் மேகமதனில்
வெள்ளை வஸ்திரந்தனில் கறையும் வேண்டாம்
வெள்ளை சிங்காசனத்தில் தானிருக்கும்
தந்தையின் சந்தானம் தம்மைத் துதிக்கும் —விழி

143

1 மோட்சம் செல்லும் யாத்ரீகர் நாம் (3தாம்)—சிலுவைவீரரே
2 இருள் பள்ளத் தாக்கினூடே (3தாம்) ,,
3 யேசு பாதை காட்டுகின்றார் (3தாம்) ,,
4 ஜீவ கிரீடம் ஈந்திடுவார் (3தாம்) ,,
5 போர்க்கவசம் பூண்டு செல்வோம் (3தாம்) ,,
6 சோர்ந்திடாமல் முன்னேகுவோம் (3தாம்) ,,
7 அல்லேலூயா பாடுவோம் நாம் (3தாம்) ,,

144

பல்லவி

ஜீவ கிரீடம் சூடும் நேரம் என்னவோ இன்பம் — விண்ணில்
ஜீவனுள்ளோர் கூடும்வேளை என்னபேரின்பம்

1 ஏகமாக அகில சிருஷ்டிகளும்
தாகமாகத் தவித்தெதிர் நோக்கும்
மகாதினமது வரவே மகிமைக் கிரீடங்கள் பெறவே —ஜீவ

2 அம்பின தாபின் ரதம் போலவே
அம்பான் அழைத்திட வரவே
சம்பூரண சந்தோஷம் சமூகமதில் பெற்றுயரவே —ஜீவ

3 மின்னும் சுரர் கின்னர கீதம்
விண்ணினின்றும் தொனித்திடும் நேரம்
மண்ணினின்றேகும் தூயர் மன்னருடன் மகிழ் வடைந்து —ஜீவ

4 பதிதன ஜனம் கனத்தை விட்டவரும்
கதிபரன் மலர் பாதம் என்றவரும்
பரிகாசங்கள் அவமானம் பரிதாகமுடைந்த வரும் —ஜீவ

5 சற்று நேரம் வற்றிடு மின்பம்
பற்றிடாத கற்புடையவரும்
கர்த்தனளிக்கும் பலனே கருத்தாக முன்வைத்தவரும் —ஜீவ

145

1 ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் யேசுதேவா
பாத்திரமாக இம்மாத்திரம் கருணைவைத்த தேவ தேவனே

2 கந்தை பொதிந்தோனே மந்தையற் கானந்தோனே
வந்தோனே புவியில் தன்னையே தந்தோனே மானிடர்க்காய் —
ஸ்தோத்]

3 பொன் முடி வெண்ணங்கி ஜோதியாய் நானணிய
சிவப்பங்கி முள் முடி சூடியே தரித்த — மன்னவனே —ஸ்தோத்

4 பாதகன் நான் செய்த பாவங்கள் யாவும் தீர்க்க
காதலனே சென்றீர் கஸ்திகளடைய —கல்வாரியில் —ஸ்தோத்

5 பாவ நிவாரண பலியான ஆட்டுக்குட்டி
பாவத்தில் மாளும் மானிடரை மீட்க ஜீவன் தந்தீர் —ஸ்தோத்

6 சாத்தானை ஜெயித்திட சக்தியளித்த தேவா
புத்தியாய் நடந்து யுத்தத்தில் ஜெயிக்க ஞானந்தாரும் —ஸ்தோத்

7 இவ்வித அன்பை நான் எவ்விதம் சொல்லிடுவேன்
செவ்வை பாதை சென்று ஜீவவழி நடப்பேன் அவர் பெலத்தால்

8 வானோர்கள் போற்றிடும் ஞானமுள்ள பிதாவே —ஸ்தோத்
தானங்களையிப்போ தந்திடும் தயவாய் தயாள பிதாவே —ஸ்தோத்

146

பல்லவி

நேற்றும் இன்றும் என்றும் மாறார்
இயேசு ரட்சகர்
நாம் மாறினாலும் அவர் மாறார்
அவர்க்கு ஸ்தோத்திரம்! (3தரம்)

147

ஆத்துமா ஒன்று ரட்சிக்காமல்
வெட்கத் தோடே ஆண்டவா!
வெறுங்கையனாய் உம்மைக் கண்டு கொள்ளல் ஆகுமா?

---

148 **Following Jesus**

செல்வேன் செல்வேன்
மீட்பரின் பின் செல்வேன்
நாடு நகரம் என்றாலும் செல்வேன்
செல்வேன், செல்வேன்
மீட்பரின் பின் செல்வேன்
எங்கே போகச் சொன்னாலும்
நான் பின் செல்வேன்

---

149 **Jesus gave her water**

யேசு கொடுத்தாரே இணற்றிலில்லா நீர்
மாது பாடிச் சென்றாள்
கொண்டு வந்தாள்
மற்றோரை ஜீவனின் தண்ணீரண்டைக்கு.

---

150 **JESUS**

அற்புதம் அற்புதன் யேசு எனக்கு
ஆலோசனைக் கர்த்தரும் வல்லமீட்பரும்
பாவம் வெட்கமணுகாமற் காக்கிறார்
அற்புதம் என் மீட்பர் அவர்க்கே ஸ்தோத்திரம்

151

என்ன அற்புத பொக்கிஷம்
அளவில்லாத் தேவ ஈவு
ஒன்றாய் யாத்திரை செய்வோம்
என் வேதமும் நானும்
What a wonderful Treasure
Gift of God without measure
We will travel together
My Bible and I.

152

அல்லேலூயா ஆ! ஆ! ஆமென் அல்லேலூயா
ஆமென் அல்லேலூயா! அல்லேலூயா ஆமென்
ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா
ராஜ்ஜியம் வல்லமை கனம் மகிமை என்றுமே —அல்லே

153

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா ஆமென், ஆமென்
அல்லேலூயா ஆமென், அல்லேலூயா ஆமென்
அல்லேலூயா ஆமென், அல்லேலூயா ஆமென்
அல்லேலூயா ஆமென்

154

துதி கனம் மகிமையுமக்கே
ஓ, எல்லாமுமே ஓ, எல்லாமுமே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ! நீரே ராஜாவே

ஸ்தோத்ரம் ஸ்தோத்ரம்
ஸ்தோத்ரமே மிக ஸ்தோத்ரம்
ஸ்தோத்ரம் ஸ்தோத்ரம்
ஓ, நீரே ராஜாவே

துதி கனம் மகிமை யுமக்கே
ஓ, எல்லாமுமே ஓ, எல்லாமுமே
துதி கனம் மகிமை யுமக்கே
ஓ! நீரே ராஜாவே

155

1 ஜீவ ஒளியிற் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் நடந்த பாதையில்
போகிறேன் நான் போகிறேன்

பல்லவி

ஓர் வெண்ணங்கி, ஓர் பொன்முடி,
ஓர் வாத்தியம், ஓர் மேல்வீடு
ஓர் ஜெயக்கொடி, ஓயா இன்பம்,
எனக்குண்டு சொர்க்கத்தில்;
யேசு என் ரட்சகர், பாவந்தீர்த்தார்,
கல் வாரி மலையிலென் கடன் தீர்த்தார்,
அவரன்பின் நான் மூழ்கி,
என்றும் பாடுவேன்; வாழுவேன்:
ஜீவ ஊற்றில் வாழுவேன்

2 பாவிகள் நடுவில் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் பின் சென்றுல் ஜெயமுண்டு
போகிறேன் நான் போகிறேன் —ஓர்

3 வீண் பக்திக்காரர் நகைத்தாலும்
போகிறேன் நான் போகிறேன்
பூரண அன்பு பயம் நீக்கும்
போகிறேன் நான் போகிறேன் —ஓர்

4 சிலுவைக் கொடியுடன் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பரின் நேசத்தைக் காட்ட நான்
போகிறேன் நான் போகிறேன் —ஓர்

5 பரிசுத்த ஆவியால் நிறைந்து
போகிறேன் நான் போகிறேன்
ஸ்வர்க்கம் போகுமட்டும் நிலைத்து
போகிறேன் நான் போகிறேன் —ஓர்

156

1 சீக்கிரத்தில் மேசியா மேகத்தில் தோன்றுவார்
வான தூதர் சேனைகளோடு சீக்கிரம் வாருர்

பல்லவி

ஓ! பாவிகளே நீங்கள் கூடி வாருங்கள்
இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுங்கள்

2 எக்காளங்கள் தொனித்திட யேசு வருவார்
பூமி வானம் நடுங்கிட இயேசு வருவார் — ஓ

3 அந்தநேரம் பாவங்களே மறைக்க ஏலாது
இந்நேரமே அறிக்கை செய்து விட்டு விடுங்கள் — ஓ

4 பரிசுத்தர் அந்நேரத்தில் பறந்திடுவார்
அந்த சந்தோஷம் உனக்கு வேண்டாமோ — ஓ

5 அக்கினி பூமியிலே சொரியும் வேளையில்
எங்கு ஓடி ஒளிக்க முடியும் அந்த வேளையில் — ஓ

6 பயங்கர காலம் வருமுன்னே பாவி ஓடிவா
பரிசுத்தவான்கள் தேடும் சொத்தை நீயும் பெற்றுகொள் — ஓ

7 திருடனைப்போல் வருவேனென்று சொன்னவர்
இன்றே அவர் வந்துவிட்டால் என்ன செய்திடுவாய் — ஓ

157

பல்லவி

வருகிறார் காந்தையைச் சேர்த்திடவே
வருகிறார் எக்காளத் தொனியுடனே

அனுபல்லவி

பொன் தள வீதியில் உலாவிடும் இயேசு ராஜா — வரு

சரணங்கள்

1 ஆகாய மேகங்களில் எக்காள தொனியுடன்
தங்கக் கரங்களிலே. மங்கையை அரவணைக்க — வரு

2 உன்னத இராஜன் பொன் மணவாளன்
கன்னியைச் சேர்ந்திடவே அன்னவரெழுந்துவாரூர்-வரு

3 அன்பின் தயாளன் ஆனந்த பூமான்
இன்றும் என்றும் மாறுத அன்பிலே நமை நிறுத்த— வ

4 அன்னவர் மண்ணிலமைத் தள்ளிடாமல்
உன்னருளால் எம்மைத் தன்னுடனெடுத்திடவே— வரு

158

பல்லவி

பரனடி பரிவுடன் பணிந்திடுவோம்—சுத்த
கரங்களிலுலே பணி புரிந்திடுவோம்

1 கரிசனையாய் நம்மை கண்டு பிடித்தார்
கருணையின் தானமளித் தலங்கரித்தார்
பரிவாகப் பாலரின் பங்கமளித்தார்
தரிசனை தந்து வாரும் என்று மொழிந்தார்
பரன் பற்றி அணைத்தார்—நம்மை சுத்திகரித்தார்

2 இத்தரை மீதினில் புத்தி புகட்டும்—ஈசன்
சித்தமதை விரும்பி ஜீவனடைவோம்
நித்தியமாக ஜோதி மத்தியில் நிற்கும்
நிர்மல பர்வத மொத்தாசை யளிக்கும்
பரிசுத்தமளிக்கும்—பாதை காட்டி நடத்தும்

3 கானக வழிதனில் வனவிலங்கும்—கடும்
ஆணவ மொத்தவுள்ள வலு சர்ப்பமும்
ஞான பாதையி னண்டை பன்றி நாய்களும்
தாகமுடனே நம்மைத் தாக்கவரினும்
கருணையளிப்பார்—கைவிடாதிருப்பார்

4 காலங்கள் கடந்திடும் காசினியே—இங்கே
கோலங்கள் கொள்ளும் ஒரு மனுகுலமே
மாலை மயங்கிடினும் மார்பிலணைக்கும்
ஞானக் கல் மழையின் தண்ணீரைக் குடித்து
பரனைப் பணிவோம்—அன்பரை அணிவோம்

5 மாட்சிமை தாமுள்ள மோட்சத்திலே
நம்மை ஆட்கொண்ட ஆண்டவர் அரணதிலே
சேர்க்க வென்றருளின் மழை பொழிந்தார்
பேரன்பை எமதுள்ளமதில் சொரிந்தார்
மண்ணிலும் புகழ்வோம்—விண்ணிலும் பாடுவோம்

---

159 பல்லவி

எங்கே தேடுவேன் நான் எங்கே தேடுவேன்
என்நேச ரேசுவை நான் எங்கே தேடுவேன்

1 உன்னத நாதரே ஆ! என் உத்தம நேசரே
உன்னத அன்பாலே என் உள்ளமுருகுதே

2 மலையின் நடுவிலோ நேசர் மல்லிகை வனத்திலோ
மாழமேடையிலோ இல்லை என் மன்னர் மத்தியிலோ

3 அழகாய் மான்போலே நேசர் அலைந்து வாருரே
அரசகுமாரருள் ஆ! என் அன்பர் ஒருவரே

4 காட்டு மரங்களுள் நேசர் கிச்சிலிமரம் போலே
கமழும் மலர்களுள் நேசர் இன்பலீலியாம்

5 அழகு வாய்ந்தவர் நேசர் அன்பு மிகுந்தவர்
அறிவு மிகுந்தவர் நேசர் அனைத்தும் அறிபவர்

6 காலேதேடுவேன் நேசரைக்கண்டு மகிழுவேன்
கருத்தாய்ப்பாடுவேன் யேசுவின் காலை நாடுவேன்

160

பல்லவி

வா; வா ஜெகதீசா— வரந்தரவே
வா; வா ஜெகதீசா— இதுசமயம்
வா, வா ஜெகதீசா— உன் மகிமையை
யார் யார் யார் அறிவார்.

சரணங்கள்

1 காவில் கனிபுசித்த ஏவையின் மக்களுங்காய்
பூவில் கனி யுண்டவா—புகழ், சொல்லவே —வா

2 உன்னதத்திற் கேரியபின் உங்களைத் தேற்றுதற்கு
எந்தனுவி அனுப்புவேனென்ற—யேசையா நீர் —வா

3 இரண்டு மூன்று பேர் கூடி தொண்டு புரியும் வேளை
அண்டையில் இருப்பேன் என்றீரே—அருள்செய்ய—வா

4 பன்னிருவரும் கூடி பரிசுத்த ஆவி பெற்று
பற்பல பாஷை பேசினர்—பிரசங்கம் செய்ய —வா

5 மோசே முதலாயுள்ள தீர்க்கர் முனிவர் கட்கும்
ஆசீர்வாதம் கொடுத்தவா அருள்புரிய —வா

6 கேளுங்கள் அப்பொழுது கிருபையுடன் கொடுப்பேன்
தட்டுங்கள் திறப்பே னென்றீரே தாமதமென்ன —வா

7 பலத்தகாற்று முழக்கம்போலே வல்லமையாய் வந்திறங்கி
வரங்களை ஈந்தருளினீர் அப்போஸ்தலர் மேல் —வா

161

சரணங்கள்

1 சீயோன் பிரயாணிகளே நீங்கள் சீக்கிரம் விழித்திடுங்கள்
சீயோன் ஓட்ட மத்தியில் நீர் நித்திரை செய்யலாமோ?

2 தூக்கத்தினின்றுணர உந்தன் வேளையும் வந்ததுகாண்!
சுற்றிலும் எறிட்டுப்பார்த்து சோபை யடைந்திடுவீர்!

3 மாரிகாலம் சென்றது மழைபெய்து ஒழிந்ததுவே,
மாட்சிமிகும் புஷ்பம் எங்கும் வாசனை வீசிடுதே.

4 பக்ஷி பறவைகளும், தங்கள் பாடல்கள் பாடிடவே,
காட்டுப்புறுகூவும் சத்தம் இந்நாட்டினில் கேட்டிடுதே.

5 அத்திமரம் துளிர்த்து அதின் காய்கள் பழுத்திடுதே,
முந்திரித் திராட்சைகளும் பூவுடன் பிஞ்சிடுதே.

6 இன்னும் நீ தூங்கிடிலோ நண்பா! நீ எப்போ எழுந்திடுவாய்?
அன்னமே என அழைக்கும் அன்பரின் சத்தம் கேளாய்.

7 கன்மலையின் வெடிப்பும், மலைதன்னிலுள்ள பிளப்பும்,
கர்த்தரின் வருந்நேரம் உன்னைக் காட்டிக்கொடுத்திடுமே.

162

பல்லவி

என்னை ஆசீர்வதியும்—தேவா இப்போ என்னை ஆசீர்வதியும்
என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மை விடுவதில்லை

சரணங்கள்

1 இடது கையால் அணைத்து தேவா உம்
வலக்கையால் என்னைத் தொடும்
தேவா உம் கையதிலுல் என்னைத் தொட்டு
இப்போ ஆசீர்வதியும் —என்னை

2 உன்னுடன் நானிருப்பேன் சதா காலம்
உன்னுடன் நானிருப்பேன்
என்று சொல்லும் சத்தத்தை என் காதிலே
கேட்கவே சொல்லிடுவீர் —என்னை

3 அன்பு என் அகத்திலே தேவா இப்போ
அன்பு என் அகத்திலே.
வியாபார அன்பு அல்ல என்னையே
ஈந்திடும் அன்பு வையும் —என்னை

4 உப்போய்க் கரைத்திடவே—தேவா என்னை
ஒப்படைக்கச் செய்திடும்
சத்துருக்காய் மரிக்க தேவா தக்க
பெலனைத் தந்திடுவீர் —என்னை

5 பிட்டுப் பிளந்து என்னை சுவாமிநீர்
பிட்டுப் பிளந்து என்னை
சாறுப்பிளிந்து என்னைப் பலிபீடத்தில்
வார்த்திடுங் கையதிலுல் —என்னை

6 சின்ன பின்ன மாக்கிடும் – தேவா என்னை
சின்ன பின்ன மாக்கிடும்
சின்ன பின்ன மாக்கியே என்னை
நீர் சேஷமாக ஏற்றிடும் —என்னை

7 தைலத்தை ஊற்றிவிடும் என் தலைமேல்
தைலத்தை ஊற்றிவிடும்
என் உச்சி குளிர்ந்திடவே என் தலைமேல்
தைலத்தை ஊற்றிவிடும் —என்னை

---

163 சரணங்கள்

1 சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்
கர்த்தனே எங்கட்குக் கரம் தந்து என்றும் தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கும் சுத்த ஆவி தந்திடும்
சித்தமோடு இந்தவேளை வந்திறங்கிடும்

பல்லவி.

வானந் திறந்தருளும் பல தானங்களையிந் நேரமதில்
வானவனே ஞானமுள்ள வல்ல குருநாதனே
தேனிலும் மதுரம் திவ்விய ஆசீர்வாதங்கள்

2 என்னை முற்றும் மாற்றிடற் குன்னத பெலனூற்றிடும்
இன்னும் இன்னும் ஈசனையும் நல்வரங்களீந்திடும்
கண்ணிகளிற் சிக்கிடாமற் கண்மணிபோற் காத்திடும்
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே —வானந்

3 சுய ஆடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேணுமே
தயவு தாழ்மையினுவி தந்தருள வேணுமே
மாயமான யாவினின்றும் மனமதைப் பேணுமே
ஆயனே அடியார்களின் அடைக்கலமே —வானந்

4 அதிக அதிக அன்பில் அமிழ்ந்து அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்தும்மைப் போற்றிட
அதிசயமே அகத்தின் குறைகளகற்றியே
இதசமயமுன்னத பெலனீந்திடும். —வானந்

164

பல்லவி

அருமை ரக்ஷகரே உம்சமூகம் என்னேடிருக்க
அடியேன் விரும்புகிறேன் ஐயா

அனுபல்லவி

குருவேசுநாதா உந்தன் இருபாதங்கதி யென்று
கூப்பிடுமேழையின் வேண்டுதல் கேட்டு நீர்
சீக்கிரம் பாவிமேல் திருமுகம் நோக்குமே — அருமை

1 முன்னும் பின்னுமாய்த் தூதர் என்னேரங் காத்துவர
முழுதும் மனதிரங்கவேணும்
மன்னவா நானுமக்கு மனதிலுல் வாக்கால் செய்த
மாபாவம் நீர் பொறுக்க வேணும்
கன்னி யென்று நான் சொல்லி கணவா உம்மை மறந்து
கண்ணிலுல் காதிலுல் பின்னும் பாவிசெய்த
கணக்கில்லாப் பெருங்குற்றம் இரக்கமாய்ப் பொறுக்கவே—அருமை

2 பகலில்பறக்கும், அம்பு படும்வெயில் சோரர்பயம்
பலவிதமான பாவக் குணமும்
அகத்தினில் சாத்தான் எய்யும் அக்கினியாஸ்திரமும்
அடியேன் மேல் படாமல் தற்காரும்
பகைவரைக் கொல்ல முன்னுள்பலம் நீர் கொடுத்தது போல்
பசாசுபாவம் உலகம் மாமிசமதைக் கொல்ல
பலமான ஆவியின் பட்டயந் தாருமே —அருமை

3 இரக்கமாய் நீரொழுதிக் கொடுத்த வாக்குத்தத்தங்கள்
இருதயம் இளக்கு தென் ஐயா
உருக்கமாய் மோசேயோடே உன்முன்னே என்சமூகம்
ஓயாமல் செல்லுமென்றீர் துய்யா
நெருக்க வேளை கூப்பிட்டால் உருக்கமாய்க் கேட்பேனென்றே
நேசரே கிருபையின் நேசரே அடியேனை
மோசம் வராப்படி பாசமாய்க் காரையா —அருமை

4 காலங்குருகுதையா கவலை மிகுக்குதையா
கடைக்கண்ணு லெனைப்பாரும் ஐயா
ஞாலமெங்கும் நடக்கும் நடபடிகளை நானும்
நன்றாய் உணரவே எசையா

காலை மாலையு மெந்தன் கருத்தா வுமைத் துதித்து
கர்த்தா உன் வருகையில் உத்தமரோடு நான்
நித்தமும் துதிபாட அத்தனே அருள்புரி —அருமை

5 உலக முடிவுவரை உம்மோடிருப் போமென்று
உறுதியாய் வாக்குறைத்த துண்டே
மதலைக் குழந்தைதனை மாதா மறந்திட்டாலும் —உனை
மறவேனென்றொரு வாக்கு முண்டே
ஒருக்காலும் உன்னை நானுங் கைவிடேன் விட்டுவிடேன்
உரிமையாய் சுருதியி லெழுதிய மொழிதனை
சிறியனுன் பிடிக்கிறேன் தயவுடன் கிருபைசெய் —அருமை

---

165 பல்லவி

பழைய புதிய ஏற்பாடுகளிலே
அறுபத்தாறு புஸ்தகங்கள்

அனுபல்லவி

பெயர் நுழைய வேண்டுமானால் பரனருளாலே
பகுத்தவைகளைப் பாடுங்கள்

1 பழைய ஏற்பாட்டிலுள்ள புஸ்தகங்கள்
மூப்பத்தி யொன்பதாம் —மற்ற
புதிய ஏற்பாட்டிலோ பன்னிரண்டு குறைய
இருபத்தேழு புஸ்தகங்கள் —பழைய

2 ஆதியாகமம், யாத்திராகமம்,
லேவியராகமம்,
எண்ணாகமம், உபாகமம், யோசுவா,
நியாயாதிபதிகளுடன், ரூத்து —பழைய

3 ஒன்று சாமுவேல், இரண்டு சாமுவேல்,
ஒன்று இரண்டு ராஜாக்கள்—மற்
றொன்று நாளாகமம், இரண்டு நாளாகமம்
எஸ்ரா, நெகேமியா, எஸ்தர் —பழைய

4 யோபு, சங்கீதம், நீதிமொழிகள்,
பிரசங்கி, உன்னதப்பாட்டு,
ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியல்
தானியேல், ஓசியா, யோவேல், —பழைய

5 ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா,
நாகூம், ஆபகூக்,
செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா,
செப்பினேன் முப்பத் தொன்பதும் —பழைய

6 மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்
அப்போஸ்தலர் நடபடிகள்,
ரோமர், ஒன்று கொரிந்தியர் இரண்டு
கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர் —பழைய

7 பிலிப்பியர், கொலோசியர், ஒன்று தெசலோனிக்கேயர்,
இரண்டு தெசலோனிக்கேயர்
ஒன்று தீமோத்தேயு, இரண்டு தீமோத்தேயு
தீத்து, பிலேமோன் நிருபம் —பழைய

8 எபிரேயர், யாக்கோபு, ஒன்று பேதுரு,
இரண்டு பேதுருவும்,
ஒன்று, இரண்டு, மூன்று யோவான் நிருபங்கள்
யூதா, வெளிப்படுத்தல் —பழைய

9 அறுபத்தாறுமே ஆண்டவர் தாமே
அளித்த நம் வேதமே—அதை
முழங்காலிலிருந்து, முழுவதையும் நாமே
ஜெபத்துடன் படிப்போமே —பழைய

166

1 தோட்டக்காரனே திராட்ச தோட்டக்காரனே
அத்திமரத்தின் கனியைக் காணேன் தோட்டக்காரனே.

2 மூன்று வருஷமாய்க் கனியைத் தேடி வந்தேனே
இலையும் கிளையும் தளிருமன்றிக் கனியைக் காணேனே.

3 வெட்டிப் போடப்பா மரத்தை வெட்டிப் போடப்பா
நிலத்தையும் கெடுப்பதேன் வெட்டிப் போடப்பா.

4 இன்னும் ஓராண்டு இன்னும் ஓராண்டு
சுற்றிலுமாய்க் கொத்தி வெட்டிப் பண்படுத்துவேன்.

5 சீக்கிரம் வாறேன் சீக்கிரம் வாறேன்
அவரவர்க் குறிய பலன் என்னுடன் வருமே.

167

பல்லவி

ஆகா! பூலோக வாழ்வநித்யம்

அனுபல்லவி

சாகாவரங்கொண்டு யார்தான் புவிவந்தார் — ஆகா!

1 கதைபோல் வருஷங்கள் கழியுதே வீணாய்
அதை யோசித்தனது ஆத்துமம் பேணாய் —ஆகா!

2 புல்லோ புல்லின் கண் பூவோ இவ்வாணாள்
கல்லோ அதையுற்றுக் கவனிப்பாயானால் —ஆகா!

3 புகை போல் பறக்குதே புகலற்ற வாணாள்
திகையா தேசு பாதம் தேடிக் கொள் இந்நாள் —ஆகா!

168

1 ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்

பல்லவி

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்

2 ஊக்கத்துடனே ஓர்மூக்மாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர் —ஜெபமே

3 ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக் கொள்வோம் —ஜெபமே

4 இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீங்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
சுடைசி மட்டும் காத்திருப்போம் —ஜெபமே

---

169 பல்லவி

எந்த நாளும் என் ஏசுவின் நாம ஸ்துதி--சொல்லி
வாழ்த்திடுவேன் போற்றிப் பாடிடுவேன்

1 குருவாய் எனக்குபதேசம் சொல்லுகிறார்—எந்தன்
குணத்தைத் திருத்திப் பரிசுத்தம் செய்கிறார் —எந்த

2 தாயாய் எனையாதரித்திடுறார்—நல்ல
தந்தையாய் என்னை மூடிக் காத்திடுறார் —எந்த

3 ஆகாரம் தந்தென்னைப் போஷிக்கிறார்--எந்தன்
அவசியம் எல்லாம் கொடுத்தாளுகிறார் —எந்த

4 நித்திரையிலெனைக் காத்திடுறார்—ஒரு
நிமிஷமும் என்னை விட்டுப்பிரி வாங்கிடார் —எந்த

5 உள்ளம் திறந்தவரிடம் சொல்லுவேன்—என்னை
உருக்கி அவர் பாதத்தில் ஊற்றிடுவேன் —எந்த

6 வலது கையாலரவணைத்திடுறார்—அவர்
இடதுகை என் தலைக்குத் தலையணையே —எந்த

7 வெள்ளையங்கி தரித்தவர் கூட்டத்தில்—மிக
வெற்றியோடே அவரோடு சேர்ப்பார் —எந்த

8 மாசற்ற தேவ ஆட்டுக் குட்டியே—உன்னை
மறுகி மறுகித்துதி பாடிடுவேன் —எந்த

---

170 சரணங்கள்

1 குருசின்மேல் குருசின்மேல் காண்கின்றதாரிவர்
பிராணநாதன் பிராணநாதன் என் பேர்க்காய்ச் சாகின்றார்.

2 பாவத்தின் காட்சியை ஆத்மாவே பார்த்திடாய்
தேவ குமாரன் மா சாபத்திலாயினர்.

3 இந்த மாநேசத்தை நிந்தையாய்த் தள்ளினேன்
இம்மகா பாவத்தை எந்தையே மன்னிப்பீர்.

4 பாவத்தை நேசிக்க நான் இனிச் செல்வேனே
தேவனின் பிள்ளையாய் ஜீவிப்பேன் நானிதோ.

5 கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் சேர்ந்தாலும்
குருசினின் காட்சியைத் தரிசித்துத் தேறுவேன்.

6 சத்துருக்கள் தூஷணம் பேசியே நிந்தித்தால்
நித்தமும் குருசினின் நேசத்தைச் சிந்திப்பேன்.

7 பாவத்தின் சோதனை கோரமாய் வந்திடில்
ஆவலாய்க் குருசினின் காட்சியைச் சிந்திப்பேன்.

8 சூரைவெளியைப் போல் சூழ்ந்திடும் ஆபத்தில்
சிலுவையின் நேசத்தைப் பாவி நான் நோக்குவேன்.

9 சத்துருக்கள் கூட்டமாய்ச் சண்டைக்குச் சூழ்கையில்
சிலுவையில் காண்கின்ற நேசத்தைச் சிந்திப்பேன்.

10 இம்மகா நேசத்தை ஆத்மமே சிந்திப்பாய்
இம்மானுவேலே நீர் பாவியை நேசித்தீர்.

171

1 கருணையின் தேவா கதிதரும் மூவா
கர்த்தா உமக்கே ஸ்தோத்திரம்
பரலோகனே—பவ நாசனே
பானே — கானே — உமைக்
கண்டு மகிழ்ந்திடவே எமக்காசை
கருணை நிதியே காத்திடுவாயே —கருணை

2 வல்லமை ஞானம் நீதி நிறைந்த
வள்ளலே உமக்கே ஸ்தோத்திரம்
வரந்தாருமே – வந்து காருமே
வந்தோம் – தந்தோம் – உந்தன்
சுந்தரக் காத்தினில் மைந்தர்களெமையே
வருவாய் – தருவாய் – அருள்மாரியை யிப்போ —கருணை

3 பலியாக உமையே பாவிக்காயிந்த
பரனே உமக்கே ஸ்தோத்திரம்
புறம்பானீரோ – புவிமீதிலே
புகழ்வேன் – மகிழ்வேன் – உந்தன்
பொற்பாதம் பணிந்துமே ஆனந்தக் களிப்புடன்
பொல்லா உலகினின் இன்பத்தை வெறுத்து —கருணை

4 நித்ய மணாளா நிர்மல நாதா
நேசமே உமக்கே ஸ்தோத்திரம்
நினையா – நேரம் – வருவீரையா
நிதமே – விழிப்பாய் – உமைச்
சந்திக்க ஆயத்தமா யிருந்திடவே
நேசா ஜெபிக்க ஏவுதல் தாரும்.

172

பல்லவி

என்மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறையுண்டு? நீ சொல், மனமே.

சரணங்கள்

1 என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்,
மித்திரனே, சுகபத்திர மருளும் —என்

2 பாபமோ. மரணமோ. நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்;
சஞ்சலமினியேன்? நெஞ்சமே, மகிழாய், —என்

3 ஆசி செய்திடுவார், அருள் மிக வளிப்பார்,
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்;
மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும்; —என்

4 கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசிமட்டுங் கைவிடாதிருப்பார்;
பாவமன்னிப் பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்,
பரம பதவியினுள் என்தனை எடுப்பார் —என்

173

1 யேசுவண்டை சேரவும் நல் நேமிதுவே
மோசமான பாவிகட்கும் நேசரவரே
மோசமணுகாது காத்து மோட்சம் ஈவாரே
நேசரண்டை ஓடிவர.

பல்லவி

சுத்தம் சுத்தம் செய்யும் ரத்தத்தால்
சுத்தமாக்கி உன்னைச் சேர்த்துக் கொள்வரே
மோட்ச லோகம் போகலாம்.

2 வாழ் நாளெல்லாம் வீணுகக் கழிந்து போகுதே
நாளை நாளை என்று நீ நரகம் பேரகாதே
ஏழையாயினு மவர் தள்ளி விடாரே
வேளையிதில் வந்து சேர் —சுத்தம்

3 வலதுபுறக் கள்வனுக்கு வரமொன்றழித்தார்
பாவியான ஸ்திரீயின் பாவம் மன்னித்தார்
பாவ மன்னிப் பெங்கும் பிரசங்கியு மென்றார்
வா வா யேசுவண்டையில் —சுத்தம்

4 சிலுவையண்டை சேர் நித்திய ஜீவனுண்டதில்
காலங்களும் வீணுகக் கழிந்து போகுமுன்
பாழுலகும் பஞ்சு போற் பறந்து போகுமே
வாரும் யேசுவண்டையில் —சுத்தம்

5 பாவ மன்னிப்பீந்து பாவசுபாவம் மாற்றுவார்
பாவ லோகத்தை வெல்லும் பாதை காட்டுவார்
பூவுலகம் விட்டு பரிசுத்தரண்டையில்
ஆவலோடு சேரலாம் —சுத்தம்

---

174 பல்லவி

ஆத்ம நாதன் திருவடியே நமக்காதாரம் சிலுவைக் கொடியே

அனுபல்லவி

தோத்திரம் புகழ் துதியே சங்கீர்த்தனம் பண்பதம் பாடியே

சரணங்கள்

1 புத்தியுள்ள கன்னியரே பரிசுத்தராய் விளங்கினரே
நித்திரை மிகச் செய்தவரே
பின் கத்திக் கத்திப் புலம்பினரே —ஆத்

2 ஐங்காயத்தின் அடைக்கலமே நம்மை ஆதரிப்பதும் அவர்கரமே
நங்கூரமில்லா மரக்கலமே
நாற்றிசையும் ஓடி அழிந்திடுமே —ஆத்

3 ஏன் கலங்குகிறாய் நெஞ்சமே
கிறிஸ்தேசுவானவர் உன் தஞ்சமே
மா நில முழுதும் பஞ்சமே இம்மாயை யாவும் பிரபஞ்சமே —ஆத்

4 ஏசு கிறிஸ்துவை விசுவாசி எப்போதுமே அவரை நேசி
வேதப் புஸ்தகம் தினம் வாசி
அதை வேண்டாம் என்றவர் மாதோஷி —ஆத்

5 ஏகபரனை நாடிடுவேன், என் நாதன் திருவடி நம்பிடுவேன்
ஆபத்தில் எந்தன் அனுகூலா
எனை ஆதரித்தருள் மனுவேலா —ஆத்

6 தஞ்சம் அடைந்தோர் தாபரனே,
உனைத் தோத்தரித்தேனுன் திரு அடியே
தித்திக்கும் என் தேன்கனியே, திகட்டொணா என் மாங்கனியே
—ஆத்

175

1 மனுடவதாரா, பவவினை தீரா
பூவில் இவ்வாண்டதை புனித நெறியில் காவா
போதக நாயகமே—நீர் ஜீவனின் ஊற்றுமே—நான்
பருகிட சுரந்திடுமே

பல்லவி

தோத்திரம் பாடி துதி பணிந்தேற்றி
பாத்திரா உம்மைப் பணிவுடன் அடிபணிந்தேன்
காத்தீரே கருணையுடன் – என் கலக்கங்கள் மிக நீக்கி—நின்
காதலால் எம்மை நோக்கி —தோத்திரம்

2 கன்னியின் மைந்தா கருணையின் நேசா
கஸ்தியால் வந்த நித்திய மகிமையிதே
கானக வழியதிலே—நீர் கரம் கொடுத்தணைத்ததையே—நான்
கனவிலும் மறக்கலாமோ —தோத்திரம்

3 அழகில் சிறந்தோர் அதிசய ரூபர்
ஆதாவற்றோரின் அருமை யாரோவரே
இன்னிலம் உம்மை அல்லால் – என் யிடர்தீர்க்க வேறொருவர்—இவ்
விடமுண்டோ யானறியேன் —தோத்திரம்

4 காணுதற்கரிய கானக லீலியே
சிங்கக் கொடி மங்கா யெல்லே யெங்கும் சிறக்க
கிச்சிலி மரம் போலவே—உம் இச்சிக்கும் மேனியோடும்—நின்
ஆசை என்னில் தோணுதே —தோத்திரம்

176

பல்லவி

அஞ்சலோடு நெஞ்சுருகி ஆவலாய் வந்தேன்
ஏழை ஆரென்றடி யேனலறும் அபயம் கேள் ஐயா

1 நித்திரையில் விக்கினத்துக் குட்படாமலே—நின்
சித்தம் வைத்தென்னை ரட்சித்த தேவே ஸ்தோத்திரமே

2 மாமிசத்தின் இச்சையும் கண்களின் இச்சையும்
ஜீவனத்தின் பெருமை இவையில் நின்று கார் ஐயா

3 பார்வை பேச்சு கேள்வி சிந்தை யாவினுலுமே
வரும் பாவ தோஷங்கட்கும் என்னைப் பாதுகாரையா

4 ஆவி ஆத்துமா சரீரம் முழுவதையுமே
குற்றமற்றதாய் விளங்க கிருபை கூர் ஐயா

5 சஞ்சலம் தவிர்க்க உந்தன் தஞ்சமே அல்லால்
இத்தாரணியில் யாதும் காணேன் தாரகம் நீயே

6 இன்றடியார் செய்யும் வேலை யாவினுலுமே
நல்லின்ப ரூபம் தனையன் முன்பிலியங்கச் செய்யுமே

7 ஆயனே அடியாருக்கு நாயன் நீரல்லோ
இம் மாய வாழ்வில் ஒன்றுமில்லை மாய்கை மாய்கையே

---

177 பல்லவி

யேசுவின் முகம் என்று கண்டு கொண்டாடுவேன்
ஆசையதேயல்லால் வேறெனக் கில்லையே

1 நீரெனை நேசித்த நேசம் நினைக்கையில்
இதற்கினையாக நான் என்ன செய்திடலாம் —யேசு

2 பரம பிதாவண்டை பரத்திலுட்கார்ந்திட
பாரில் கழிப்பதின் நாட்களதிகமோ —யேசு

3 நல்ல போர் செய்தெந்தன் வேலை முடித்திட
வல்லவனே தினம் சக்தி நீர் நல்கிடும் —யேசு

4 என் கிரீடம் வேறு யாரும் எடுக்காமல்
உம் சித்தம் போலென்னை ஓடச் செய்திடுமே —யேசு

5 இவ்வன லோகத்தில் நீரெனக் காறுதல்
தந்தையும் தாயாரும் நீர்தானென் தெய்வமே —யேசு

6 கண்மணியே எந்தன் கண்ணீர்களெல்லாம் நீர்
பொற்கரத்தால் முகம் தொட்டுத் துடைப்பீரே —யேசு

178

1 ஆண்டவனே உமது எண்ணம்—போலச் செய்வதடியேன் திண்ணம்
ஆதரை மீதில் நின்பாதரம் —தானே எனக்குமே ஆதாரம்.

2 சொன்னபடியே செய்வேன் நாதா —என் அன்பு நிறைந்த திரு
பொற்பாதா
மன்னவா என்னவந்தாலுமே —மாறேன் ஆணை ஒருக்காலுமே.

3 கூறும் அடியேன் நான் கேட்டிட—பாரிலும்மைத் தினம் போற்றிட
வாரிபுவியாவும் படைத்தோனே —வாருதியே எம் கிருபா நிதியே

4 வாரும் இரண்டாவது முறையே —தருவாய் அருள்மாரி இறையே
கிருபை அன்பு நிறைந்த துரையே —அறச்செய்யும் எமதுகுறையே

179

1 இயேசுவைப்போல் சகாயஞ் செய்வார் இல்லையே! இல்லையே!
ஆத்மாவின்ரோகமும் நோவும் தீர்ப்பார் இல்லையே! இல்லையே!

பல்லவி

இன்பவாரி யேசுஸ்வாமி!– அன்பரில் நீர் பேரன்பரே!
நல்லோரும் வல்லோரும் உம்மைப்போல இல்லையே! இல்லையே!

2 மீட்பரைப்போல் மாசில்லாதோர் மேலோர் இல்லையே! இல்லையே!
கிறிஸ்துவைப்போல் மனத்தாழ்மையுள்ளோர் இல்லையே! இல்லையே

3 யேசுவினுலே வராத இன்பம் இல்லையே! இல்லையே!
ஆண்டவர் நீக்கமாட்டாத துன்பம் இல்லையே! இல்லையே!

4 நாதர் கைவிட்ட மெய்ப் பந்துர் உண்டோ? இல்லையே! இல்லையே!
மீட்கப்படாத மா பாவி உண்டோ? இல்லையே! இல்லையே!

5 யேசுவைப் போலக் கை தாங்கு வாரும் இல்லையே! இல்லையே!
மோட்ச பேரின்பம் கடாட்சிப்பாரும் இல்லையே! இல்லையே!

180

பல்லவி

பரலோக ராஜ, ராஜனிதோ வருவார்
ஓரேக தேவன் திரு உருவாய்—துதியாம் சேய்

1 எக்காளம் தொனிக்குமே ஓர் நிமிஷ இமைப்பொழுதிலே,
இமைப் பொழுதிலே,
அக்காலம் உயிர்த்திடுவார் சுத்தர் மறுரூபமாய், மறுரூபமாய்,
சீர்யேசு நாதன் மறுமுறையாய் வருவார்–சேய் —பர

2 மேக வாகனமாமே மேசியா மணாளனும், மணவாளனுப்,
கேரூபீன் சேராபீன்கள் கெம்பீர முழக்கமாய், மிகமுழக்கமாய்,
பூலோகமெங்கும் அதிசயிக்க வருவார் சேய் —பர

3 ஆயிரவருஷமும் அழியாத் திருநகரிலே, திருநகரினில்,
அன்பராமேசுவினுல் அழியா ஜீவன் பெற்றுமே, நிலைபெற்றுமே
இன்பமுடனே நித்தம் துதியே, துதியே சேய் —பர

4 கஷ்டம் துன்பம் துக்கம் அன்று பறந்திடுமே, பறந்திடுமே
மணவாட்டியாம் சபை மகிழ்ந்து கவிபாடுமே, கவிபாடுமே;
அல்லேலூயாத் தொனி அன்றுமே, கெம்பீரமாய் —பர

181

1 என் யேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்
வேறெந்த வீண் வாழ்வையும் நாடாதிருப்பேன்
உம்மாலே மா நன்மையை நான் கண்டடைந்தேன்
என் நாதா! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

2 இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
நீர் பிராணத் தியாகஞ் செய்து மீட்டுக் கொண்டீர்
மூட்கிரீடம் ஐங்காயமும் தியரீனிக்கிறேன்
என் நாதா! மென் மேலும் உம்மை நேசிக்கிறேன்

3 பேரன்பின் சொரூபி! உம்மைப் போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
என் ஜீவன் போனலுங்கூட நீங்கமாட்டேன்,
என் நாதா! மென் மேலும் உம்மை நேசிக்கிறேன்

4 பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங் கொள்வேன்
நீடூழி உம்முகங் கண்டு ஸ்தோத்தரிப்பேன்
எப்பாவ மில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

182

பல்லவி

பேயின் கோட்டைகளே எதிர்த்திடிப்போம்
எதிர்த்திடிப்போம் நாம் தகர்த்திடுவோம்

1 பாவ சஞ்சலங்கள் ஒழிந்துவிட
ஒழிந்துவிட சாப மழிந்துவிட —பேயின்

2 பிராணநாதர் பாதம் பாவி தேடவே
பாவி தேடவே அவன் தாவி நாடவே —பேயின்

3 பேதை நெஞ்சர்களைத் திடப்படுத்த
திடப்படுத்த பேயை உதைத்து ஓட்ட —பேயின்

4 கைலாச பதவி யெல்லாரும் பெறவே
எல்லாரும் பெறவே பொல்லா தோரறவே —பேயின்

183

1 திவ்ய எக்காள சத்தம் கேட்க யேசு தோன்றும் காலத்தில்
ஆவலாய் அக்காட்சி கண்டானந்திப்பேன்;
மீட்கப்பட்ட தாசர் ஒன்றுகூடி மோட்சலோகத்தில்
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

பல்லவி

தாசர் விண்ணில் ஒன்றுகூடி, தாசர் விண்ணில் ஒன்றுகூடி
தாசர் விண்ணில் ஒன்று கூடி
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

2 நித்தரை செய்த பக்தர் உயிர்த்து வானமேறியேகுவார்
மீட்பர் மாண்பைக் கண்டு ஆரவாரிப்பேன்
விசுவாசிகள் எல்லோரும் விண்ணில் கூடி வாழுவார்
அந்த நாளில் நானும் கூட வாழுவேன்

3 யேசுநாதரின் பேரன்பை எங்கும் கூறும்படிக்கே
சோர்வில்லாமல் வேலை செய்து ஜீவிப்பேன்
பின்பு, தாசர் ஒன்றுகூடி தேவசந்நிதியிலே
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

184 பல்லவி

பரிசுத்தர் பரிசுத்தரே ஏசையா உம்மை
பாடுவேன் பாடுவேன் நானே

அனுபல்லவி

கடைக்கண்ணால் பாருமென்னைப் படைத்த பராபரனே

1 திசையறியாமல் தியங்கி—யேசையா சுவாமி
தெருக்க ளெல்லாம் அலைந்தேன் நான்
மனங்கசந்தழுகையில்—மாளிகை காட்டினீரே —பரி

2 பாவச்சுமைகள் சுமந்தேன் யேசையா சுவாமி
பாரினிலே வெகு நாளாய்
பாவி நான் வந்தேன் எந்தன் பாரம் குறைத்துவிடும் —பரி

3 கட்டுகளோடு வந்தேன் நான் யேசையா சுவாமி
திட்டிவாசல் திறவுமே
பட்டதுயர் நினைத்தால் எட்டினதற்புதமே —பரி

4 விரைவுடன் வழி நடக்க யேசையா சுவாமி
உலகிடர் படை நடுவானேன்
எதிர்த்தாலினிவிடுமோ எகன் கிருபை தந்தால் —பரி

5 தரிசிக்க வழிவேறில்லை யேசையா சுவாமி
பாகதி தரும் குரு நீரே
விரைவுடன் வந்து என்னை சுகமிடம் சேர்த்தருளும் —பரி

185

1 ஆதியும் அந்தமும் இல்லாத ஜோதி —ஆண்டவா
உன்பாதம் போற்றினேம் (*3 times*)
ஆயனே நல் திவ்ய காயனே வந்தருள்
தூய கிருபா நிதியே

2 காணக் கூடாத சொரூபனே — எமைக்
கண்மணி போல் காக்கும் நீதனே (*3 times*)
கண்டிட உன்னருள் கொண்டிட
இவ்விடம் வந்தாள் தினகரனே

3 மனோகரமான உந்தன் அருள் பெற —மாந்தர்கள்
வந்திதோ கூடினோம் (*3 times*)
மாதேவனே கருணாகரனே
கிருபாவரமே தரவா

4 பாலில் கழுவிய நேர்த்தியானக் கண்ணே
லீலிப் புஷ்பத்திடை மேய்ந்திடும் பால் வண்ணே (*3 times*)
சாலேமின் ராஜா சாரோனின் ரோஜா
சாந்தப் பூபதி வா வா

5 கோடாகோடி தூதர் பாடித்துதித்திடும்
வாடாமணி முடிக்கிரீடனே (*3 times*)
வாடா முடி சூடிப் பொன்னகர் சேர்ந்திட
பின்மாரி ஊற்றிட வா

6 மதுரமான வாயா சதுரகர் நேயா
பத்மராகக் கல்லின் அஸ்திபாரத் தேயா (*3 times*)
திறமுடன் உன்நாமம் சாட்சியாய்ப் புகன்றிட
வரமுடன் உன்னைவிதா

7 உத்தமியோ என்புருவோ ஒருத்தியே
பழுதற்ற பூரணரூபாவதி (*3 times*)
என்றழைக்கும் இன்ப சத்தத்திற்கு
என்னைப் பாத்திர மாக்கிடவா.

---

186 பல்லவி

ஜெயம்! ஜெயம்! அல்லேலூயா! !ஜெயம்! ஜெயம்! எப்போதும்
யேசுநாதர் நாமத்திற்கு ஜெயம்! ஜெயம்! எப்போதும்.

1 பாவசஞ்சலத்தை விட நாளைவரைக் காத்திராதே
ரட்சகரே அழைக்கிறார் பாவிகளே வாருங்கள் — ஜெ

2 உம்மைப் பின் செல்வேன் என் சுவாமி எனக்காக நீர் மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நான் நிற்பேன் —ஜெ

3 பாவி பாவி, பாவி, பாவி பரலோகம் சேராலாம்
பரம கிறிஸ்து வண்டை பாவி நீ ஓடிவா —ஜெ

4 நானே வழி நானே சத்யம் நானே ஜீவன் என்றுரே
நாதன் கிறிஸ்து வண்டை பாவி நீ ஓடிவா —ஜெ

5 நானே ரக்ஷி, நானே ரக்ஷி, நானே ரக்ஷிக்கப்பட்டேன்
நானே ரக்ஷி, நானே ரக்ஷி, நானே ரக்ஷிக்கப்பட்டேன் —ஜெ

---

187 பல்லவி

வேத புத்தகமே, வேத புத்தகமே,
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே.

1 பேதைகளின் ஞானமே —பெரிய திரவியமே
பாதைக்கு நல் தீபமே — பாக்கியர் விரும்பும் தேனே —வேத

2 என்னை எனக்குக் காட்டி —என் நிலைமையை மாற்றி
பொன்னுலகத்தைக் காட்டிப் —போகும் வழி சொல்வாயே —வேத

3 துன்பக் காலம் ஆறுதல் — உன்னுலுண்டு சாகுதல்
இன்பமாகுமென்றுயே —என்றும் நம்பின பேர்க்கே —வேத

4 பன்னிருமாதங்களும் — பறித்துண்ணலாம் உன் கனி
உன்னைத் தியானிப்பவர் —உயர்கதி சேர்ந்திடுவார் —வேத

---

188 பல்லவி

மேகமீது தூதரோடிதோ, இதோ,
மேசையா-கிறிஸ்தேசையா, எனதாசை நேசையா
வாரார், வாரார் மகிழ்-கெம்பீரமாய்

1 தேகத்தோடு போனவர் இவர், இவர்
திரும்பவும் பதினாயிரம் பரிசுத்தர் சூழ்ந்திட
சீக்ரம் வாரார் ஜெகத்தை நோக்கியே —மேக

2 ஆரவாரம் கேட்குதே அதோ, அதோ
ஆட்டுக்குட்டியின் பாட்டெக்காளம் அதில் தொனிக்குதே
அல்லேலுயா அருமை ரக்ஷகா —மேக

3 ஒலிவ மலை விட்டேகினர் அன்றே, அன்றே
உருவத்தோடவர் திரும்ப வாரதை உற்று நோக்கியே
ஓடிப்பாடி உவந்து போற்றுவோம். —மேக

4 மனுவேல் ராஜன் வருகிறார் இதோ, இதோ
மலைகடுங்கிட புவி அதிர்ந்திட கடல் கலங்கிட
வானோர் பூவோர் வணங்கி நிற்கிறார் —மேக

5 யேசு ராஜன் புறப்பட்டார் ஜெயா, ஜெயா
ஜெகமேல கடலிலுள்ளோர் உயிர்த்தெதிர் சென்றேகிறார்
கோடா கோடி சேனை சூழ்ந்திட —மேக

189

பல்லவி

சீயோன் மலையின் மேலே நிற்பது யார்
தேவாட்டுக் குட்டியல்லோ

அனுபல்லவி

அத்தனைபே அவர் சுத்தரும் நிற்கிறார்
அப்பனின் தன் நாமம் நெற்றியில் கொண்டவர்

1 ஒரு லட்சத்து நாற்பத்து நாலாயிரம்
பேரங்கு துதி பாடுறார்
பாவியான மகா பாபிலோன் ஸ்திரி
தன்னில் கறை படா துன்னத சுத்தர்கள் —சீயோன்

2 பெருவெள்ள இரைச்சல் போலும்
பலத்ததோர் பேரிடி முழக்கம் போலும்
ஒருசத்தம் வானத்தில் உண்டாகக் கேட்கிறேன்
உன்னத சுரமண்டல சத்தம் போலேயே —சீயோன்

3 சிங்காசனத்தின் முன்பாய்
நான்கு நல்ல ஜீவன்களுக்கு முன்பாய்
புதுப்பாட்டைப் பாடும் நல்ல புதுச்சத்தம் கேட்குது,
பூமியின் பரிசுத்த ரல்லவோ பாடுகிறார் —சீயோன்

4 மீட்கப் பட்டவரல்லால்
இப்பாட்டை வேறுரும் அறிகுவாரோ
வேறுரும் கற்றிடக் கூடா நிலைமையில்
நாதன் அவர் மக்கட்காகக் கொடுத்திட்டார் —சீயோன்

5 கபடங்கள் காணவில்லை இவரிலே
கறை ஒன்றும் தோன்ற வில்லை
தெய்வத்தின் சிங்காசனத்திற்கு முன்பாக
மாசில்லாத சுத்தராக விழுங்குறார் —சீயோன்

6 எழைப் பாதேசியும் இக்கூட்டத்தில்
எப்போதும் சேர்ந்து நின்று
துத்தியம் பாடுவேன் துதிகளைச் சொல்லுவேன்
எத்தனை ஆனந்தம் என் அகம் துள்ளுதே —சீயோன்

7 பாவம் உள்ள மனுஷா உனக்கதில்
பங்குண்டோ என்பதைப் பார்
லோகத்தை நேசித்தல் லோக லோகினில் வாழ்கிறாய்
பாதாளத்தின் பொல்லா பயங்கர முடிவல்லோ —சீயோன்

8 இத்தரிசன மல்லோ இவ்வேளையை
இழுக்குதல்லோ பரலோகம்
என் ஏசுநாதனே என் சொந்த தங்கமே
உன்னோடும் உன் சுத்தரோடும் நான் வாழுவேன் —சீயோன்

9 எத் தொல்லை வந்திட்டாலும்
இச்சந்தோஷம் என்னை விட்டெடு படுமோ
அத்தனின் கைவச மல்லோ இருக்கிறேன்
பறித்துக் கொள்ள ஒருபலவானும் உண்டுமோ? —சீயோன்

10 லோகம் ஜெயித்தோரல்லோ என் ஏசுவும்
லோகம் கடந்தோரல்லோ
அவர் என்னிலே உள்ளும் புறம்புமாயிருக்கையில்
அசுத்த லோகமே உந்தன் அமளிகள் செல்லுமோ? —சீயோன்

11 ஜெயங்கொண்ட சுத்தரோடு என் ஏசுவால்
ஜெயங்கொண்டு துதி பாடுவேன்
ஜெயத்தோடு ஏசுவின் சுவிசேஷம் சொல்லுவேன்
ஜெயக்கொடி பிடித்தெந்தன் ஏசுமுன் செல்கிறார்—சீயோன்

190

1 வல்ல பராபரா நல்ல குருவே
வல்லமையாக வருவீர்
தொல்லுல கிதிலே புல்லரின் திகிலே
அல்லல்கள் தொல்லைகள் சில்லறுத்தகல
வல்ல வரங்கள் வந்து தா.

2 ஞான பராபர வானவ வர்சனே
ஞான வரங்கள் தருவீர்
ஈனவுலகில் மீதெளியானே
கானக வழிதனில் ஓடி நடப்பதற்கு
ஞான வரங்கள் தர வா.

3 பங்க மனதுகளின் மங்கல்களு மகல
எங்கள் மனதில் வருவீர்
சங்கட மாய்கை இங்கடையாமல்
எங்கள் துயரங்களும் கங்கு கறை மூழுதும்
ஒங்க விடாமல் துரையே.

4 ஆதி பராபரனே மரி மகனே
ஏது மறியா மனங்கள்
போதனை மறையின் சாதனையடைந்து
வா தினமிது தனிலுள குற்றங்களகற்றி
ஜோதி மயமாய் விளங்க.

5 என்று மடியாருமை இன்றும் தவருமலே
நன்றியுடன் பணிவோமே
நற்பர குருவே நிட்சயம் நமையே
கற்புத் தவருமலே, காத்துக் கடைசி வரை
பக்தி வழியில் நடத்தும்.

6 இன்பமுடைய திரு முன்பு அடைவதென்று
இன்று வரையும் காணேனே
யேசுவின் பாதம் நேசர் நாவெல்லாம்
ஆசையுடனிருந்து, நேசர் முகமும் கண்டு
ஜீவ முடியும் சூடலாம்.

191

1 மேலோக ராஜன் வருங் காலமாகுது—சாலோக
மகிமை பெறலாம் பாவி ஓடி வா

2 பாவம் நித்தமும் மனம் நோகச் செய்யுது—பரி
சுத்தரித்தரையில் வந்தால் முற்றும் நீங்கிடும்

3 இரவு போயிற்று பகல் சமீபமாயிற்று—இருளின்
செய்கை தள்ளி ஒளியின் கவசம் தரிப்போம்

4 குடிவெறி வேண்டாம் கோள்குண்டுணி வேண்டாம்
பகலின் பிள்ளைகள் போல் சீராய் நடக்கக் கடவோம்

5 எருசலேம் நகர் மகா அரசர் மாளிகை—அதை
எறிட்டுக் கண்ணுலே பார்த்தால் ஏக்கம் தீருமே

6 ஆசனங்களில் ஏசுதாசரிருப்பார்—அதின்
மத்தியிலோ ராசனம் இம்மானுவேலர்க்கு

7 பாவத்தை வெறு பசாசை யோட்டிடு—பரி
சுத்தம், நீதி, அன்பு, தாழ்மை அங்கியாய்ப் போடு

8 சாவு ஓர் புறம் பயங்காட்டி நிற்குது—இச்
சாவை வென்ற ஏசுவை யுன் தஞ்சமாக்கிக் கொள்

9 பரிசுத்தரைக் காண வெகு சுத்தம் வேணுமே—திரு
ஏசுவே உம் ரத்தத்தாலே சுத்தமாக்குமே

10 தோத்திரம் சொல்வேன் மிகு தோத்திரம் சொல்வேன்
சுதனுவிக்கும் பிதாவுக்குமே தோத்திரம் சொல்வேன்

192

1 ஜீவ பாதையில் வீசும் பிரகாசத்தில்
தீவிரம் நடப்பதே என தீர்த்திரம்
பாவ உலகத்துடன் நான் சேர்ந்திடேன்
தேவாட்டுக்குட்டி பின்னே போகத் துணிந்தேன்.

பல்லவி

நான் போகிறேன், நான் போகிறேன்
இன்னலெனும் குன்று கண்டு நான் அஞ்சிடேன்
நிந்தை படும் சில தேவ மைந்தர்களுடன்
நான் போகிறேன். யேசுவே நான் போகிறேன்.

2 ஓட்டம் தொடங்கின போர் அதிகம்
மீட்பருடன் போனோர் மெத்த மெதுவாய்
கூட்டம் புதிதென்று சிலர் கூடினர்
நாட்கள் போனதால், பலர் வாட்டமடைந்தார் —நான்

3 கெட்ட உலகத்தின் கட்டுகளில் நான்
பட்டுப் பாம பாதை விட்டு விலகேன்
கற்களே என் தலையின் அணையாக்கினும்
வெட்கமடையேன், நீட்டர், பின் செல்வேன் —நான்

4 நித்திய சந்தோஷங்களின் ராட்சியம்
நிச்சயம் சேரில் கஷ்ட பாதை நடப்பீர்
அட்சயனழைத்த சிறு மந்தையைச் சேர்ந்து
இட்சகருடன், போவோம், முற்று முடிய —நான்

193

1 ஐயரே நீர் தங்கும்—என்னுடன் ஐயரே நீர் தங்கும்
இப்போ அந்திநேரம் பொழுதஸ்தமித்தாச்சே
ஐயா நீர் இரங்கும்.

2 பகல் முழுதுங் காத்தீர்—சென்ற பகல் முழுதுங் காத்தீர்
தோத்திரம் பரமனே இந்த இரவிலும் வாரும்
பாவியை நீர் காரும்.

3 தங்காதொரு பொருளும்—என்னிடம் தங்காதொரு பொருளும்
யேசு தற்பரனே நீர் ஒருவரே யென்னில்
தங்கித் தயைபுரியும்.

4 நீர் தங்கிடும் வீட்டில்—யேசுவே நீர் தங்கிடும் வீட்டில்
எல்லாம் நிறைவே அன்றி குறையாமோ கர்த்தா?
நின்னை விடமாட்டேன்.

5 என் பாவம் மன்னியும்—இறையே என் பாவம் மன்னியும்
அப்போ தெளியேன் உம்மோடயர்வேன் இரவில்
எனக்கோர் திகிலேது.

6 எனக்கும் நீர் காவல் —ஏசுவே எனக்கும் நீர்காவல்
எந்தன் இனத்தார், ஜனத்தார், எளியோர், வலியோர்
எல்லாருக்கும் நீர் காவல்.

7 உயிரே துமையன்றி —பாவிக்குயிரே துமையன்றி
எந்தன் உடல், உயிர் உம்மால் உய்கிறதையா
உத்தமனே தங்கும்.

8 உம்மோடே படுப்பேன் —ஏசுவே உம்மோடே படுப்பேன்
இரவில் உம்மோடயர்வேன் சேதமில்லாமல்
உம்மோடெழுந்திருப்பேன்.

9 மரணம் ஜெயித்தோர் நீர் —மெய்யாய் மரணம் ஜெயித்தோர் நீர்
உம்மால் மரணமே கூரெங்கே? நரகே நின்
வலு ஜெய மெங்கே என்பேன் —ஐயரே

194

1 என் ஜீவியத்திற்கு நேர் பாதை
ஏன் அருமை ரட்சகரே
என் பாதையின் ஒளியும் நீரே
என் பரம நாயகரே

பல்லவி

என் பாதை கிறிஸ்து தானல்லோ
என் நேச ஏசையரே
என் பாவத்துக்காய் மரித்தீரே
என்னைப் பரிசுத்தமாக்க

2 நான் பின்னானவைகள் மறப்பேன்
முன்னானவைகளைப் பார்ப்பேன்
என் கர்த்தாவே நீர் சொல்லும் பாதை (பிலி. 3: 14)
நான் கருத்தாய்ச் செல்வேன் அப்பா —என்

3 என் ஜீவியத்தின் லக்கு நீரே
என் ஜீவாதிபதியும் நீர்
என் ஜீவனின் எஜமான் நீரே
என் ஜீவியத்தை நடத்தும் —என்

4 நான் என்பது என்னில் வேண்டாம்
நீர் மாத்ரம் என்னில் தங்கும் (கலா 2:20)
நான் என்னைப் பார்க்கும் நேரம் எல்லாம்
ஓர் ஏசுவைக் காணட்டுமே —என்

5 வானங்களின் வழியே சென்ற
மெய் வானங்களின் பிதாவே
அவ் வானங்களின் வழி செல்ல (எபி. 4:14)
நீர் வந்தென்னையும் நடத்தும் —என்

6 என் பந்தயப் பொருள் மேலோகம்
ஈலோக இன்பம் குப்பையே
அப் பொருளையே நோக்கிச் சென்ற
என் பொன்னேசுவைப் பார்ப்பேன் நான் —என்

7 நான் அந்தி சந்தி மத்தியானம்
என் அன்பரின் சத்தம் கேட்டு
அன்பாயவர் காட்டிடும் பாதை
இன்பமென்று பின் செல்வேன் நான் —என்

8 என் சாவின் அந்தகார வேளை
வந்தென்னைச் சஞ்சலித்தும்
நான் சாய்வேன் என் பொன்னேசின் மார்பில்
நான் சதா சந்தோஷங் கொள்வேன் —என்

---

195 பல்லவி

எப்போதுமே இன்ப வாழ்வே
ஏசையர் என்னோடிருப்பதாலே

1 எப்பொருளும் குப்பை போன்றனவே—மார்ந்தர்
எல்லாரும் ஓர் நாளில் தூசி தானே
என்னருமை நேசர் ஏசு நாதர்
எனக் கெல்லாம் அவர் பின்னே ஏது குறை —எப்

2 மாதா, பிதா, உற்றூர் மாண்டிட்டாலும்—பின்னும்
மற்றுள்ள இஷ்டர் மறைந்திட்டாலும்
மன்னன் கிறிஸ்தேசு மங்கா நேசர்
எனக் கென்ன குறை? எனக் கேது பீடை? —எப்

3 காவற்காரர் யேசு கண்ணுறங்கார்—என் மேல்
ஆவல் மிகுத்தோர் அன்புமிகுத்தோர்
பட்டயத்தால் பக்கத் தாயிரம் சாயினும்
பயந்திடேன் சற்று மயர்ந்திடேன் —எப்

4 தங்குமிடம் பூமி சத்திரமே—விண்ணின்
தங்கவீட்டின் வாழ்வு நித்தியமே
மங்கா வாழ்வு எனக் கங்கேயுண்டு பின்
இங்கே எதை என் பங்கென்றெண்ணுவேன் —எப்

5 எத்தனையாய் மாந்தர் தூஷித்தாலும்—பின்னும்
இழந்தென் பேரைக் கெடுத்திட்டாலும்
ஏதும் சொல்லேன் நாவெழும்ப விடேன்
கிறிஸ் தேசையர் போலவர்க்கிரங்கிடுவேன் —எப்

6 என்ன கஷ்டம் தொல்லை துன்பம் வந்தும்—சாத்
தான் ஏக படையாய் எனைச் சூழ்ந்தாலும்
என்ன பயம்? அதால் ஏதபாயம்?
எனக்கேசு துணை சேனைவீரர் அவர் —எப்

7 ஆதாவானேர் அருமையானேர்—இந்தப்
பூதலம் விட்டோடிப் போனலுமே
ஆதாவாய் ஏசை அண்டிச் சேர
ஆவலாகுமதால் எனக்கப்போதுமே —எப்

8 நிற்பேன் என் நேசர் கரம் பிடிப்பேன்—சாத்
தான் நிற்காதோட மறைவாள் பிடிப்பேன்
விற் பிடிப்பேன் ஜெய வெற்றி கொள்வேன்
சேனைவீரர் பலத்தாலே தீரனுவேன் —எப்

196

1 இயேசுவே என் மேய்ப்பர், இயேசுவே, இயேசுவே,
இயேசுவே என் மேய்ப்பர், என் மேய்ப்பர் இயேசுவே.
2 இயேசுவே என் மீட்பர்— இயேசுவே
3 இயேசுவே என் ஜீவன்— ,,
4 இயேசுவே என் நீதி— ,,
5 இயேசுவே என் பொக்கிஷம்— ,,
6 இயேசுவே என் மோட்சம்— ,,
7 இயேசுவே என் கீதம்— ,,
8 இயேசுவே என் ஞானம்— ,,
9 இயேசுவே என் பெலன்— ,,
10 இயேசுவே என் காவல்— ,,
11 இயேசுவே என் தஞ்சம்— ,,
12 இயேசுவே என் ராஜா— ,,
13 இயேசுவே என் தேவன்— ,,

197

1 இரத்தத்தால் ஜெயம், இரத்தத்தால் ஜெயம்
இரத்தத்தால் ஜெயம் யேசுவே
அல்லேலூயா, அல்லேலூயா,
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே.
2 இயேசு ஜெயித்தார் —சாத்தானே
3 நாமும் ஜெயிப்போம் —சாத்தானே
4 சாத்தான் தோற்றுப்போய் —இரத்தத்தால்
5 இரத்தம் சொரிந்தார் —சிலுவையில்
6 மீட்கப்பட்டோர் நாம் —இரத்தத்தால்
7 ஜீவகிரீடம் —சூடுவோம்
8 கீதம் பாடுவோம் —நித்யமாய்
9 வாழ்வோம் விண் வீட்டில் —ராஜாவாய்

198

பல்லவி

வாருமே ஏசு பாதம் சேருமே—பாரில் பாவம் தீருமே

அனுபல்லவி

வரும் யாரையும் தள்ளே னென்று
வாக்கு அன்பாய்க் கூறினரே—வாருமே.

1 பாவமே அது பொல்லா விஷமே—அது உன்னை நாசமாய்
போகச் செய்வதும் தீ நரகினில்
வேகச் செய்யுமே எந்தக் காலமும் —வாருமே.
2 மரணமே நினையா நேரமே—பிரிவினை செய்யுமே
தருணம் போக்காதே கிருபை தாங்குது
இது சமயம் தேடு ஜல்தியில் —வாருமே.
3 செல்வத்தை நாடி ஓடிச் செல்வாயோ? சேர்த்திடுமே நரகில்
எல்லாம் விழல் என்று எண்ணி
நேசர் பாதம் அண்டிக் கொள் —வாருமே.
4 மாயமே மண்ணுலகில் யாவதுமே—மனக்கவலை தருமே
மயங்காமலே மனதில் தினம்
மகிபான்பில் அமிழ்ந்து நட —வாருமே.

199

1 வாசிக்க சிறந்த புஸ்தகம் வேதம்
வாசிக்க சிறந்த புஸ்தகம் வேதம்
அன்றுமே வாசித்தால்—குன்றாது நடத்துமே
ஓ! வாசிக்க சிறந்த புஸ்தகம் வேதம்.

2 நேசிக்க சிறந்தவர் கிறிஸ்தேசு
நேசிக்க சிறந்தவர் கிறிஸ்தேசு
ஜெபிக்கும் போது கேட்பாரே—தவிக்கும்போது காப்பாரே
ஓ! நேசிக்க சிறந்தவர் கிறிஸ்தேசு.

200

ஆம்! நானங்கிருப்பேன்
அல்லேலூயா அங்கிருப்பேன்
அங்கிருக்கும் அல்லேலூயா கூட்டத்தில்
ஆர்ப்பரிப்பேன் அல்லேலூயா
இயேசுவைக் காணும் போது
அங்கிருக்கும் அல்லேலூயா கூட்டத்தில்

201

1 சுத்தர் துதிக்கும் வீடே; தெய்வமக்களின் ஆறுதலே
ஒளி மினுங்கும், பொற்தெரு வீதியினில்
அக மகிழ்வோ டென்று நான் சேர்ந்திடுவேன்

பல்லவி

வானவரின் துதிகளெல்லாம் தொனித்திடுமச் சாலேமில்
நானென்று சேர்ந்திடுவேன்—பரிசுத்தரை
என்று நான் சேர்ந்திடுவேன்.

2 முத்துக்கள் முற்றுமுள்ள, வாசல்கள் பன்னிரண்டங்கேயுண்டு
கர்த்தரின், மகிமை கண்டானந்திக்க
கண்களெல்லாம் எப்போ வென்றுரைக்குதே —வான

3 இருளில்லா இன்பநாடே, தெய்வ அருளுள்ள நல்ல வீடே
ஒளி கொடுப்பார், தேவாட்டுக்குட்டி யங்கே
அளவின்றிப் பாடித் துதித்திடுவேன் —வான

4 கஷ்டங்களில்லா நாடே, தெய்வ பக்தரின் ஆறுதலே
புகழ் பெருகும் புதிய எருசலேமே
திருமார்பில் என்று நான் சார்ந்திடுவேன் —வான

5 களங்கமில்லாத் தெளிந்த, சுத்த ஜீவ ஜல நதியின்
கரைகளதில் ஜீவ விருட்சக்கனி
பிரபையுள்ள தெய்வத்தின் தோட்டமது —வான

6 சுத்தர் சிங்காசனத்தை, சுற்றிவரச் சுரமண்டலக்காரரே
நதிபோன்ற ஆசை யுண்டாகு தென்னில்
தூதரோடு சேர்ந்தங்கு பாடிடவே —வான

202

பல்லவி

உருகாயோ நெஞ்சமே நீ, குருசினில் அந்தோ பார்;
கரங்கால்கள் ஆணியேறி, திருமேனி நையுதே

1 தாகமிஞ்சி நாவறண்டு தங்கமேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து, எத்தனையாய் ஏங்குறார் —உரு

2 மூவுலகும் தாங்கும் தேவன் மூன்று ஆணி தாங்கிடவோ
சாவுவேளை வந்து மிப்போ சிலுவையில் தொங்குறார் —உரு

3 வல்ல பேயை வெல்ல வானம் விட்டு வந்த தெய்வம் பாராய்
புல்லரிதோ நன்றி கெட்டு புறம்பாக்கினரன்றே —உரு

4 மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை மாய்க்க வந்த மன்னவரும்
இன்னிலமெல்லாம் புரக்க ஈன குருசேறினார் —உரு

5 நித்ய காலம் பாத்திராய் நீசர் வாசஸ்தலம் உய்ய
சத்ய தாசர் சித்த மேவும் சங்கை ராஜன் இங்கு பார் —உரு

203

தொண்டு செய்வேன் என்றும் (2 *Times*)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே
தொண்டு செய்வேன் என்றும் (2 *Times*)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

1 அவர் அழைப்பை அனுசரித்து (3 *Times*)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

2 வீடானலும் காடானலும் (3 Times)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

3 கர்தையானலும் நிந்தையானலும் (3 Times)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

4 அடியானலும் மிதியானலும் (3 Times)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

5 மழையானலும் வெயிலானலும் (3 Times)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

6 துன்பமானலும் இன்பமானலும் (3 Times)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

7 தனித்தானலும் கூட்டமானலும் (3 Times)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

204

1 யேசுவின் ராஜ்யம் பரலோக ராஜ்யம் சிநேகத்தின் சாம்ராஜ்யம்
நாசமில்லாத சாஸ்வத ராஜ்யம் பக்தரின் பரமவாசம்.

2 கஷ்டமுமில்லை கவலையுமில்லை கண்ணீரென்பதே இல்லை
க்லேசமும் இல்லை குரூரமுமில்லை கோபம் ஏதேனுமில்லை

3 பட்டினி இல்லை பசிதாகம் இல்லை வர்க்கபேதமுமில்லை
பாவமும் இல்லை சாபமுமில்லை மரணமுமில்லையங்கே— யேசு

4 காட்டானென்றில்லை நாட்டானென்றில்லை எடறியானென்றில்லை
கறுத்தவனென்றும் வெளுத்தவனென்றும் எழுத்தறிந்தவ
[னென்றில்லை

5 வஞ்சனையில்லை வாக்கு வாதமில்லை வர்க்க பேதமுமில்லை
வைராக்யமில்லை பொய் வாக்கியமில்லை மெய்யாய் நல் ராஜ்ஜியமே.

6 நாசிசம், பேசிசம், எத்திசம் போல்ஷேவ்ஸம் கம்யூனிசமுமில்லை
லீகலீஸமும் மிர்டனிசமும் காந்தீசமுமில்லை

7 பாம்புகள், ட்டாங்குகள் ஆயின இல்லை டார்பிடோ மெஷின்
[கன்னில்லை—யேசு
பயந்து ஒளித்திட குழிகளுமில்லை குணசீலர் ராஜ்யத்தில்—யேசு

8 பீடியுமில்லை சிகரெட்டுமில்லை பெரிய சுருட்டுமில்லை
பொடி அபினில்லை புகையிலை இல்லை கஞ்சாலேகியமில்லை—யேசு

9 ட்டாடியுமில்லே காடியுமில்லே அடிதடிகளுமில்லே
சாராயத் தோடு காரமாய்ச் சேர்த்த குடிவெறிகளுமில்லே.

10 பிராண்டியுடன் சேர்த்து உல்லாச உவெயினின் சல்லாபமுமில்லே
விஸ்கியும் பீரும் ஜின்னுமுண்டாக்கும் சின்னுமங்கே இல்லே—யேசு

11 நாடகக் காக்ஷியும் பாம்பேஷோ மாட்சியும் வஞ்சகர் சூட்சியுமில்லே
சினிமாவின் சிறப்பும் சர்க்கஸின் கிறுக்கும் வாலிப முறுக்குமில்லே
—யேசு

12 கல்வியின் கருக்கும் செல்வியின் செருக்கும் வாய்ச்சாலர் திருக்கு
[மில்லே
காவியர் போட்டியும் தேவிமார் பேட்டியும் கனவிலுமங்கில்லே
—யேசு

13 வீணைகள் மீட்டி கானங்கள்பாடும் கர்த்தாவின் சுத்தர்களும்
கர்த்தாதி கர்த்தனும் யேசுவே ராஜனுய் காண்கின்ற ராஜ்யமே—யேசு

205

பல்லவி

வரவேணும் பானுவியே இறங்கும் தணலாய்த்தாவியே

அனுபல்லவி

மருளாம் பாவம் மருவிய என்னை
வானுக்கினியால் பரிசுத்தம் செய்ய

1 பலமான எப்பாவமும் பாழாக்கும் மாநோய்களும்
வலிய கொடும் ரோகமும் மாம்ச சிந்தையோடுமே
பலிபீடத்தில் என்னை பலியாக வைத்தேன்
எலியாவின் ஜெபத்திற்கு இறங்கிய வண்ணமே —வர

2 எந்தன் பாவம் யாவையும் எரிக்கும் வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தியுமே காண்கிலேன்
எந்தன் செயலால் யாதொன்றும் முடியா
இன்றே வானுக்கினி வர வேணுமே —வர

3 குடிகொள் எந்தப்பாவமும் அடியோடே தொலைத்திடும்
தடித்தாள் கொள்ளும் தோஷமும் சாம்பலாகச்செய்திடும்
படிமிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல் போல்
அடியேன் யேசுவுக்காய் ஓடி எங்கும் தொண்டு செய்ய —வர

206

தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் (யோ. 4: 24)

பல்லவி

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

அனுபல்லவி

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதிலுல் சரணம் சரணம்.

சரணங்கள்

1 வெண்மையும் சிவப்பு மானவர்,
உண்மையே உருவாய்க் கொண்டவர்.
என்னையே மீட்டுக் கொண்டவர்,
அன்னையே இதோ சரணம் சரணம் தொழு

2 தலை தங்க மயமானவர்,
தலைமயிர் சுருள் சுருளானவர்.
பதினாயிரம் பேரில் சிறந்தவர்,
பதினாயிரமாம் சரணம் சரணம். தொழு

3 கண்கள் புறாக்கண்கள் போல,
கன்னங்கள் பாத்திகள் போல,
சின்னங்கள் சிறந்ததாலே,
சின்னில்லாத சரணம் சரணம், தொழு

4 கரங்கள் பொன் வளையல்கள் போல,
நிறங்களும் தந்தத்தைப் போல,
கால்களும் கல் தூண்கள் போல,
காண்பதாலே சரணம் சரணம். தொழு

5 சமஸ்த சபையின் சிரசே,
நமஸ்காரம் எங்கள் அரசே,
பிரதான எம் மூலைக்கல்லே,
ஏராளமாம் சரணம் சரணம். தொழு

6 அடியார்களின் அஸ்திபாரம்,
அறிவுக் கெட்டாத விஸ்தாரம்,
கூடி வந்த எம் அலங்காரம்,
கோடா கோடியாம் சரணம் சரணம், தொழு

7 பார்த்திபனே கன தோத்திரம்,
கீர்த்தனம் மங்களம் தோத்திரம்,
வாழ்க, வாழ்க, வாழ்க என்றும்,
அல்லேலூயா ஆமென் ஆமென். தொழு

207

உமது உண்மை பெரிதாயிருக்கிறது, (புலம். 3: 23)

பல்லவி

உமதுண்மை மகா பெரியது
மகா பெரியது மகா பெரியது.

சரணங்கள்

1 தகப்பனைப் போலவே இறங்கிடுகிறீர், (சங். 103: 12)
தாயைப் போலவே தேற்றிடுகிறீர்,
மாயையினின்று காப்பாற்றுகிறீர்,
காப்பாற்றுகிறீர் ஆற்றுகிறீர். உமது

2 கோழி தன் குஞ்சுகளைச் சேர்ப்பது போல், (மத். 23: 37)
ஆழியினின்றெடுத்தே அரவணைத்தீர்,
நாழிகை எல்லாம் வாழி பாடுவேன்,
வாழி பாடுவேன் பாடுவேன். உமது

3 சிங்கக் குட்டிகள் தாழ்ச்சி யடைந்தாலும், (சங். 34: 10)
சிங்கக் கெபியிலே போடப் பட்டாலும்,
பங்க மின்றியே பாதுகாக்கிறீர்,
பாதுகாக்கிறீர் காக்கிறீர். உமது

4 இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், (சங். 23: 4)
தருணங்கள் மாறுய் சம்பவித்தாலும்
சரணங்கள் சாற்றவே வைக்கிறீர்,
பாட வைக்கிறீர் என்னை வைக்கிறீர். உமது

5 வியாதிகள் பலவிதம் பாதித்தாலும், (சங். 91: 6)
உபாதிகள் உள்ளத்தை வாதித்தாலும்,
நாதியா யென்னைக் கைவிடுவதில்லை
கைவிடுவதில்லை விடுவதில்லை. உமது

6 வான பரியந்தமும் எட்டுகிறது, (சங். 36: 5)
வானங்களில் ஸ்தாபித்திருக்கிறது,
ஈனன் நான் அதைக் காண வைக்கிறீர்,
காண வைக்கிறீர் வைக்கிறீர். உமது

7 மலைகள் இவ்வுலகில் விலகினாலும், (எசா. 54: 10)
நிலைவிட்டுப் பர்வதங்கள் பெயர்ந்தாலும்,
விலையில்லா கிருபை விலகுவதில்லை,
விலகுவதில்லை அல்லேலூயா. உமது

208

நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள். (யோ 8 : 24)

பல்லவி

போற்றுவோமே புகழ் சாற்றுவோமே
தேற்றும் நாமமுடைய தேவகுமாரனையே. (யாத். 3: 14)

சரணங்கள்

1 இருக்கிறவராயிருக்கிறேன் என்றவர் —இதைத் (யோ. 8 : 58)
திருக்குள்ள யூதர்களண்டை சொன்னவர்
கருத்தாகள் நிறைந்த பெயர் கொண்டவர் —தம்மை
மறுக்காதவர்களையோ கைவிடாதவர். போற்று

2 ஜீவ அப்பம் நானே வானின்று வந்தேனே —இதை (யோ. 6: 51)
ஆவலாய்ப் புசிப்பவன் பிழைப்பானே
தேவகுமாரனின் மாம்சந்தானே —அவர்
தேகமான சபைக்கடையாளந்தானே. போற்று

3 நானே உலகத்திற்கு ஒளியாயுள்ளேனே—என்று (யோ. 8 : 12)
தானே உரைத்தார் இயேசு ரட்சகனே
பின்பற்றுவோன் இருளில் நடவானே—தேவ
ஜீவ ஒளியை அடைந்திருப்பானே. போற்று

4 நானே வாசல் என்பதும் அவர் சொல் —அவர் (யோ. 10: 9)
தானே நம்முடைய ஆத்தும மேய்ச்சல்
வானே செல்லும் வழியான வாசல்—இது
தானே தொனிக்கப்பட வேண்டிய கூச்சல். போற்று

5 நானே உயிர்த் தெழுதலும் ஜீவனே—மீண்டும் (யோ. 11 : 25)
நானே வழியும் சத்தியமுந்தானே
விசுவாசிப்பவன் என்றும் பிழைப்பானே—இது
விசுவாச மார்க்கத்தார் ஆதாரந்தானே. போற்று

6. நானே மெய்யான திராட்சச்செடியே—நீங்கள் (யோ. 15 : 5)
தானே அதிலிருக்கும் கொடிகளே
நிலத்துள்ளவன் மிகக் கனி கொடுப்பான்—ஆனால்
மலைப்பவனே நெருப்பில் போடப்படுவான். போற்று

7 ஆடுகளே அறிந்த அரும் நல்ல மேய்ப்பன்—பல (யோ. 10:11)
பாடுகள் பட்டு மாண்ட பெரிய மேய்ப்பன்
நாடுவோர்க்காய் வரும் பிரதான மேய்ப்பன்—அல்லேலூயா
பாடுவோர்களின் ஆத்தும மேய்ப்பன். போற்று

209

ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து பாளயத்திற்குப் புறம்பே அவரிடத்திற்குப் போகக்கடவோம். (எபி. 13 : 13.)

பல்லவி

இயேசுவின் நிந்தையைச் [illegible]
வாசலுக்குப் புறம்பே போவோம்,

சரணங்கள்

1 சன்பல்லாத் தொபியா சக்கந்தங்களையும்
துன்புறுத்தும் தீயர் கேள்விகளையும்,
அன்பருடனே இன்பமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக்கடவோம். (எ. 4 : 2, 3)

2 ஸ்தேவான் மேல்விழுந்த கற்களை நினைத்து
சீஷர்கள் அடைந்த சிறைகளைச் சிந்தித்து,
மோசங்களென்றாலும் நேசமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக்கடவோம். (அப். 7 : 58)

3 கள்ளச் சகோதரர் கைவிடுவார்கள்
சொல்லாதவைகளைச் சுமத்திடுவார்கள்,
நல்ல கிறிஸ்தேசுவை மறுதலிப்பார்கள்
புறப்பட்டுப் போகக்கடவோம். (2 கொ. 11: 26)

4 கோலால் கொடுமையாய் அடிக்கப்பட்டாலும்
வாளால் துண்டாக வகுக்கப்பட்டாலும்,
நாளெல்லாம் நரரால் நசுக்கப்பட்டாலும் (ரோ. 8: 35. 39)
புறப்பட்டுப் போகக்கடவோம்.

5 வருத்தங்கள் வகை வகையாகவே வரும்
திருத்தங்கள் சிலரால் பொருத்தமாய்ச்சேரும்,
செருக்கானவர்களால் நெருக்குதல் நேரும் (2 கொரி. 11: 27)
புறப்பட்டுப் போகக்கடவோம்.

6 அக்கினிக்கு நம்மை இரையாக்கினாலும்
விக்கினங்கள் வெகுவாய்ச் சூழ்ந்தாலும்
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்தே
புறப்பட்டுப் போகக்கடவோம். (வெளி. 5: 6)

7 அமர்ந்திருந்து அவர் கர்த்தரென்றறியுங்கள்
நடந்திடும் யுத்தம் நாதனுடையதே.
ஸ்தோத்திர பலியை நேர்த்தியாய்ச் செலுத்தி
அல்லேலூயா பாடக்கடவோம். (2 நா. 26: 17)

---

210 பல்லவி

தேனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ
எவன் பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.

சரணங்கள்

1 எவன் அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணமாட்டாரோ
ஆவியில் கபடமில்லாதவன் பாக்கியவான்

2 நான் அடக்கி வைத்தமட்டும் என் எலும்புகள்
நித்தம் என் கதறுதலினாலே உலர்ந்தது.

3 இரவும் பகலும் என்மேல் உந்தன் கை,
பாரமாயிருந்ததினால் சாரம் போயிற்று

4 என் அக்கிரமத்தை நான் பறைக்காமல்,
என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்

5 கர்த்தருக்கென் மீறுதலை அறிக்கை செய்வேன்,
தேவரீரே என் பாவதோஷத்தை மன்னித்தீர்.

6 இதற்காகச்சகாபங் கிடைக்குங் காலத்தில்,
பக்தியுள்ளவன் உமக்கு விண்ணப்பஞ் செய்வான்.

7 மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும்,
அப்பொழுது அது அவனை அணுகாது.

8 எனக்கு நீர் மறைவிடமாயிருக்கிறீர்.
என்னை விலகிக்காரும் இக்கட்டுக்கு நீர்.

211

1 தோத்திரம் பாடிப்போற்றுவேன்
தோத்திரம் யேசு ராஜனுக்கே
ஆதியுமந்தமு மில்லோனே
அரூபனே உமக்கென்றும் ஸ்தோத்திரம்

பல்லவி

அல்லேலூயா அல்–லேலூயா
பொற்கரனே—ஓமேகாவே

2 பொன்னகர் மன்னன் பூவில் வந்தாரே
புல்லணை மீதிலே ஸ்தோத்திரம்
பட்சமுற்று எந்தன் பாரம் தீர்த்த
பெத்தலே வாசனே ஸ்தோத்திரம்

3 மாயமாம் உலகை மறந்து நானும்
மன்னவா உம்மன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் தாரணியில்
மனுவான அன்புக்காய் ஸ்தோத்திரம்

4 மங்களமே சீயோன் மணாளா
மாறுத பூரண சீராளா
மங்கிடா நித்திய வாசனே
மாசற்ற அன்புக்காய் ஸ்தோத்திரம்

5 அமரர் போற்றும் அழகுள்ளோன்
அரூபியே சொரூபியே ஸ்தோத்திரம்
அளியும் ஆதி அன்பேயே
வழியில் விரைந்து செல்லவே.

212

பல்லவி

ஏழையை மீட்ட ஏசுவே சுவாமி
அடிமை சரண் புகுந்தேன்

அனுபல்லவி

நீசனுமென்னைத் தேடினீரோ
காசினியி லன்பு கூர்ந்து —ஏழையை

1 எம்பவம் போக்க எடுத்தீர் இறைவா
எனக் கோலமதை
என்னதானிதற் கீடு செய்குவேன்
அன்னையே விளம்புவீரே —ஏழையை

2 தூரமாய்க் கிடந்தேன் தொல்லுலகடைந்தே
தூயா உமை மறந்தே
தூக்கினீரென்னை சேற்றினின்றே
தேற்றினீரும் ஆவியாலே —ஏழையை

3 விண்ணை நீர் மறந்தீர் விரோதியா மெனையே
விண்ணை சேர்த்திடவா
வேண்டுதல் கேளும் வேதனே
அருள் தேவனே சகாயனே —ஏழையை

4 பாவத்தின் கூலி மரணமாம் பயத்தை
ஜெயித்தவர் யேசு கோமான்
ஜீவனும் சமாதான மீந்து
தேவனின் சமுகம் சேர்த்தார் —ஏழையை

5 மாயமாம் உலகின் வேஷத்தை வெறுத்தேன்
மன்னு உம்மன்பினுலே
சொன்னீரே மகிமையில் சேர்ப்பதாய்
உன்னதா உம் வாக்கை நம்பி —ஏழையை

213

பல்லவி

வானிலோர் திருநாள் உண்டே
வானிலோர் திருநாள்.

1 வான்முடி மன்னன்தான் வருவாரே அன்றும், அன்றும்
வருவாரே எமக் காறுதலவரே
விரைவோடு செல்லுவோம் ஒரிமைப் பொழுதில்
அரசன் யேசுடனே—ஆ, ஆ. —வானிலோர்

2 வானம் முழங்குமே புவியதிசயிக்குமே அன்றும், அன்றும்
வருவாரே வெகு சேனைகளுடனே
ஆர்ப்பரித்திடுவோம் ஆனந்தமுறுவோம்
ஆகாய மீதிலே—ஆ, ஆ. —வானிலோர்

3 தூதர்கள் தொனியுடன் நாதங்கள் கேட்குமே அன்றும், அன்றும்
துதிப்போம் எங்கள் ஆவல்கள் தீர்ந்திட
தாயனைப் போற்றியே கீதங்கள் பாடுவோம்
நேயனைச் சேருவோம்—ஆ, ஆ. —வானிலோர்

4 முள் முடி நமக்காய் அணிந்தவர் திருமுகம் காண்போம், காண்போம்
காண்போமே நம் நேசரை விரைவில்
நொடிதனில் செல்லுவோம் அவரடி பணிவோம்
அவரையே சேவிப்போம்—ஆ, ஆ. —வானிலோர்

5 ஆனந்தம் முழங்கும் ஆனந்த புரியில் எங்கும், எங்கும்
தலங்கும். அவர் ஜோதியே அங்கும்
அவர் பெயர் ஓங்குமே அவர் கீர்த்தி தங்குமே
அன்பரின் நாவிலே—ஆ, ஆ —வானிலோர்

214

பல்லவி

ஜெகமதில் உதித்த ஜெய ஜோதியே—நார்
சேயர்கள் துதித்திடும் திருவடியே.

அனுபல்லவி

பாரில் பரஞ்சுட நீயே, பாவிகட்காய் பரிவானாய்
அன்பால், எமை, ஆட்கொண்டோனே! அதிரூபசுந்தரனே!—ஜெக

1 பாவயிருள் நீக்கப் பாரினிலே—பரன்
பாவிகள் பாவம் போக்க பலியானாரோ
சாபத்தை முற்றும் தொலைத்திடவே, சக்தியாக உயிர்த்திட்டீரோ
அருபா, சொருபா, அற்புதனே! ஆனந்த பொற்பரனே— ஜெக

2 எந்தனின் நீதியெல்லாம் கந்தையல்லோ—நீர்
எந்தனின் சிறப்பான தாரகமே
அன்பே, ஆனந்த பேரொளியே ஆதியந்தம் இல்லா பரனே
கதியே, நிதியே, கருணாகரா! காத்திடும் புகலிடமே —ஜெக

3 ஏழை என்னில் தாகங்கொண்டதாலே—எழில்
ஏகனே எனக்கு திவ்ய ஆகாரமே
சோகமிஞ்சி வாடுறேனையா, தாகமானேன் இத்தரணிதன்னில்
காசினியில், நேசரைப் போல் காணுவேனோ? கன்னியரின் காதலரே

4 எப்போ உம்மைக் கண்டு மகிழ்ந்திடுவேன்—அண்ணல்
யேசுவே இன்பமான மணாளரே
கன்மலை வெடிப்பில் தங்குமென், உத்தமியே என்றழைக்கும் சத்தம்
கேட்கும் கீதம் ஆ! இன்பமே கூறிடாயோ, அன்பரே? —ஜெக

---

215 பல்லவி

தேவனே என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது,
நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன், என் மகிமையும் பாடும்.

1 வீணையே சுரமண்டலமே, விழியுங்கள் அதிகாலை விழிப்பேன்
கர்த்தாவே ஜனங்களுக்குள்ளே, உம்மையே நான் துதிப்பேன்.

2 கர்த்தாவே ஜனங்களுக்குள்ளே, உம்மையே நான் துதிப்பேன்
ஜாதிகளுக்குள்ளே உம்மைக், கீர்த்தனம் பண்ணிடுவேன்.

3 உம் கிருபை வானங்களுக்கு, மேலாக எட்டுகிறது
சத்திய மேகமண்டலங்கள், பரியந்தம் எட்டுகிறது

4 தேவனே வானங்களுக்கு, மேலாக உயர்ந்திரும்
உம் மகிமை பூமியனைத்தின், மேல் உயர்ந்திருப்பதாக —தேவனே

TA
5:34

கனிந்துரைகள்

வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத். 11: 28.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். எபி. 10: 38.

உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு. ஆமோஸ். 4: 12.

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன். ஏசா. 41: 10.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது. வெளி. 22: 12.